**“சில்பாலோக்க வேலைத்திட்டம்”**

கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உ/த) பரீட்சைப் பெறுபேற்றை அதிகரித்தல் - 2021

# இந்துசமயம்

# தரம்-13



**சுயகற்றலுக்கான கையேடு**

மத்தியமாகாணக் கல்வித் திணைக்களம்
கண்டி

## மாகாணக் கல்விப் பணிப்பாளரின் செய்தி

பிள்ளைகளின் கற்றல் செயற்பாட்டின் வெற்றியானது தொடர்ச்சியானதாக காணப்படவேண்டுமாயின், அவர்கள் சுயகற்றலில் ஈடுபடுவதன் மூலமே சாத்தியமாக அமையும். மாணவர்களின் அடைவு மட்டத்தை மேலும் அதிகரிக்க வேண்டுமாயின் சுயகற்றலில் ஈடுபடுவது அத்தியாவசியமாகும். தம் கற்றல் செயற்பாட்டை முகாமை செய்யும் திறனை வளர்த்துக் கொள்வதற்கு, தனிப்பட்ட உந்துதல் அவசியமாவதுடன் இந்த நவீன உலகின் முன்னுரிமை வழங்க வேண்டிய விடயமும் அதுவே ஆகும்.

கொரோனா வைரசின் தாக்கம் காரணமாக 2019 ஆம் ஆண்டின் இறுதி காலாண்டிலிருந்து உலக மக்களது செயற்பாடுகள் பல்வேறு சவால்களுக்கு உள்ளாகியுள்ளன. எனவே அனைத்து மானிட செயற்பாட்டையும் நவீனமயப்படுத்தப்பட வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகியுள்ளோம். அந்தவகையில் மாணவர்களது கற்றல் செயற்பாட்டையும் நவீனமயப்படுத்தி மாற்றியமைக்க வேண்டியது காலத்தின் தேவையாகும்.

அந்த வகையில் மத்திய மாகாணத்தின் க.பொ.த (உ/த) மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை நவீனமயப்படுத்தி, ஓர் உயர்ந்த அடைவு மட்டத்திற்கு மாணவர்களை இட்டு செல்வதற்காக இந்த கையேட்டுத் தொகுதியானது வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்துடன் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய உங்கள் கல்வி செயற்பாட்டை வடிவமைத்துக் கொள்வதுடன், இச்செயற்பாட்டிற்கு பிள்ளைகளுக்கு துணைப்புரிவதற்கு மாகாணக் கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்களம், வலயக்கல்விக் காரியாலயம், கோட்டக்கல்விக் காரியாலயம் மற்றும் பாடசாலை சமூகம் போன்றோர் எந்த நேரத்திலும் தயார் நிலையிலுள்ளார்கள் என்பதை உங்களுக்கு மிக மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும் உங்களது சுயகற்றல் செயற்பாட்டிற்காக ஆசிரியர் குழாம், ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள் மற்றும் கல்வி அதிகாரிகள் ஆகியோர் இது ஒரு முன்னுரிமைப்படுத்தப்பட வேண்டிய பொறுப்பு என்பதை அறிந்துள்ளதுடன் அதற்காக எந்த நேரத்திலும் உதவுவதற்கு தயாராக உள்ளனர் என்பதையும் அறியத்தருகின்றேன். மேலும் 2021 ஆம் ஆண்டின் க.பொ.த (உ/த) மாணவர்களுக்காக இக்கற்றல் தொகுதியானது வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் தொடர்ந்து வரும் உங்களது சகோதர சகோதரிகளும் பயன்படுத்தி பயன்பெற முடியும்.

இந்த கற்றல் தொகுதியானது, வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய பயன்படுத்தும் போது உங்களது உயர்கல்விக்கு உறுதுணையாக அமையும் என கருதுகின்றேன். மத்திய மாகாணத்தின் அடைவு மட்டத்தை உயர்த்தும் முன்னுரிமை வேலைத்திட்டமான “ சில்பாலோக்க” வேலைத்திட்டத்தின் கீழ் இச் செயற்றிட்டமானது வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் இதற்காக நிதியுதவி வழங்கியதுடன் ஆலோசனை வழிகாட்டல்களையும் வழங்கிய மத்திய மாகாணத்தின் பிரதான செயலாளர் மற்றும் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், ஆகியோருக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த கற்றல் தொகுதியை வடிவமைப்பதற்கு பல்வேறு வகைகளிலும் உறுதுணையாக இருந்த அனைவருக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன். இறுதியாக மத்திய மாகாணக் கல்வித் திணைக்களத்தின் சகல உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

உங்களது எதிர்காலத்தின் கனவு நனவாக எனது நல்லாசிகள்.

E.P.T.K. ஏக்கநாயக்க,
மாகாணக் கல்விப்பணிப்பாளர்,
மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்,
கண்டி.

## மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரின் செய்தி

இலங்கையில் Covid 19 இன் பரவல் ஆரம்பித்த உடன் பிள்ளைகளை இப்பாதிப்பிலிருந்து பாதுகாக்கும் முகமாக 2020 March 12ம் திகதியளவில் மூடப்பட்ட பாடசாலைகள் இன்று வரை தமது வழமையான செயற்பாடுகளுக்கு திரும்ப முடியாத நிலையிலேயே உள்ளன.

இந்நிலையை ஓரளவேனும் ஈடு செய்யும் முகமாக மத்திய மாகாணக் கல்வி திணைக்களமானது இணையம், தொலைக்காட்சி, வானொலி, தொலைபேசி போன்ற டிஜிட்டல் தளங்களுடாக கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள முயற்சி செய்து வருகிறது. எனினும் இந்த டிஜிட்டல் வளங்களை அணுகும் சந்தர்ப்பங்கள் அனைத்து மாணவர்களுக்கும் சீராக அல்லது ஒரே மாதிரியாக அமையாமலிருப்பது எமக்கு மிகப் பெரிய சவாலாக உள்ளது.

எனவே 2021ல் உயர்தர பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்களின் நன்மை கருதி இக்கற்றல் துணையேடு சகல பாடங்களுக்குமாக தயாரிக்கப்பட்டு மென் பிரதிகளாக பாடசாலைகளுக்கு முதற்கட்டமாக வழங்கப்படுகிறது. ஆர்வம், விடாமுயற்சி, இலக்கு நோக்கிய பயணம் என்பன நமது சமூக எழுச்சிக்கான அடிப்படையான கல்வி சார் நடவடிக்கைகளாக கருதி இன்று நாம் எதிர் கொள்ளும் சவால்களை வெற்றிகரமாக முகம் கொடுக்க தயாராக வேண்டும்.

எனவே எமது இந்த முயற்சியானது பரீட்சைக்கு உங்களை தயார் செய்து கொள்வதிலும் வெற்றிபெற செய்வதிலும் உறுதுணையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. தவறவிடப்பட்ட கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை சுயகற்றலின் வாயிலாக அடையும் வகையில் இக் கையேடு வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். மாணவச் செல்வங்கள் இக் கையேட்டினை முறையாக பயன்படுத்தி பரீட்சையில் வெற்றிபெற வாழ்த்துகின்றேன்.

இவற்றை தயாரித்து வடிவமைத்து தந்து உதவிய ஆசிரியர்கள், வளவாளர்கள் அனைவருக்கும் மிகப்பெரிய நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏ. ஆர். சத்தியேந்திரா,
மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர்,
மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்,
கண்டி.

**கண்காணிப்பும் மேற்பார்வையும்**

***E.P.T.K ஏக்கநாயக்க***
மாகாணக் கல்விப் பணிப்பாளர்
மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்

***A.R சத்தியேந்திரா***
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்
மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்

**A.L.M.சாருடீன்**
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்
மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்

***வழிகாட்டல்***

***P. விக்னேஸ்வரன்***
உதவிக் கல்விப் பணிப்பாளர்
மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்

***நூலாக்கக் குழு***
***M.கிருஷ்ணபிள்ளை***
உதவிக் கல்விப் பணிப்பாளர் -(இந்துசமயம்)
வலயக்கல்விப்பணிமனை-கம்பளை

***K.ஜெயறஞ்சி***
ஆசிரிய ஆலோசகர் -(இந்துசமயம்)
வலயக்கல்விப்பணிமனை-கம்பளை

***M.மாலதி***
ஆசிரியை
இந்துதேசிய கல்லூரி-ரஜவெல

பொருளடக்கம்


| அலகு | பக்கம் |
|---|---|
| 1. இந்துதரிசனங்கள் | 06 |
| 2. பிரம்மசூத்திரம் | 13 |
| 3. அத்வைதம் | 14 |
| 4. விசிட்டாத்வைதம் | 16 |
| 5. துவைத வேதாந்தம் | 18 |
| 6. சைவசித்தாந்தம் | 21 |
| 7. மெய்கண்ட சந்தானம் | 22 |
| 8. மெய்கண்ட தேவர் | 23 |
| 9. சிவஞானபோதம் | 26 |
| 10. உமாபதி சிவாச்சாரியார் | 27 |
| 11. சைவசித்தாந்த மெய்ப்பொருள் கோட்பாடுகள் | 28 |
| 12. தீட்சை | 32 |
| 13. பஞ்சாட்சர மந்திரம் | 36 |
| 14. திருநீறு | 37 |
| 15. உருத்திராக்கம் | 38 |
| 16. சைவநாற்பாதங்கள் | 39 |
| 17. குருலிங்க சங்கம வழிபாடு | 42 |
| 18. அத்வைதம்-சைவசித்தாந்தம்-ஒப்பீடு | 44 |
| 19. ஆகமங்கள் | 46 |
| 20. ஆகமம் சாரா வழிபாட்டு முறைகள் | 49 |
| 21. பண்டிகைகள் | 58 |
| 22. இந்துசமய விரதங்கள் | 61 |
| 23. இந்து அறவியல் | 72 |
| 24. புருடார்த்தங்கள் | 74 |
| 25. ஆச்சிரம தர்மங்கள் | 78 |
| 26. தமிழ்நீதி நூல்கள் | 81 |
| 27. மூவகை யோகங்கள் | 84 |
| 28. இந்து அறிவியல் | 90 |

# 01
# இந்து தரிசனங்கள்

**01. அறுவகைத் தரிசனங்களும் எவை?**

சாங்கியம், யோகம், நியாயம், வைசேடிகம், பூர்வமீமாம்சை, வேதாந்தம் (உத்தரமீமாம்சை)

**02. இந்து தத்துவஞான மரபில் சாங்கியம் கூறும் "இருமை வாதம்" என்பதனை விளக்குக.**

- காலத்தால் முற்பட்ட சிந்தனை மரபு
- கபிலர் என்பவரால் உருவாக்கப்பட்டது – சாங்கிய சூத்திமம்
- யோக தரிசனத்துடன் தொடர்புடையது
- சாங்கியம் - பகுத்தறிதல், எண்ணுதல், பூரண அறிவு, உயர் அறிவு
- இயற்கையும் உலகமும் எதற்காகப் படைக்கப்பட்டன என்பதை ஆய்வு செய்யும் தத்துவம்
- சாங்கிய தரிசனம் இரண்டு பொருள்களை உண்மை என்பதை வலியுறுத்துகிறது.
- அறிவுடைய மாற்றமடையாத பொருள் - புருடன் (மனிதன்)
  அறிவற்ற, மாற்றமுறும் பொருள் - பிரகிருதி (இயற்கை)
  புருட தத்துவம், பிரகிருதி தத்துவம்

- **புருட தத்துவம்**
  - புருடனின் இயல்புகள் - அறிவுடையது / நித்தியமானது / இயக்கமற்றது / போக்தா அன்றிக் கருத்தா அன்று
  - புருடன் என்பது போக்தாவே (போகங்களை அனுபவிப்பது)
  - புருடனுக்குப் போகத்தைப் படைக்கும் சக்தி பிரகிருதி. அதனால் புருடன் பிரகிருதியல் தளைக்கப்பட்டுள்ளது.
  - ஆன்ம உண்மையினை காட்சி, அனுமானம் ஆகிய வழிகளில் அறிதல்
  - பிரகிருதி படைப்பவற்றை அனுபவிக்கச் சக்தி தேவை – அச்சக்தியே புருடன்
  - புருடனே வீடுபேறு அடையும். பிரகிருதியின் பிணைப்பிலிருந்து விடுதலை பெறுதல் முத்தியாகும்.
  - புருடனை (ஆன்மாவை) ஆன்மீக விடுதலையை நோக்கியதாகக் கூறியதாலேயே இந்து தரிசனங்களில் ஒன்றாக முன்வைக்கப்பட்டுள்ளது.

- **பிரகிருதித்தத்துவம்**
  - அறிவற்றது, சடப்பொருள், நித்தியமானது, இயக்கமற்றது. புருட சந்நிதி மத்திரத்தில் இயங்குவது.
  - மூலப்பொருள் ஒன்று / இன்ப, துன்பங்களால் தீண்டப் படாதது
  - பிரகிருதி புருடனுக்காகத் தனு, கரண, புவன, போகமாக மாற்றமடைகிறது. பிரகிருதி தாமாகவே விரிவடையும்.
  - கடவுளை மறுத்த சாங்கியம் ஆன்மாவை மேன்மைப்படுத்தி கூறுகிறது.
  - மனிதனைச் சம்சாரச் சுழற்சிக்குட்படுத்தி விடுதலைக்குத் தடையாக விளங்குவது பிரகிருதி
  - பிரகிருதி சதா இயங்கிக் கொண்டிருக்கும். பிரகிருதிக்கு முடிவு கிடையாது.
  - ராஜஸ், தாமச, சாத்வீகம் என்னும் முக்குணங்களால் ஆனது
  - பிரகிருதி இயக்கம் - முக்குணங்களின் சேர்க்கை பரிணாமம், முக்குணங்கள் தனித்தனியாகப் பிரிதல் - ஒடுக்கம்
  - புருடன் பிரகிருதியின் பிடியிலிரந்து விடுபடுதல் சைவல்ய மோட்சம்

- காரண காரிய அடிப்படையில் பிரகிருதி – காரணம் உலகு – காரியம் புருடன் காரணமும் இல்லை காரியமும் இல்லை
- சற்காரியக் கொள்கை என்றும் கூறுவர். (பிரகிருதியின் உற்பத்தி, ஒடுக்கம்)
- சாங்கியம் இருபத்திநான்கு பிரகிருதி தத்துவங்களையும் இருபத்தைந்தாவதாகப் புருட தத்துவத்தையும் கொண்டுள்ளது.
- சாங்கியம் பிரகிருதி, புருடன் ஆகிய இரண்டு மூலங்களை அடிப்படையாகக் கொண்டதாலேயே இருமை வாதம் எனப்படுகிறது.

## 02
## யோகம்

அறுவகைத் தரிசனங்களில் ''யோகம்'' பற்றிய கருத்துக்களைக் கூறுக.

- யோக தத்துவம் → பிரகிருதியிடமிருந்து பிரிதல் / இறைவனிடம் இணைதல்

- யோக தத்துவத்தின் பிரமாணநூல் - பதஞ்சலி முனிவரின் யோக சூத்திரம்
- யோக தத்துவம் பற்றிய கருத்துக்கள் பகவத் கீதையிலும் விளக்கப்பட்டுள்ளன.
- புருடன், பிரகிருதி தத்தவத்தை ஏற்றுக் கொண்டதால் சாங்கிய யோகம் என அழைக்கப்படுகிறது.
- சாங்கியம் ஏற்றுக் கொள்ளாத இறைக் கோட்பாட்டை ஏற்றுக் கொள்கிறது. - ஈஸ்வரசாங்கியம், ஷேஷ்வரசாங்கியம் என்னும் சிறப்புப் பெயர்களைப் பெறுகிறது.
- யோக சூத்திரம் - 195 பாடல்கள் - நான்கு அத்தியாயங்கள் நான்கு பிரதான விடயங்கள் சமாதி, சாதனம், விபூதி, கைவல்யம்
- புருடனுக்கு ஏற்பட்டுள்ள அறியாமை பிரகிருதித் தொடர்பால் ஏற்பட்டதெனக் குறிப்பிடுகிறது – மாயைத் தோற்றம்.
- புருட – பிரகிருதி உறவிலிருந்து விலகி தனது சுயாதீன நிலையை அடைவதே கைவல்யநிலை
- யோகத்தின் மூலமே கைவல்ய நிலையை அடைய முடியும்.
- கைவல்ய நிலையே யோகத்தின் மிகச்சிறந்த சாராம்சம் ஆகும்.
- கைவல்ய நிலை – கேவலநிலை ஆகும். (தனித்திருத்தல்) புருடன் காம, குரோத, மோகம் எனும் உணர்வுகளிலிருந்து விடுபட்டு தனித்திருக்கும் நிலை
- அட்டாங்க யோகப் பயிற்சிகள் (மன இயக்கங்களைத் தடுத்தல்)

  இயமம் - தீய செயல்களைத் தவிர்த்தல்
  நியமம் - ஒழுக்க விதிகளைக் கடைப்பிடித்தல்
  ஆசனம் - அமரும் நிலை – தயார்ப்படுத்தல்
  பிராணாயாமம் - மூச்சுப்பயிற்சி
  பிரத்தியாகாரம் - புலனடக்கம்
  தாரணை - மன அடக்கம் (குறித்த விடயத்தில் மனதைப்பதித்தல்)
  தியானம் -
  சமாதி -
  சமாதி நிலையே கைவல்ய நிலை ஆகும்.

## 03

## அறுவகைத் தரிசனங்களில் அடங்கும் "வைசேடிகம்" பற்றிய கருத்துக்களைத் தொகுத்துக் தருக.

- சாங்கியத்திற்கும் நியாயத்திற்கும் இடையில் தோற்றம் பெற்ற தரிசனக் கொள்கை
- பௌத்தத்திற்கும் சமணத்திற்கும் முந்திய கொள்கை
- பன்மையிலான மெய்ம்மை வாதம்
- பிரபஞ்சத்திலுள்ள ஆன்மாக்கள் பல்லியல்பான தனித்தன்மை உடையதெனக் கூறுகிறது.
- வைசேடிய சூத்திரத்தை இயற்றியவர் - கணாதர் ஆவார்
- வைசேடிய சூத்திரத்தின் உரைநூல் - பதார்த்த தர்ம சங்கிரகம் - இயற்றியவர் - பிரசத்த பாதர்
- பிரபஞ்சம் ஏழுவகைப் பதார்த்தங்களால் ஆனது
  ஆரம்பத்தில் அறுவகைப்பதார்த்தங்கள் அபாவம் இறுதியாக இணைக்கப்பட்டது.

- வைசேடிகர் கூறும் ஏழுவகைப் பதார்த்தங்கள்
  1. திரவியம்
  2. குணம்
  3. தர்மம்
  4. சாமானியம்
  5. விசேடம்
  6. சமவாயம்
  7. அபாவம்

**1. திரவியம் (பொருள்)**

- கர்மம், பண்பு என்ற இரண்டையம் உள்ளடக்கியது
- பொருட்களின் தோற்றத்துக்குரிய சடக்காரணம்
- திரவியமின்றி பண்பை அழிக்கவோ படைக்கவோ முடியாது.
- சடப்பொருள் ஆன்மப்பொருள் இரண்டையும் உள்ளடக்கிய திரவியம் 9 வகைப்படும்.
  (1) நிலம் (2) நீர் (3) நெருப்பு (4) காற்று
  (5) ஆகாயம் (6) காலம் (7) வெளி (8) ஆத்மன் (9) மனம்

- ஐம்புலன்களால் உணரக் கூடியது
- காலம், வெளி, ஆகாயத்தைப் போல ஏகமாயு நித்தியமாகவும் வியாபித்துள்ளது. பிரிக்க முடியாததும் எல்லையற்றதுமாகும்.
  1. பிருதவி 2. ஆப்பு 3. தேறஸ் 4. வாயு
  5. ஈதர் 6. 7. 9.
  9. மனம்

**2. குணம் (இயல்பு)**

- சடப்பொருளுக்குரிய பண்பு, உளப்பண்பு என இருவகைப்படும்
- நாற்றம் நிலத்தின் குணம்
- சுவை நீரின் குணம்

- நிறம் நெருப்பின் குணம்
- ஸ்பரிசம் - வாயுவினது குணம்
- அறிகை, இன்பம், துன்பம், விருப்பு, வெறுப்பு உளத்தின் குணங்களாகும்.

**3. கர்மம் (செயல்)**

- திரவியத்தில் உள்ளடங்கிய குணம்
- இயக்கவியல் பண்பையுடையது
- 5 வகையாகும்.
  (1) மேல் நோக்கிய இயக்கம்
  (2) கீழ் நோக்கிய இயக்கம்
  (3) எதிர் இயக்கம்
  (4) விரிவு
  (5) பெயர்ச்சி

**4. சாமானியம் (பொதுத்தன்மை)**

- ஒரு வகுப்பின் சகல அங்கதத்வர்களுக்குரிய பொதுப்பண்பு
- மானிடம் உயிர்களின் பொதுப்பண்பு
- தனியானதும் பொறுமையும் தற்சார்பற்ற மெய்ம்மைகளாகும். (கணாதர்)

**5. விசேடம் (சிறப்புத்தன்மை)**

"ஒரு பொருள் தானாக இருக்கும் அதேவேளை அது பிறிதொன்றாக இல்லாதிருப்பது விசேடம்"

சாமானியம் தொடுநிலையிலும் விசேடம் பிரி நிலையிலும் பெறப்படுகின்ற ஒன்றாகும்.

**6. சமவாயம் (இணைப்புத்தன்மை)**

- பிரிக்க முடியாத தொடர்பு
- காரணத்திற்கும் காரியத்துக்குமிடையிலான தொடர்பு

**7. அபாவம்**

இன்மையைச் சுட்டுவது

- **அனுவாதம்**
  - அசத்காரியத்தை ஏற்றுக்கொள்கிறது – காரியம் காரணத்தில் எலவே உள்ளடங்கிருப்பதில்லை
  - காரியம் - ஆரம்பவாதம்
  - பரமாணு – காரணவாதம்
  - பிரிக்க முடியாத அலகு – பரமாணு
    தோற்றமும் அழிவும் - பரமாணுக்களின் சேர்க்கையும் பிரிவுமாகும்
  - நிலம், நீர், நெருப்பு, வாயு என அணுக்கள் 4 வகைப்படும்
  - ஆகாயம் அணுவல்ல, அணுக்களின் சேர்க்கைக்கு இடமளிப்பது
  - வைசேடிக அணுவாதம் சடப்பொருளினாலானதல்ல, ஆன்மா, இறைவன், கர்மக்கோட்பாடு என்பவற்றை ஏற்றுக் கொள்வது.

- **இறைவன் (உதயணர் வாதம்)**
  - இறைவன் எங்குமுள்ளவன்
  - பூரணமுடையவன்

- ➢ உள்ளார்ந்தவர்
- ➢ உலகிற்கான கருவிக்காரணம்
- ➢ ஆன்மா இறைவனால் படைக்கப்பட்டதல்ல

- **பந்தமும் விடுதலையும்**
  - ➢ அறியாமை – பந்தம்
  - ➢ அறிவு – விடுதலை
  - ➢ அறியாமை காரணமாக ஏற்படும் ஆன்மாவின் செயல்கள் வேதத்திற்கு
    ஏற்புடையதாயின் - நற்செயல்கள்
    தடை செய்யப்பட்டதாயின் - புறக்கணிக்கத்தக்கது
  - ➢ ஆன்மாவின் செய்வினைகள் - பலாபலன்கள் (கர்மவிதிக் கோட்பாடு)
  - ➢ பந்தங்களிலிருந்து விடுதலை பெற அறிவு உதவுகிறது.
  - ➢ விடுதலை – துன்பங்களிலிருந்து நீங்கிய நிலை
  - ➢ விடுதலை பெற்ற ஆன்மா செயலற்றிருக்கும் தனித்தன்மை விசேட இயல்பு இருக்கும்.

## 04

## நியாய தரிசனம்

- கௌதமர் என்பவரால் ஸ்தாபிக்கப்பட்டது. இவர் அக்கபாதர் எனவும் அழைக்கப்படுகிறார்.
- கௌதமரின் நியாய சூத்திரம்
  நியாயித்தல், தர்க்க சாஸ்திரம், பிரமான சாஸ்திரம், ஹேது வித்யா வாத வித்யா, அன்விக்ஷி, விமரிசனபரபாக்கு என அழைக்கப்படும்.
- நியாய பாடியம் என்னும் உரையை வாத்சாயனர் எழுதியுள்ளார்.
- நியாய பாடியத்திற்கு உத்யோதகரா வார்த்திகை என்னும் பொழிப்புரையை எழுதியுள்ளார்.
- உதயணரின் நியாய குசுமாஞ்சரி / ஜெயந்தரின் நியாய மஞ்சரி என்பன நியாய தரிசன நூல்களாகும்.
- நவ நியாயக் கொள்கை – கனேசர் தத்வே சிந்தாமணி

**01. நியாய தரிசனம் பற்றிய கருத்துக்களைத் தருக.**

- பன்மை வாத நிலைப்பாட்டையும் அணுவாத நிலைப்பாட்டையும் கொண்டது.
- தர்க்கம், அறிவாராய்ச்சி விருத்தி
- உலக வாழ்க்கை துயரம் மிக்கது, துன்ப நீக்கமே மேலான இலக்கு
- மெய்ம்மை பற்றிய அறியாமையே ஆன்மாவின் பந்தத்திற்குக் காரணம். மெய்ம்மை பற்றி அறிவினால் பந்தம் நீங்கும்.

- **காட்சி**
  லௌகீகக் காட்சி / அலௌகீகக்காட்சி என இரண்டு வகைப்படும்

- **லௌகீகக்காட்சி**
  புலன்கள், பொருளுடன் கொள்ளும் சாதாரண தொடர்பால் ஏற்படுவது இதனை மானதக்காட்சி (அகக்காட்சி), பௌதிகக்காட்சி என இருவகைப்படும்.
  - ➢ மானதக்காட்சி - இன்பதுன்ப உணர்வுகள் / விருப்பு வெறுப்பு
  - ➢ பௌதீகக்காட்சி – புறப்பொருட்கள் பற்றிய அறிவு

- **அலௌவீகக்காட்சி**
  சாமானிய இலக்கணம் பொருந்தியவை ஞான இலக்கணம் பொருந்தியவை யோக இலக்கணம் பொருந்தியவை

- **நிறைகள் பற்றிய அறிவு**
  பக்கம் (பிதிஞ்ஞை) - பக்கதருமம்
  திட்டஸ்கதம் - எங்கு புகையுண்டோ அங்கு நெருப்பு உண்டு (ஆக்களை)
  உபநயம் - இம்மலை புகையுடையது
  நிசமனம் - நெருப்புடைமை

- **காரணக்கோட்பாடு**
  காரணத்திற்கும் காரியத்துக்கும் இடையிலான தவிர்க்க முடியாத தொடர்பு அசத்காரியவாதம் / காரியம் காரணத்தில் உள்ளடங்கவில்லை.

- **ஆன்மா**
  - ஆன்மாவே அறிபவன், போக்தா, ஒவ்வொரு ஆன்மாவும் பகுதிகளற்றது.
  - கர்மக் கோட்பாடு காரணவிதிப்படி இயங்குகிறது

- **பந்தம்**
  - அறியாமையாலும் கர்மாவாலும் விளைவது.
  - கர்மா தொலைவதால் விடுதலை கிடைக்கும்.

- **இறைவன் உதயணரின் இறையிருப்புப் பற்றிய வாதங்கள்**
  - அணுக்களின் இயக்கத்திற்கு காரணம் இறைவன்
  - உலகக் காரியம் - இறைவன் காரணம்
  - உலகம் நிலைப்பதற்கும் அழிவதற்கும் இறைவன் காரணம்
  - பொருள் சுட்டும் சொல் இறைவனின் வாக்கு
  - வேதவாக்குகள் இறைவாக்காகும்.
  - ஒழுக்கவிதிகளை உருவாக்கி நடைமுறைப்படுத்துபவர் இறைவன்
  - அணுக்களின் பிரிவும் சேர்க்கையும் இறைவனால் ஆகும்.
  - எமது செயல்களுக்கான பலாபலன்களைத் தருபவர் இறைவன்

## 05
## பூர்வமீமாம்சை

- மீமாம்சை என்ற சொல் வேதக்கிரியைகளை விளக்குவதற்கே ஆரம்பத்தில் பயன்பட்டன / விமர்சன ரீதியான ஆய்வு
- வேதங்களால் விதிக்கப்பட்டதை எவ்வாறு விளக்குதல் எனும் விடயங்கள்
- மீமாம்சை வேதாந்ததுடன் இணைக்கப்படுகிறது.
- உத்தர மீமாம்சை வேதாந்தத்தைச் சுட்டும்.
- கர்ம காண்டத்தை விளக்குவது மீமாம்சை ஞான காண்டத்தை விளக்குவது வேதாந்தம்
- மீமாம்சை சூத்திரம் - ஆக்கியோன் ஜைமினி
  உரைநூல் - சப்ரபாடியம் - சப்ரசுவாமி
  மீண்டும் உரை எழுதியவர்கள் - பிரபாகரர், குமாரிலபட்டர்

**01. அறிவுக்கொள்கை பற்றி பிரபாகரர் குறிப்பிடுவது யாது?**

சரியாகப் புரிந்து கொள்ளப்பட்டதே வலிதான அறிவு ஞாபகம் ஏற்கனவே உள்ள பதிவுகளிலிருந்து பெறப்படுவதால் அது வலிதான அறிவாகமாட்டாது.

**02. வலிதான அறிவு பற்றி குமாரிலர் குறிப்பிடுவது யாது?**

- வலிதான அறிவில் காரண தோசம் இருத்தலாகாது
- முரண்பாடுகள் அற்றதாக இருத்தல் வேண்டும்
- புதுமைத் தன்மை கொண்டதாக இருத்தல் வேண்டும்
- யுதார்த்தத்தினை மெய்யாகப் பிரதிபலிக்க வேண்டும்.

**03. ஜைமினி கூறும் பிரமாணங்கள் எவை?**

காட்சி அனுமானம் உரை (ஆப்தவாக்கியம்)
பிரபாகர் - உவமானம், அர்த்தாபத்தி என்பவற்றைச் சேர்க்கிறார்
குமாரிலர் - அனுலப்தி (இன்மை பற்றிய அறிவு)

**04. அறிவின் இருவகைகளும் எவை?**

1. நேரடி அறிவு – காட்சியால் பெறப்படுவது
2. வழிப்பேற்று அறிவு – ஏனைய பிரமாணங்களால் பெறப்படுவது

**05. உவமானம் என்பது யாது?**

தெரிந்ததிலிருந்து தெரியாததை அனுமானிப்பதற்கு உதவும்

**06. உரையளவையின் இருவகைகளும் எவை?**

1. ஆப்த வாக்கியம் - ஏற்புடைமை கூறுபவரின் தகுதியில் தங்கியிருக்கிறது
2. வேதவாக்கியம் - உண்மை அறிவு

**07. அர்த்தாபாதி என்பதை விளக்குக.**

தேவதத்தன் படுத்திருக்கிறான் எனவே அவன் இரவில் உண்ண வேண்டும் என்ற அறிவு அர்த்தபாதி மூலம் பெறப்படும் அறிவு ஆகும்.

**08. அனுலப்தி எனப்படுவது யாது?**

இன்மை பற்றிய அறிவு

**09. தருமம் எனப்படுவது யாது?**

கட்டளை என்றும் அதன்படி மனிதன் செயற்படுதல் வேண்டும். (நாளாந்த கடப்பாடு / விசேட கடப்பாடு)

**10. பிரசித்தம் என்பதில் அடங்குவன எவை?**

- தடைசெய்யப்பட்ட செயல்கள், பாவம் - நரகம் கிட்டும்
- தருமம் செய்தல் சுவர்க்கத்தை அடையும் மாற்றம்
- வேதங்கள் இறைவனின் இருப்புக்குச் சான்று பகர்கின்றன
- பரமாணு, காலம், வெளி, மணம் போன்ற கருத்துக்களுக்கு காரணம் இறைவன்
- வினைகளுக்கேற்ப பலாபலன்களை அடைகிறோம். அதனைத் தடுப்பதற்கு உள்ள சக்தியே இறைவன்

## 06
## வேதாந்தம்

- இந்திய மெய்யியல் சிந்தனை மரபினை வைதிக தத்துவங்கள் அவைதிக தத்துவங்கள் என இரு வகைப்படுத்துவர்.
- வேதங்களைப் பிரமாணங்களாக ஏற்றுக்கொண்டவை வைதிக தத்துவங்கள் ஆகும். கற்றுக் கொள்ளாதவை அவைதிக தத்துவங்கள்
- உபநிடதங்கள் வேதத்தின் அந்தமாக அமைந்து மெய்யியற் சிந்தனைகளின் உள்ளடக்கமாக அமைவதால் வேதாந்தம் என்ற பெயரும் உண்டு.
- உபநிடதங்களும் உபநிடதங்களின் விளக்கமாக எழுந்த பிரம சூத்திரமும் வேதாந்தக் கோட்பாடுகள் தோற்றம் பெறக் காரணமாய் அமைந்தன.
- பிரம சூத்திரத்தக்கு சங்கரர், இராமானுஜர், மத்துவர் நீலகண்ட சிவாசாரியார் ஆகியோர் உரை எழுதியுள்ளனர்.
  சங்கரர் - மகா பாஷ்யம்
  இராமானுஜர் - ஸ்ரீபாஷ்யம்
  மத்துவர் - மத்துவபாஷ்யம்
- உபநிடதங்களை முக்கிய பிரமாணமாகக் கொண்டு தோன்றிய கோட்பாடுகள் வேதாந்தம் என்ற பெயரினாலேயே சுட்டப் பெறுகின்றன.
- மேலதிக அறவுக்காகக் கற்றுக் கொள்ளுங்கள்

## 07
## பிரம்ம சூத்திரம்

- ‘‘பிரஸ்தான திரயங்கள்’’ பிரதானமான மூன்று நூல்கள் ஆகும்.
- பிரஸ்தான திரயங்கள் எனப்படுவது உபநிடதங்கள், பிரம்மசூத்திரம் பகவத்கீதை ஆகியன ஆகும்.
- பிரம்மசூத்திரம் பாதராயணர் என்பவரால் இயற்றப்பட்டது.
- பிரம்மசூத்திரம் வேதாந்த சூத்திரம், சாரீரக சூத்திரம், உத்தரமீமாம்ச சூத்திரம் என அழைக்கப்படுகிறது.
- வேதாந்தக் கோட்பாடுகளின் தோற்றத்துக்கு அடிப்படையாக அமைந்தது.

**01. பிரமசூத்திரத்தின் தோற்றத்துக்கான பின்னணியைக் குறிப்பிடுக.**

- உபநிடதக் கருத்துக்கள் ஒரே தன்மையதாய் அமையவில்லை
  (ஒரு காலத்திலோ, ஒரு இடத்திலோ ஒரு அறிஞராலோ இயற்றப்படாததால்)
- குரு – சீடர்களுக்கிடையே நடந்த உரையாடல்களின் தொகுப்பு உபநிடதங்கள் என்பதால் நேர்மாறான, முரண்பாடான கருத்துக்கள் காணப்பட்டது. இதனால் உபநிடதங்களை எளிதில் புரிந்து கொள்ள முடியவில்லை.

- உபநிடதங்களில் காணப்படும் முரண்பாடுகளை நீக்கி ஒருமைப்பாட்டைக் கண்டறிந்து தெளிவை உருவாக்க எழுந்தது
- உபநிடதக் கருத்துக்களை ஆராய்ந்து தொகுக்கப்பட்ட கருத்துக்களை உள்ளடக்கியது பிரமசூத்திரம் ஆகும்.

**02. பிரமசூத்திரத்தின் நூல் அமைப்பினைக் குறிப்பிடுக.**

- 545 சூத்திரங்கள்
- 4 அத்தியாயங்கள் - சமன்வயம், அவிரோதம், சாதனம், பலம்

**03. பிரமசூத்திரம் கூறும் பொருள் மரபைக் கூறுக.**

- முதல் அத்தியாயம் - சமன்வயம் - 138 சூத்திரங்கள்
  பிரபஞ்சத்தின் தோற்றம் - முடிவு தொடர்பான வினாக்களுக்கு விடைகள் உள்ளன.
- இரண்டாம் அத்தியாயம் - அவிரோதம் - 150 சூத்திரங்கள்
  பிரபஞ்சத்தின் இருப்புக்கு பிரமமே காரணம் என்பதோடு முரண்படுகின்ற பிறதத்துவக் கருத்துக்களை மறுத்துரைப்பதாக அமைகிறது
- மூன்றாம் அத்தியாயம் - சாதனம் - 182 சூத்திரங்கள்
  வாழ்வின் தன்மை அதன் குறைபாடுகள், உலக வாழ்வில் துன்பங்களிலிருந்து விடுபட்டு பிரமஞானத்தை அடைவதற்கான வழிவகைகள் கூறப்படுகின்றன.
- நான்காம் அத்தியாயம் - பலம் - 75 சூத்திரங்கள்
  இறப்பு, மறுமை, பிரமஞானத்தின் பயன்கள் குறிப்பிடப்படுகின்றன.

**04. பிரம்ம சூத்திரத்தின் சிறப்பினைக் குறிப்பிடுக.**

- ஆதிசங்கரர், இராமானுஜர், மத்துவர், பாஸ்கரர், ஸ்ரீகண்டர், நிம்பாக்கர், ஸ்ரீபதி, வல்லபர், சுகர், பலதேவர், டாக்டர் இராதாகிருஷ்ணன் ஆகியோரால் உரை செய்யப்பட்ட சிறப்புக்குரியது.
- ஆன்ம ஈடேற்றத்துக்கு வழிகாட்டுதல்
- தத்துவங்களைத் தர்க்கரீதியாக வெளிப்படுத்துவதற்கு வழிகாட்டி
- தத்துவ ஆராய்ச்சியை உன்னத நிலைமைக்குக் கொண்டு வந்தமை
- தத்துவ சிந்தனைகளின் வற்றாத ஊற்று

## 08
## அத்வைதம்

- **அத்வைதம்**

| | |
|---|---|
| அன்மை | (சாதிருஷியம்) |
| இன்மை | (சுபாவம்) |
| மறுதலை | (விரோதம்) |
| சிறுமை | (அற்பதையம்) |
| இன்மை | (சுபாவம்) |
| வேற்றுமை | (பேதம்) |

போறையின்மை (அப்பிரசங்கியம்) எனப் பொருள் கொள்வர்

- பிரமம் ஒன்றெ உண்மைப் பொருள் எனச் சங்கரர் நிறுவும் வேதாந்தம் அத்வைதம் ஆகும்.
- சங்கரர் கி.பி 8 ஆம் நூற்றாண்டில் (கி.பி 788 – கி.பி 829) கேரளத்தில் காலடி எனும் கிராமத்தில் ஆரியாம்பாள், ஆதிகேசவர் ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார்.
- இவரது ஆசிரியர் கோவிந்தர் கௌடபாதர்
- வேத இலக்கியங்களில் காணப்படும் ''ஏகம் சத்'' எனும் ஒருமை வாத சிந்தனையை மேலும் வலியுறுத்தியவர்.
- சங்கரர் பிரமசூத்திரத்திற்கு உரை எழுதியவராவார்.
- உபநிடதம், பிரமசூத்திரம், பகவத்கீதை என்பவற்றிலுள்ள அத்வைத சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்டு அத்வைதக் கோட்பாட்டை முறைமைப்படுத்தியவர். அத்வைத ஸ்தாபகர்

**A. சங்கரர் அற்புதங்கள்**

- தங்க நெல்லிக்கனி மழைபொழியச் செய்தமை.
- பூர்ணா நதியைத் திசைமாறி ஓடச் செய்தமை.
- தாய்க்கு விஷ்ணுதரிசனம் கிடைக்கச் செய்தமை.
- சீடர்களுக்காக வெந்நீரூற்றை உண்டாக்கியமை.
- தானே நெருப்பை உண்டாக்கித் தாயின் தகனக் கிரியைகளைச் செய்தமை.

**B. பணிகள்**

- பிரமசூத்திரம், பகவத்கீதை, தசோப நிடதங்களுக்கு உரைநூல்கள் எழுதியமை.
- சிவானந்தலகரி, சௌந்தர்யலகரி, சுப்ரமணியபுறங்கம், ஆரியாசதகம், பஜகோவிந்தன் முதலான தோத்திர நூல்களைப் பாடினார்.
- விவேக சூடாமணி உபதேச சாயஸ்ரி ஆகிய அத்வைத கொள்கை நூல்களை ஆக்கினார்.
- வேதாந்த மடங்களை அமைத்தார்.
- இந்திய தத்துவ மரபில் உபநிடதத் தத்துவ சிந்தனை மரபுகளை அடிப்படையாகக் கொண்டு கேவலாத்வைதம் எனும் புதிய தத்துவ மரபினைத் தோற்றுவித்தார்.
- பின் எழுந்த இந்து தத்துவங்களுக்கு முன்னோடியானவர்.

**01. அத்வைதம் என்பதன் பொருளைத் தெளிவுப்படுத்துக.**

- அ – அல்ல
  துவைதம் - இரண்டு
  உண்மைப் பொருள் இரண்டு அல்ல ஒன்று
- பிரமம் ஒன்றே உண்மைப்பொருள் ஆகவேதான் அத்வைதம் ஏகான்மவாதம், ஒருமை வாதம் என அழைக்கப்படுகின்றது.
- மாயாக் கோட்பாட்டை முன்வைப்பதால் மாயாவாதம் எனப்படுகிறது.

**02. சங்கரர் கூறும் பிரமம் பற்றிய கருத்துக்களைத் தருக.**

- பிரமம் மட்டும் உண்மைப்பொருள் ஏனைய யாவும் தோற்றம்.
- பிரம்மம் அநாதியானது, அந்தமற்றது அழிவற்றது
- நீக்கமற நிறைந்திருப்பது, சொல்லால் விளக்க முடியாதது
- பிரமத்திற்கு இரண்டு நிலைகள்
  (1) நிர்க்குணநிலை
  குணங்குறிகளுக்கு அப்பாற்பட்ட நிலை மாயையோடு சேரா நிலை
  (2) சகுண நிலை

குணங்களோடு கூடிய நிலை மாயையோடு சேர்ந்த நிலை

- ஒன்றாகிய பிரமமே பல ஜீவன்களாகவும் உலகமாகவும் தோன்றுகின்றது. காரணம் மாயை ஆகும்.
- ஆன்மாவே பிரமம் - உபநிடத மகாவாக்கியங்கள் - தத்துவமசி, அகப்பிரமாஸ்மி சோகமஸ்மி
- அவித்தையாகிய அஞ்ஞானத்திலிருந்து விடுதலை பெறுமிடத்து பிரமமே எங்கும் பரந்திருக்கும் பரிபூரணப் பொருள்


**03. சங்கரர் கூறும் ஆன்மா பற்றி விளக்குக.**

- ஆன்மாவுக்கு இருநிலைகள் கூறப்படுகின்றன.
  (1) பரமாத்மா (என்றும் உள்ள பொருள்)
  (2) ஜீவாத்மா (அவித்தைக்கு உட்பட்டது)
- ஆன்மா ஒன்றே அது பலவாகத் தோன்றுகிறது. அடிப்படையில் ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஒன்று
  (1) பிரதிவிம்ப வாதம் - பிரம்மம் பல சீவன்களாகத் தோன்றுதல்
  (ஒரு சந்திரன் பல நீர்நிலைகளில் தோன்றும் போது பல சந்திரன்களாகத் தெரிதல்)
  (2) அவச்சேத வாதம் - பிரம்மம் பல சீவன்களாகத் தோன்றுதல்
  (ஒரே வெளியைப் பல தடுப்புக்களினால் தடுப்பதினால் பல வெளிகள் தோன்றும்)
- அஞ்ஞானத்தினாலேயே சீவன் தன்னைப் பிரமத்திலிருந்து வேறுபட்டதாக எண்ணுகிறது.
- வெள்ளைப்பூ - செந்நிறக் கண்ணாடியூடாகச் சிவப்பாகத் தெரிதல்.

**04. சங்கரர் கூறும் உலகம் பற்றிய கருத்துக்களைத் தருக.**

- பிரமம் மட்டுமே உண்மை. பிரமம் உலகமாக மாறுவதாகக் காணப்படுகிறதேயொழிய உண்மையில் மாற்றமெதுவும் ஏற்படுவதில்லை. இதனை விவர்த்த வாதம் மூலம் நிறுவுகிறார்.
- கயிறு பாம்பாகத் தெரிதல் - விவர்த்த வாதம்

<u>விவர்த்த வாதம்</u>




**05. மாயை பற்றிச் சங்கரர் குறிப்பிடுவதைக் கூறுக.**

- மாயை சொல்லால் விளக்க முடியாதது – அநிர்வசனீயம்
- இருநிலைகள் - ஆவரணம் - உள்ளதை மறைக்கும் இயல்பு
  - விக்சேபம் - இல்லாததைத் தோற்றுவிக்கும் இயல்பு
- ஈஸ்வரத்துவம் - பிரமத்தை மாயை மறைப்பதால் தோன்றுவது

**06. சங்கர வேதாந்தம் குறிப்பிடும் முத்தி பற்றிக் குறிப்பிடுக.**

- சங்கரர் ஞானத்திற்கு முதன்மையளிக்கிறார்.
- ஆன்மா அவத்தையினின்றும் விடுபட்டுத் தன்னைப் பிரமம் என உணர்தல்.
- முத்தி நிலையில் பிரமமும் ஆன்மாவும் ஒன்று
- பிரமம் மட்டுமே உண்மை – கேவலாத்வைதம்

- பிரமமும் ஆன்மாவும் ஒன்று என்பதை உபநிடத மகாவாக்கியங்களான தத்துவமசி, அகப்பிரம்மஸ்மி என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு நிறுவுகிறார்.
- பிரமத்தைச் சத், சித், ஆனந்தமாக அறிந்து கொள்ளுதல்.
- சங்கரர் கூறும் முத்தி – அத்வைதமுத்தி, சீவன்முத்தி விதேகமுத்தி இரண்டையும் குறிப்பிடுகிறார்.

## 09
## விசிட்டாத்வைதம் (இராமானுஜர்)

- இராமானுஜர் வாழ்ந்த காலம் - கி.பி 11 ஆம் நூற்றாண்டு தென்னிந்தியாவின் ஸ்ரீபெரும்புதூரில் சாந்தியம்மைக்கும் ஆதிகேச வாச்சாரியாருக்கும் மகனாக பிறந்தார். இவரது ஆசிரியர்கள் - யாதவப்பிரகாசர், திருக்கோட்டியூர் நம்பி
- பிரஸ்தான திரயநூல்களான பிரமசூத்திரம், பகவத்கீதை, உபநிடதம் ஆகிய நூல்களுக்கு உரை எழுதினார்.
- வேதாந்த சாரம், வேதாந்த சங்கிரகம், வேதாந்த தீபம், கத்தியத்திரயம், நித்தியக்கிரந்தம் ஆகிய நூல்களை எழுதினார்.
- காண்டல், கருதல், உரை ஆகிய பிரமாணங்களை அடிப்படையாகக் கொண்ட விசிட்டாத்வைத் கோட்பாடு
- சங்கரரது கொள்கையைத் தழுவியும் வேறுபட்டும் விசிட்டாத் வைதக் கோட்பாடு நிறுவப்பட்டுள்ளது.
- இராமானுஜர் பிரமசூத்திரத்திற்கு எழுதிய உரை ஸ்ரீபாஷீயம் ஆகும்.
- பகவத்கீதையை பிறருக்கு உபதேசித்தவர், யாவரும் முத்தியடைய வழிகாட்டியவர்.

**அற்புதங்கள்**

- கிருஷ்ண பகவான் வேட்டுவ வடிவில் வழித்துணையானமை.
- ஸ்ரீரங்கத்து மடாபதி ஆளவந்தாரின் வேண்டுகோளை அறிந்து பாடியமை.
- காஸ்மீரிலிருந்து போதாயன விருத்தி நூல் பகவான் அனுக்கிரகத்தால் கிடைக்கப் பெற்றமை.

**வேதாந்த தத்துவ வளர்ச்சியில் இராமானுஜர் பங்கு**

- வேதாந்த தத்துவங்களை மக்களோடு இணைத்து வேதாந்தப் புரட்சி செய்தவர்.
- சங்கரரின் அத்வைதக் கோட்பாட்டை உள்வாங்கி உருவாக்கியவர்.
- துத்துவ சிந்தனைகள் + சமய நெறிமுறைகள் ⟶ விசிட்டாத்வைதக் கோட்பாடு உருவாக்கியவர்

**01. விட்டாத்வைதக் கோட்பாடு பற்றிய சுருக்கமான விளக்கத்தைத் தருக.**

- தத்துவத்திரயம் ⟶ மூன்று பொருள்களும் உண்மை
- பிரமம், ஆன்மா, உலகு ஆகிய முப்பொருள்களும் உண்மை என்ற அடிப்படையில் எழுந்தது விசிட்டாத்வைதம்

- பிரஸ்தான திரவியங்களோடு நாலாயிர திவ்விய பிரபந்தத்தினையும் பிரமாண நூலாகக் கொண்டுள்ளது.
- விசிட்டம் + அத்வைதம் ⟶ விசிட்டாத்வைதம்
- விசேடனுங்களுக்கும் விசேடியத்துக்கும் இடையிலான நெருங்கிய தொடர்பை விளக்குவது
- பிரமம், உயிர், உலகு மூன்றுக்குமுள்ள தொடர்பு சரீர சரீரி சம்பந்தமானது
- அப்பிரதச்சித்தி ⟶ * ஒன்று நிலைபெற மற்றொன்று அவசியம்
  * உலகு உயிர் நிலைபெற இறைவன் அவசியம்
  * இறைவன் தனித்தன்மைக்கு உலகு, உயிர் என்பன அவசியம்
- ஒருமை வாதம் பன்மை வாதம் ஆகிய இரண்டுக்கும் இடைப்பட்டு பன்மையில் ஒருமை காணும் முயற்சியாக அமைந்திருந்தது
- பரிணாமவாதம்
- அசித் - அறிவற்ற சட உலகம்
- சித் - ஆன்மா
- ஈஸ்வரன் கடவுள் மூன்றும் உண்மை

**02. விசிட்டாத்வைதம் என்பதன் பொருளைத் தெளிவுபடுத்துக.**

- விசேடம் / அத்வைதம்
- விசேட இயல்புடைய இறைவனுக்கு முக்கியத்துவம் வழங்குகிறார்
- இந்த உலகமும் உயிர்களும் தோன்றுவதற்குக் காரணமாக இருக்கும் சகுணப்பிரம்மம் விசேட தன்மையுடையது என்பதால் இவருடைய வேதாந்தம் விசிட்டாத்வைதம் எனப்படுகிறது.

**03. இராமானுஜரின் விசிட்டாத்வைதத்துவம் பிரம்மம், ஆன்மா, உலகம் முத்தி நிலை பற்றிக் கூறும் கருத்துக்களை விளக்குக.**

1. **பிரமம்**
   - பிரமம் என்ற பொருள் விஷ்னு
   - சரீர சரரி சம்பந்தம் - ஆன்மாக்களையெல்லாம் தனது உடலாகவும் பண்பாகவும் கொண்டு விளங்குபவன் பரமான்மா
   - இறைவனின் பண்புகள் - ஐஸ்வர்யம், பலம், வீரியம், தேஜஸ், ஞானம்
   - இறைவன் பூரண அறிவுடையவன் சிருஷ்டி, திதி, சம்காரம், ஞானம் என்னும் நான்கு தொழில்களையும் இயற்ற, வசுதேவன் பிரத்தியும்னன், அநிருத்தன் முதலான நிலைகளை எடுக்கிறான்.
   - ஆன்மாக்களைத் தனது அங்கமாகக் கொண்டிருந்தாலும் பரமான்மா பாதிக்கப்படுவதில்லை. இறைவன் ஆன்மா மீது கருணை கொண்டு காப்பவன்
   - ஆன்மாவும் உலகமும் சூக்கும வடிவில் இருக்கும் போது இறைவன் காரணமாகவும் தூவ வடிவைப்பெறும்போது காரியமாக விளங்குகிறான்
   - இறைவன் அங்கி ஆனமாவும் உலகமும் அங்கங்கள்
   - ஆன்மா உலகமும் இறைவனுக்குரிய விசேஷணங்க விசேஷணம் விசேஷியம் இரண்டும் சேர்ந்த பரம்பொருள் விஷிஷ்டம் என்று அழைக்கப்படுகிறது. அதாவது ஆன்மாக்களுக்கும் உலகங்களுக்குள்ளும் இறைவன் அந்தர்யாமியாய் அதாவது உள்நின்று இயங்குகிறான்.
   - முப்பொருள் உண்மையைக் கூறி ஆன்மாக்களையெல்லாம் தனக்கு உடலாகக் கொண்டு ஆன்மாக்களுக்கெல்லாம் ஆன்மாவாக நிற்கும் பரமான்மா ஒன்று தான் எனக் கூறப்படுகிறது.
   - அப்பிரதச் சித்திக் கொள்கை – ஒன்று நிலைப்பதற்கு இன்னொன்று அவசியம்

2. **ஆன்மா**
   - எண்ணிக்கையிற்பல, நித்தியமானவை, அழிவற்றவை
   - வினைகளுக்கேற்ப உடலை எடுக்கின்றன.

- அறிவை இயல்பாக உடையவை – தர்மபூதஞானம் (அந்தக்கரணங்களின் உதவியுடன்)
- அறிவுக் குறைவே துன்பங்களுக்குக் காரணம்
- இறைவனுக்கும் ஆன்மாக்களுக்கும் உள்ள தொடர்பு முழுப்பகுதிக்கும் அதன் பகுதிக்கும் உள்ள தொடர்பு போன்றது
- ஆன்மாக்களின் மூன்று நிலைகள்
- முத்திநிலை (அநாதிமல முத்தர்)
- பெத்தநிலை நிலையிலிருந்து முத்தியடைந்தவை (கட்டுண்ட நிலையிலிருந்து முத்தி கட்டுண்ட நிலைகளானவை)
- பெத்த நிலையில் உள்ளன
- முத்தியடைய நற்கருமங்கள் செய்ய வேண்டும்

3. **உலகம்**
   - நித்தியமானது அழிவற்றது
   - பிரமமானது உலகமாக மாற்றடைந்து சிருஷ்டி நிகழ்கிறது
   - பரிணாம வாதம் - காரணம் உண்மை, காரியம் உண்மை (உலக இருப்பு)
   - காரணம் - இறைவன், காரியம் - உலகம்

4. **முத்திநிலை – விதேகமுத்தி (உடல் அழிந்த பின் வைகுண்டம் அடைதல்)**
   - விஷ்ணுவின் பாதத்தை அடைதல் ஶ்ரீ வைகுண்டத்தை அடைதல்.
   - கன்ம பலன்களினடிப்படையில் வீடுபேறு.
   - ஞானமும் பக்தியும் வீடுபேற்றுக்கு வழிவகையாகக் கூறப்பட்டாலும் பிரபக்திக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.
   - இறைவனுடன் பிரிக்க முடியாதவாறு இரண்டறக் கலந்து விடுகிறது.
   - பகவத் கீதையில் உள்ள யோக வகைகளை வழியாகக் கொள்ளலாம்.

## 10
## துவைத வேதாந்தம் (மத்துவர்)

- தென்னிந்தியா – உடுப்பிக்கு அருகில் உள்ள துலுந்தை என்னும் சிற்றூரில் 1238 இல் மத்திய ஹேச பட்டருக்கும் வேதவதி தேவிக்கும் மகனாகப் பிறந்தார்.
- பிரஸ்தான திரய நூல்களுக்கு விளக்கங்கள் எழுதியவர்
- ஆசிரியர் - அச்சுதபிரேஹஷர்
- இருக்கு வேதத்தின் முதல் நாற்பது மந்திரங்களுக்கு விரிவுரைகள் எழுதியவர்.
- 37 நூல்களை எழுதியுள்ளார். (சர்வமூலம் - தொகுப்பு)
- “பாரத தாற்பரிய நிருணயம்” – மகாபாரதம் பற்றிய நூலுக்கு விளக்கம் எழுதியமை.
- பாகவத புராண விளக்க நூல் எழுதியமை.
- கன்னடத்தில் ஹரிதாஸகளை உருவாக்கியவர்
- வைணவ மதச் சார்பாக தனது வேதாந்தத்தை நிறுவியவர்.
- குரு சூட்டிய நாமம் ஆனந்த தீர்த்தர்.
- துவைதம் என்னும் தத்துவத்தரிசனத்தை பேதவாதம் கூலம் விளக்கியுள்ளார்.
- துவைதம் - காண்டல், கருதல், உரை என்பவற்றைப் பிரமாணங்களாகக் கொள்கிறது.

1. **“துவைதம்” என்பதன் பொருளைத் தெளிவுபடுத்துக.**

- துவைதம் என்னும் சொல் துவி என்ற அடிச்சொல்லில் இருந்து பிறந்ததாகும். துவி இரண்டு எனப் பொருள்படும்.
- துவைதம் ⟶ உண்மைப் பொருட்கள் இரண்டு என்பதாகும்.

**2. துவைத வேதாந்தம் என்பதை விளக்குக.**

- துவைதம் ⟶ இரண்டு என்று பொருள் அதாவது உண்மைப் பொருட்கள் இரண்டு.
  (1) சித்துப்பொருட்கள்
  (2) சடப்பொருட்கள்
- இரண்டு எனும் போது ஒன்று அல்ல எனும் கருத்து வெளிப்படுத்தப்படுகிறது.
- அதாவது பிரம்மம், ஆன்மா ஆகிய இரண்டு எனும் நிலையிலிருந்து ஒரு போதும் ஒன்று எனும் நிலையினை அடையாது.
- உள்பொருள்கள் பல
- ஈஸ்வரன், சீவன், சடம்
- ஆன்மாவும் சடமும் இறைவனில் தங்கியிருப்பன
- இவை நிரந்தரமானவை என்றும் இருப்பவை
- மூன்று பொருளுக்குமிடையில் வேறுபாடு இருப்பதனை வெளிக்காட்டுவதற்காக ஐவகைப் பேதங்களை விளக்குகிறார்.
  (1) சீவ - ஈஸ்வரபேதம் - சீவனுக்கும் ஈஸ்வரனுக்குமிடையில் உள்ள பேதம்
  (2) சீவ - பரஸ்பரபேதம் - சீவனுக்கும் சீவனுக்குமிடையில் உள்ள பேதம்
  (3) சீவ - சடபேதம் - சீவனுக்கும் சடத்துக்குமுள்ள பேதம்
  (4) சட - ஈஸ்வரபேதம் - சடத்துக்கும் ஈஸ்வரனுக்குமுள்ள பேதம்
  (5) சட – பரஸ்பரபேதம் - சடப்பொருளுக்கும் இன்னொடு சடப்பொருளுக்குமுள்ள பேதம்
- புற உலகின் கொள்கையை மத்துவர் ஏற்றுக் கொள்வதால் அவரது கொள்கைளைக் காட்சிப் பொருள் கொள்கை என்பர்.

**3. துவைத வேதாந்தம் பிரமம், ஆன்மா, உலகம், முத்தி நிலை பற்றிக் கூறும் கருத்தக்களை தொகுத்து விளக்குக.**

**(1) பிரமம்**

- சகுணப்பிரமம் முதன்மைப்படுத்தப்படுகிறது
- பிரமம் சுதந்திரமான உண்மைப்பொருள் (ஸ்வதாந்திரம்)
- உலகை உருவாக்கும் முழுமைப்பொருள்
- பிரமம் எல்லாப் பொருட்களினதும் உள்ளீடாக அமைவதுடன் அவைகளின் செயற்பாட்டிற்கு வழிகாட்டியாகவும் அமைகிறது.
- இறைவன் மட்டுமே சார்பற்றவன். உள்பொருள் (சர்வோத்தமன்)
- எல்லாக் குணங்களும் அமையப் பெற்றவன் (குணபூர்ணன்)
- மகாவிஸ்ணு மூர்த்தியே சர்வவல்லமை படைத்த ஈஸ்வரன் அவர் ஆன்மாக்கள் பிறவித் துன்பம் நீக்க படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலையும் புரிகிறான்.
- ஆன்மாவின் அறிவுக்கும் விடுதலைக்கும் காரணமாக அமைவது பிரமம்.
- பல அவதாரங்கள் எடுப்பதாகவும் கூறப்படுகிறது.

**(2) ஆன்மா**

- ஆன்மா நித்தியப் பொருள்கள், எண்ணிக்கையற்றவை, அணுவின் அளவுடையன.
- ஆன்மாக்கள் இருநிலைகளில் வைத்து விளக்கப்படுகிறது.
  1. போன்றிருத்தல் 2. சார்ந்திருத்தல்
- ஆன்மா பிரமத்தில் தங்கியிருக்கிறது ஆனால் தனித்தன்மை உடையது (அறிதல் / செய்தல் / துய்த்தல்)

- ஆன்மாக்கள் பிரமத்தின் தன்மைகள் பலவற்றைப் பெற்றிருக்கிறது. ஆனால் கடவுளுக்குச் சமமானதல்ல.
  - இறைவனைப் போன்று சத், சித், ஆனந்தம் என்னும் பண்புகளைப் பெற்றவை ஆயினும் அப்பண்புகள் நிறைவற்றவை
  - அறிபவர். சேய்பவர், அனுபவிப்பவர் என்ற வகையில் ஆன்மாவும் இறைவனைப் போன்றிருப்பதாக எண்ணப்படுகிறது.

- மூவகை ஆன்மாக்கள்
  - ➢ நித்திய முக்தியுடையோர் - (நித்யா) – நித்தியமாயும் சுதந்திரமாகவும் இருப்பவை. (உ+ம்) இலட்சுமி
  - ➢ முக்தர்கள் (முக்தா) – சம்சாரத்தளையிலிருந்து விடுதலை அடைந்தவர்கள். (உ+ம்) தேவர்கள், ரிஷிகள்
- தனைகளுள்ளது (பெத்தா) – பாதப்பட்ட சீவன்கள்
  - பெத்தநிலையில் உள்ளோர் 2 வகையினர்
    (1) வீடுபெறு அடையத் தகுதியுடையவர் (முக்தியோக்யர்கள்)
    (2) வீடுபேறு அடையும் தகுதியில்லாதவர்கள் (தமோயோக்யர்கள்)
  - வீடுபெறு அடையும் தகுதியில்லாதவர்கள் 2 வகையினர்.
    (1) சம்சாரபந்தத்தில் உழல்வோர்
    (2) நித்திய நரகத்தில் உழல்வோர்

- ஆன்ம விடுதலை ஆன்மாக்களின் முக்குணங்களின் அடிப்படையிலும் தீர்மானிக்கப்படுகின்றன.
  - சாத்வீகம் - முத்திநிலை எய்துகின்றன
  - இராசதம் - சம்சாரத்தில் உழல்கின்றன
  - தாமசம் - நித்திய நரக்தில் வீழ்கின்றன

**(3) உலகம்**

- உண்மையான நிலையான பொருள்
- சட உலகத்தோற்றத்துக்கு பிரகிருதியே அடிப்படை
- இறைவன் உலகப்படைப்பிற்கு நிமித்தக் காரணன்
- ஆன்மாக்கள் முத்தியின்பம் பெற நிலைக்களனாகின்றது
- நுண்ணிய அளவில் வேறுபாடான பொருள்களைக் கொண்டு இவ்வுலகம் படைக்கப்படுகிறது.
- காரண நிலையிலிருந்தும் பிரகிருதியிலிருந்தும் இறைவன் விஸ்ணு லட்சுமையைச் சக்தியாக மாற்றி உலகைத் தோன்றச் செய்கிறான்.

**(4) முத்தி – மாற்றமில்லாப் பேரின்பநிலை**

- ஆன்மா அவித்தையால் கட்டுண்டது. அதனால் இறைவனின் உண்மைத் தன்மையை உணர்வதில்லை.
- இறைவனின் அருள் கை கூடும் போது தான் முத்திநிலை கைகூடும்.
- முத்தி நிலையிலும் ஆன்மா பேரின்பத்தை அனுபவிக்குமே தவிர பிரம்மத்துடன் இரண்டறக் கலப்பதில்லை.

- முத்தியடைந்த நிலையிலும் ஆன்மாக்களுக்கிடையில் வேறுபாடு உண்டு.
- முத்தி நிலையில் கூட ஆன்மா ஈஸ்வரனாவதில்லை
- முத்திக்குரிய வழிகள்
  - ஞானம், பக்தி என்பன மோட்சம் அடைவதற்குரிய வழிகள்
  - தியானம், ஞானம் என்பவற்றினூடாக இறை பற்றிய நேரடி உள்ளுணர்வை ஆன்மா அடையும்.

## 11

## சைவசித்தாந்தம் - அறிமுகம்

- சைவம் சிவசம்பந்தமுடையது. சைவம் கூறும் உண்மைகளின் முடிந்த முடிவு
- "சிவமாதல் வேதாந்த சித்தாந்தமாகும் - திருமூலர் - திருமந்திரம்
- சைவசித்தாந்தத்தை அளவையியல் அடிப்படையில் வளர்த்தவர்கள் மெய்கண்டாரும் மெய்கண்ட சந்தானமுமாகும்.
- 14 மெய்கண்ட சாத்திரங்கள் சைவசித்தாந்தக் கருத்துக்களை மெய்யியல் ஆராய்ச்சிக்கு ஏற்றவாறு வகுத்துள்ளன.
- சிவமே உயர்ந்த பொருள் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருட்கள் நித்தியமானவை எனக் கூறுகின்றன.
- சைவசித்தாந்தக் கோட்பாடு பிரமாணங்களுடாகவும் சத்காரிய வாதத்தினூடாகவும் விளக்கப்படுகிறது.
  பிரமாணங்கள் (அளவைகள்)
  1. பிரத்தியட்சம் (காட்சியளவை)
     (கண்ணால் கண்ட மாத்திரத்தில் உண்மையென நிறுவுதல்)
  2. அனுமானப்பிரமாணம் (கருதலளவை)
     (காரியத்துக்குக் காரணமான சம்பவத்தை ஊகித்தறிதல்)
  3. ஆகமப் பிரமாணம் (நூலளவை)
     (ஞானியர்களின் நூல்கள், பாடல்கள் என்பவற்றில் இடம்பெறும் பொருள் ஆழமுள்ள கூற்றுக்கள்)
- சத்காரியவாதம்
  உள்ளது இல்லாததாகாது. இல்லாதது உள்ளதாகாது. உள்ளத்திலிருந்து உள்ளதே தோன்றும். இல்லாததிலிருந்து உள்ளது தோன்றாது.
- பிரபஞ்சத்தின் உண்மைப் பொருளை விளங்கிக் கொள்ளச் சற்காரியவாதம் துணை புரிகின்றது.

## 12

## மெய்கண்ட சந்தானம்

- தமிழ்நாட்டில் மெய்யியற் சிந்தனை மரபு சைவசித்தாந்தக் கோட்பாடு வளர்ச்சியடைந்தமைக்கு ஆதாரமானவை மெய்கண்ட சாத்திரங்களாகும்.
- மெய்கண்ட சாத்திரங்களைத் தோற்றுவித்தவர்கள் சந்தானகுரவர்கள் ஆவார்.
- குரு சீட பரம்பரையில் சைவ மெய்ப்பொருளை வளர்த்த பெரியோர்கள் சந்தான குரவர்கள் ஆவார்.
- மெய்கண்டதேவர், அருணந்தி சிவாசாரியார் மறைஞான சமப்ந்தர், உமாபதி சிவாசாரியார் ஆகியோர் புறச்சந்தான குரவர்கள் ஆவார்.
- சைவ சித்தாந்தத்திக் முதனூல் மெய்கண்டதேவர் இயற்றிய சிவஞானபோதம் ஆகும். வழிநூல் அருணந்தி சிவாசாரியார் இயற்றிய சிவஞான சித்தியார்
- அருணந்தி சிவாசாரியார் இயற்றிய இன்னொரு நூல் இருபா இருப.்.து
- மறைஞான சம்பந்தர் நூல்கள் எதனையும் இயற்றவில்லை.
- உமாபதி சிவாசாரியார் ''சித்தாந்த அட்டகம்'' என்பதில் அடங்கும் எட்டு நூல்கள் ஆகும்.

## 13
## மெய்கண்ட தேவர்

- சந்தானம் என்பது பரம்பரை ஆகும்.
- சந்தான குரவர் என்போர் குருசீட பரம்பரையில் சைவ மெய்ப்பொருளை வளர்த்த பெரியோர்கள் ஆவார். அதாவது தத்துவஞான பரம்பரையில் வந்த ஞானசிரியர்கள்
- சந்தான குரவர்கள் அகச்சந்தான குரவர், புறச்சந்தான குரவர் என இருவகையாகச் சுட்டப்பெறுகின்றனர்.
- அகச்சந்தான குரவர் - திருநந்திதேவர், சனற்குமார முனிவர், சத்தியஞான தரிசினிகள், பரஞ்சோதிமுனிவர்
- புறச்சந்தான குரவர் - மெய்கண்டதேவர், அருணந்தி சிவாசாரியார், மறைஞான சம்பந்தர், உமாபதி சிவாசாரியார்
- புறச்சந்தான குரவர்களில் மெய்கண்ட தேவர் முதன்மையானவர் - இவரின் சிவஞான போதம் சைவ சிந்தாநந்த தத்துவத்தின் முதனூல் எனப்படுகிறது.
- வாழ்ந்த காலம் - கி.பி 13 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி
- பிறந்த இடம் - திருபுழுனைப்பாடி நாட்டிலே திருப்பெண்ணாகடம் என்னும் ஊர்
- தந்தை தாய் - அச்சுத் களப்பானர் - மங்களாம்பிகை
- தந்தையின் குலகுரு – சகலாகம பண்டிதர் (அருணந்நி சிவாசாரியார்)
- பிள்ளைத் திருநாமம் - சுவேதனப் பெருமாள்
- தீட்சா நாமம் - பரஞ்சோதி முனிவர் மெய்கண்டதேவர் எனச் சூட்டினார்.
- இவரது தலைமை மாணாக்கன் - அருணந்தி சிவாசாரியார் அருணந்தி சிவாசாரியார்
- 46 மாணவர்களி - மனவாசகம் கடந்தார், சிற்றம்பல நாடிகள் ஆகியோர் முக்கியமானவர்கள்
- மெய்கண்ட தேவர் முன்வைத்த கருத்துக்கள் - சுத்தாத்துவித சைவ சித்தாந்தம் என அழைக்கப்படுகிறது
- குருபூசைத்தினம் - ஐப்பசி மாத சுவாதி நட்சத்திரம்
- சமாதிக்கோயில் - திருவாவடுதுறை ஆதீனத்தின் கிளை மடமாகிய திருவெண்ணெய் நல்லூரில் காணப்படுகிறது

**01. மெய்கண்ட தேவர் ஆற்றிய பணிகளைக் குறிப்பிடுக.**

- சிவஞானபோதம் என்னும் நூலை இயற்றித் தத்துவங்களுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தமை
- தாம்பெற்ற உண்மைகளை தமது மாணவர்களுக்குப் போதித்துத் தத்துவஞான பரம்பரைக்கு வித்திட்டவர்.
- வேதாந்த தத்துவ விசாரணைகளில் நின்று சைவ மெய்யியலைக் காப்பாற்றியவர்.
- சித்தாந்த நெறியின் அடிப்படையாக விளங்கும் அத்துவிதம் என்னும் சொல்லுக்கு விளக்கம் தந்தமை.
- சைவ சித்தாந்த தத்துவக் கருத்துக்களைத் தர்க்க முறையில் தமிழில் எடுத்துக் கூறியமை
- புறச்சந்தான குரவர் பரம்பரையின் முன்னோடியாகத் திகழ்ந்தமை
- சைவசித்தாந்த நூல்கள் தோன்ற முன்னோடியாகத் திகழ்ந்தமை

**02. “சிவஞானபோதம்” நூல் பற்றிய தகவல்களைத் தருக.**

**சிவஞானபோதம்**

| **பொது அதிகாரம்** | | **உண்மை அதிகாரம்** | |
|---|---|---|---|
| பிரமாண இயல் | இலக்கண இயல் | சாதன இயல் | பயன் இயல் |
| 01. பதி உண்மை | 04. பசு வின்தன்மை | 07. யாருக்கு சாதனம் (ஆன்மாவுக்கு) | 10. பாச விடுதலை |
| 2. பாச உண்மை | 5. பாசத்தின் தன்மை | 8. எது சாதனம் | 11. சிவப் பேறு |
| 3. பசு உண்மை | 6. புதியின் தன்மை | 9. நடைமுறை வாழ்வில் சாதனம் (ஆன்மசுத்தி) | 12. சீவன்முத்தர் தன்மை |

- சைவ சித்தாந்தத்தின் முதனூல், கோட்பாட்டு ரீதியில் முன்வைக்கும் நூல்
- 12 சூத்திரங்களை உடையது. 81 உதாரண வெண்பாக்களையும் வார்த்திகம் எனும் உரையையும் கொண்டு அமையப்பெற்றது.
- சிவஞான போதத்தின் முன்னுரை இரு பாக்களைக் கொண்டது.
- சிவஞான போதத்திற்குச் சிறப்புப்பாயிரத்தை எழுதியவர் அருணந்தி சிவாசாரியார் ஆவார்.
- இந்நூலின் வழிநூல் அருணந்தி சிவாசாரியார் இயற்றிய சிவஞான சித்தியார் ஆகும்.
- உமாபதி சிவாசாரியார் இயற்றிய சிவப்பிரகாசம் சார்பு நூலாகும்.

- **முதலாவது சூத்திரம்**

- உலகுண்மையைக் கொண்டு பதி உண்மையை விளக்குகிறது.
- உலகம் தோன்றுதல், நிலைபெறுதல், ஒடுங்குதல் என்னும் மூன்று தொழில்களையுடையதால் அது ஒருவனால் தோற்றுவிக்கப்பட்ட உள்பொருள் உலகின் ஒடுக்கத்திற்குக் காரணமாக உள்ள இறைவனை அதன் தோற்றத்திற்குக் காரணம் என்று கடவுளுண்மையை வலியுறுத்துகிறது.

- **இரண்டாவது சூத்திரம்**
  - பாசங்களின் உண்மை கூறப்பட்டுள்ளது.
  - ஆன்மாக்களின் ஆணவம் காரணமாக அறியாமைக்குட்பட்டுக் கன்மங்களைச் செய்து பிறவிக்குட்படுகின்றன என்னும் கருத்துக்கள் விளக்கப்பட்டுள்ளன.

- **மூன்றாம் சூத்திரம்**
  - ஆன்மாவின் உண்மைத் தன்மை
  - அந்தக்கரணங்கள் நான்கினுள்ளும் வேறானது ஆன்மா
  - அந்தக்கரணங்களோடு கூடி நின்று சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம் என்ற வார்தைகளைப் பெறுகிறது.
  - ஒருவன் எனது உடல் என்று கூறும்போது உடலுக்கு வேறாக உள்ளதே உயிர்.
  - ஐம்பொறி புலன்களால் வரும் ஐந்து பயன்களையும் அறிகின்ற ஆன்மா ஐம்பொறிகளுக்கு வேறாக உள்ளது.
  - ஆன்மா உணர்த்தினால் உணரும் தன்மை உடையது / சிற்றறிவுடையது
  - பேரறிவுடைய இறைவனின்றும் வேறாக உள்ள பொருளுண்டு அதுவே ஆன்மா
  - மாயையின் காரியமாகிய உடம்பினுள்ளே உயிர் உள்ளது என ஆன்மா.

- **நான்காம் சூத்திரம்**
  - ஆன்மாவின் தன்மை கூறப்பட்டுள்ளது
  - அந்தக் கரணங்களின்றும் வேறானது
  - சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்னும் அவத்தைகளை உடையது.
  - ஆன்மாவின் அவத்தைகளுக்கு பாசங்களே காரணம்

- **ஐந்தாம் சூத்திரம்**
  - பாசத்தின் இலக்கணம் விளக்கப்பட்டுள்ளது.
  - திரோதான சக்தியினால் மாயை, கன்மம் எனும் பாசங்கள் தொழிற்படும்.
  - திரோதனா சக்தியின் இலக்கணம் விளக்கப்படுவதன் மூலம் பாசங்களின் இலக்கணம் கூறப்படுகிறது.

- **ஆறாவது சூத்திரம்**
  - ஆன்மாக்களின் மோட்சத்திற்கு அருளும் இறைவனின் இலக்கணம் கூறப்படுகிறது.
  - பதிஞானம் ஒன்றினால் அறியப்படும் சிவசக்தி.

- **ஏழாவது சூத்திரம்**
  - மோட்சத்துக்குரிய ஆன்மாக்களின் சிறப்பிலக்கணம்
  - ஆன்மா சதசத்து என்பதை விளக்கும் பகுதி

- **எட்டாம் சூத்திரம்**

- சதசத்தாகிய ஆன்மாக்களுக்கு அவை முன்செய்த புண்ணியத்தால் இறைவன் குருவடிவில் எழுந்தருளியதும் ஆன்மாக்கள் பொறிகளை விட்டு நீங்கி தமக்கும் இறைவனுக்கும் வேறுபாடின்மையை உணர்ந்து இறைவனது திருவடிகளை இணைந்து நிற்கும் என்பதையும் விளக்குகிறது

- **ஒன்பதாம் சூத்திரம்**
  - பாச அறிவினாலும் பசு அறிவினாலும் உணர முடியாத பதியை அவனது திருவடி ஞானமெனும் சிவஞானத்தால் அறியும் போது பாசங்கள் நீங்கும்.
  - பதியானது குளிர்ந்த நிழலாய் வெளிப்பட்டுத் தோன்றும் அந்நிலையில் திருவைந்தெழுத்து ஓதப்படும் முறையை விளக்குகிறது.

- **பத்தாம் சூத்திரம்**
  - உயிர் இறைவனுக்குரிய தொண்டுகளைச் செய்து வழுவாது ஒழுகின் ஆணவம், மாயை ஆகியவற்றுடன் வலிமையான கன்ம மலமும் இல்லையென்றாகிவிடும் என்று பத்தாம் சூத்திரம் கூறுகிறது

- **பதினோராம் சூத்திரம்**
  - பாசம் நீங்கிய ஆன்மா சிவப்பேற்றினைப் பெறும் நிலை விளக்கப்பட்டுள்ளது.

- **பன்னிரண்டாம் சூத்திரம்**
  - ஆன்மா பெறும் சீவன்முத்தி பற்றிய விளக்கம் கூறப்பட்டுள்ளது
  - இறைவன் திருவடிகளைச் சேரவிடாது தடுக்கின்ற மலங்களின் அழுக்கினைக் கழுவி மெய்ஞ்ஞானிகளுடன் கலந்து கூடி மயக்கம் நீங்க அன்புமிக்கவர்களாகிய அடியார்களின் சிவவேடத்தையும் சிவாலயத்தையும் முதல்வன் என்றே கண்டு வழிபடுபவர்கள் சீவன் முத்தர்களாவர்

இவ்வாறு சிவஞானபோதம் சித்தாந்த தத்துவக்கருத்துக்களைச் சுருங்கிய நடையில் தெளிவுபடுத்துகின்றன. முதலாம் சூத்திரத்தில் பதி உண்மையும் இரண்டாம் சூத்திரத்தில் பாச உண்மையும் மூன்றாம் சூத்திரத்தில் பசு உண்மையும் நான்காம் சூத்திரத்தில் பசு இலக்கணமும் ஆறாம் சூத்திரத்தில் பதி இலக்கணமும் ஏழாம் சூத்திரத்தில் மோட்சுமடைவதற்குரிய ஆன்மாக்களின் சிறப்பிலக்கணமும் எட்டாம் சூத்திரத்தில் இறைவன் குருவடிவாக எழுந்தருளி ஞானத்தை உபதேசித்தமையும் ஒன்பதாம் சூத்திரத்தில் ஐந்தெழுத்து ஓதும் முறையும் ஆன்ம சுத்தியும் பத்தாம் சூத்திரத்தில் பாச விடுதலையும் பதினோராம் சூத்திரத்தில் பாசம் நீங்கிய ஆன்மா பெறக்கூடிய சிவப்போறு பற்றியும் பன்னிரண்டாம் சூத்திரத்தில் சீவன் முத்தியும் விளக்கப்பட்டுள்ளன.

## 14
## உமாபதி சிவாசாரியார்

- சைவ சித்தாந்த மெய்ப்பொருளியாளர்களில் சந்தான பரம்பரையின் நான்காமவராவார்.
- காலம்
  கி.பி 13 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கி.பி 14 ஆம் முற்பகுதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் வாழ்ந்தவர்
- பிறப்பு
  சிதம்பரம் தில்லைவாழ் அந்தணர் மரபு
- இளமை
  - வடமொழியிலும் தமிழ்மொழியிலும் புலமை பெற்றவர்

- வேத, ஆகமங்களைக் கசடறக் கற்றவர்
- சோழ மன்னரின் விருதுகள் பெற்றமை

- குரு - மறைஞான சம்பந்தர்
- கொற்றவன் குடியில் சில காலம் வாழ்ந்து மக்களுக்கு மெய்ப்பொருளைப் போதித்தமையால் ‘‘கொற்றவன் குடி முதலியார்’’ என அழைக்கப்பட்டார்.

**01. உமாபதி சிவாசாரியார் ஆற்றிய பணிகளைக் குறிப்பிடுக.**

- மறைஞான சம்பந்தரின் சைவ சித்தாந்தக் கருத்துக்களை ஏற்று சித்தாந்த சாத்திர நூல்கள் எட்டை எழுதினார். இவை ‘‘சித்தாந்த அட்டகம்’’ என அழைக்கப்படும்.
- வேதங்கள், ஆகமங்கள் என்பவற்றை ஆய்வு செய்து அவற்றிலே முப்பொருளுண்மை உள்ளதென நிறுவிக் காட்டினார்.
- திருவாவடுதுறை ஆதீன தலைவராக இருந்து சித்தாந்த உபதேசங்களை மேற்கொண்டதுடன் ‘‘நமசிவாய தேசிகர்’’ என்னும் சீடரை உருவாக்கினார்.
- மிருகேந்திர ஆகமம், பௌத்கர ஆகமம் என்பவற்றை மொழி பெயர்த்தார்.
- தமிழ்ப்புராணங்களை எழுதியமை.
- ‘‘உனக்னை அரசம் தீண்டி இறக்கக் கடவது’’ என்று கூறி சீடனைக் காப்பாற்றியமை.
- சிதம்பரத்தில் ஏறாதிருந்த கொடியைக் கொடிக்கவி பாடி கொடியேறச் செய்தமை.
- முனிவரின் சாபம் நீங்க அருளியமை
- மந்திரவாதி கோயிலில் இடம்பெறவிருந்த குடமுழுக்கினைத் தடுத்த போது அவனின் மந்திர சக்தியை குறைத்தமை.
- சோழ மன்னன் மகனின் அலித்தன்மையை நீக்கியமை
- பெற்றான் சாம்பானுக்கும் முள்ளிச் செடிக்கும் முத்தியளித்தமை
- சாதிப்பாகுபாடின்றி ஞானநெறியை ஒழுகத் தலைப்பட்டமை
- திருவருட்பயன் நூற் தலைப்புக்களின் கீழ் அவற்றைத் தொகுத்து ‘‘தேவார அருள்முறைத்திரடடு’’ என வெளியிட்டமை.

**02. உமாபதி சிவாசாரியார் அருளிய ‘‘சித்தாந்த அட்டகம்’’ பற்றிய தகவல்களைத் தருக.**

சித்தாந்த அட்டக நூல்கள்

- **சிவப்பிரகாசம்**
  - நூறு விருத்தப்பாக்களை உடையது
  - பதி, பசு, பாசம் என்பவற்றின் இயல்புகளை விளக்குகிறது.
  - சிவஞான போதத்திற்கு சார்பு நூலாக விளங்குகிறது.
  - வேதாந்தத்தெளிவாம் சைவசித்தாந்தம் என்று இந்நூல் கூறுகிறது.
  - ஆணவம், கன்மம், வினைப்பயன் மாயையின் பிரிவுகள் முத்திபேதங்கள்
  - சித்தாந்த முத்தி என்பன கூறப்பட்டுள்ளன.

- **திருவருட்பயன்**
  - திருவருளின் பயனை விளக்கும் நூல்
  - பத்து அதிகாரங்களை உடையது
  - நூறு பாடல்களைக் கொண்டது
  - முதல் ஐந்து அதிகாரங்களும் திருவருளைப் பற்றியும் அடுத்த ஐந்து அதிகாரங்களும் திருவருளின் பயனைப் பற்றியும் கூறுகின்றது.
    - **முதலாவது அதிகாரம் (பதிமுது நிலை)**
      திருவருனைக் கொடுத்தருளும் மேலாகிய இறைவனுடைய தன்மை
    - **இரண்டாவது அதிகாரம் (உயிரவை நிலை)**

பலவாய உயிர்களது இயல்புகளை உணர்த்தும் விடயங்கள்

- **மூன்றாவது அதிகாரம் ( இருண்மல நிலை)**
  திருவருளால் நீக்கப்படும் ஆணவமலத்தின் தன்மை, மாயை, கன்மம் பற்றியும் கூறப்படுவதால் பாசநிலை என்றும் கூறுவர்
- **நான்காவது அதிகாரம் (அருளது நிலை)**
  திருவருளின் தன்மை
- **ஐந்தாவது அதிகாரம் (அருளுருநிலை)**
  திருவருளின் வடிவாகிய குருவின் இயல்பு
- **ஆறாவது அதிகாரம் (அறிவு நெறி)**
  அருளுருவாகிய குருவிடம் உண்மைப் பொருளை உணரும் முறை
- **ஏழாவது அதிகாரம் (உயிர் விளக்கம்)**
  ஆன்மா ஆணவ மலம் நீங்கப் பெற்றுத் தன் செயலின்றி திருவருள் வசப்படுதல் இது ஆன்மசுத்தி
- **எட்டாம் அதிகாரம் (இன்புறு நிலை)**
  ஆன்மசுத்தி அடைந்த பின்பு பேரானந்தத்தை அடையும் முறை
- **ஒன்பதாம் அதிகாரம் ( ஐந்தெழுத்தருள் நிலை)**
  ஐந்தெழுத்தாகிய திருவருளின் இயல்பு
- **பத்தாம் அதிகாரம் (அணைந்தோர் தன்மை)**
  சீவன் முத்தரின் தன்மை

- **வினாவெண்பா**
  - சிவப்பிரகாச நூலின் சாரமாக அமைந்த நூலாகும்
  - 13 வெண்பாக்களால் ஆனது
  - வினா விடை முறையில் சைவ சித்தாந்த மெய்ப்பொருளைத் தெளிவுபடுத்துகிறது.
  - குருவாகிய மறைஞான சம்பந்தரிடம் சித்தாந்த உண்மைகளை வினாக்களாகக் கேட்டு விடையறியும் வகையிலுள்ளது.
  - பொற்றிப்பல்றொடை

- **போற்றிப்பஸ்றொடை**
  - பல்றொடை வெண்பாவாலான "இந்நூல் போற்றி போற்றி" என வருதலால் இப்பெயர் பெற்றது.
  - இறைவன் ஆன்மாவின் பாசத்தைக்கெடுத்து ஆட்கொள்ளும் தன்மையும் ஞானச் சாரியனால் ஆட்கொள்ளப்படும் உயிர் இன்பநிலை எய்துவதும் விளக்கப்பட்டுள்ளது.

- **கொடிக்கவி**
  - கொடியேற்ற உற்சவத்தின் தத்துவக் கருத்துக்கள் ஐந்து பாடல்களில் விளக்கப்பட்டுள்ளன.
  - சிதம்பரத்தில் திருவாதிரை விழாவன்று ஏறாது நின்ற கொடியை ஏற்றுவதற்காகப் பாடப்பட்டது.

- **நெஞ்சுவிடுதூது**
  - உமாபதி சிவாசாரியார் தம் குருவிடம் தமது உள்ளத்தைச் செலுத்தித் தம்மை ஒப்படைத்து உபதேச அனுபூதி பெற்றமையை விளக்குகிறது.
  - 129 கண்ணிகளைக் கொண்டது.
  - ஞானாசிரியர் பாசநீக்கம் செய்யும் திறன் தசாங்கம், புறச்சமய மறுப்புக்கள் தத்துவங்கள், உபதேசங்கள்.
  - தலைவனாகிய இறைவனிடம் தலைவியாகிய ஆன்மா அன்னத்தைத் தூதாக விட்டு தனது இறைகாதலினூடாக சைவசித்தாந்த தத்துவக் கருத்துக்களை விளக்கிக் கூறுகின்றது.

- **உண்மை நெறி விளக்கம்**
    - சிவப்பிரகாசம் நூலில் கூறப்பட்ட தசகாரியங்களுக்கு (சத்தி நிராதம் அடைந்தோர் தத்துவரூபம், தத்துவதரினம், தத்துவசுத்தி, ஆன்மரூபம், ஆன்மதரிசனம், ஆன்மசுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம் சிவபோகம்) விளக்கம் கூறுமுகமாக எழுதப்பட்டது.

- **சங்கற்ப நிராகரணம்**
    - பிறசமயக் கொள்கைகளைக் குறிப்பிட்டு அவற்றை மறுக்கும் வகையில் எழுதப்பட்டுள்ளது.
    - ஆயிரம் அடிகளைக் கொண்டது.

**03. உமாபதி சவாசாரியார் அருளிய வேறு நூல்களைக் குறிப்பிடுக.**

- கோயிற்புராணம்
  - சிதம்பிரத்தின் சிறப்புக்களைக் கூறும் நூல்
- சேக்கிழார்புராணம்
  - சேக்கிழார் பெருமானது சைவப்பணிகளைச் சிறப்பித்துப் பாடப்பட்டது
- திருத்தொண்டர் புராணம்
  - அறுபத்து மூன்று நாயன்மார்களின் இறை காதலை வெளிப்படுத்துவது
- திருமுறைகண்டபுராணம்
  - பன்னிரு திருமுறைகள் தொகுக்கப்பட்ட வரலாற்றினைக் கூறுகிறது
- தேவார அருண்முறைத்திரட்டு
  - மூவர் தேவாரங்களிலும் காணப்படும் சைவ சித்தாந்தக் கருத்துக்களைத் தொகுத்துக் கூறுவதாக அமைந்துள்ளது
- திருப்பதிகக் கோவை
  - சைவத்திருப்பதிகங்களின் சிறப்பக்களை விபரிக்கிறது
- திருப்பதிக் கோவை
  - திருப்பதியில் எழுந்தருளியுள்ள திருமாலின் சிறப்புக்களை உரைக்கின்றது
- சிவநாமக்கலிவெண்பா
  - கலிவெண்பாவில் பாடப்பட்ட சிவதோத்திரங்கள்
- பௌட்கராகம் வியாக்கியானம்
  - பௌட்கரம் என்ற ஆகமத்துணை நூலுக்கு வழங்கப்பட்ட விருத்தியுரை
- சதரத்ன சங்கிரகம்
  - வடமொழியில் அமைந்துள்ள சங்கத நூலுக்குத் தமிழில் செய்யப்பட்ட உரை
- குஞ்சிதாங்கிரித்தவம்
  - தில்லை நடராஜப்பெருமானது சிறப்புக்களை வடமொழியில் கூறும் நூல்

## 15
## சைவசித்தாந்த மெய்ப்பொருட் கோட்பாடுகள்

- சைவசித்தாந்தம் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள் பற்றி விளக்குகிறது.
- அளவையியல் நெறிமுறைகள், சத்காரிய வாதம் என்னும் அடிப்படையில் உலகப் பொருட்களை 3 பிரிவுகளாக வகுத்துள்ளது.
  1. வரையறையில்லாத அறிவுடைய பொருள் - பதி
  2. வரையறை உள்ள அறிவுடைய பொருள் - பசு
  3. அறியும் இயல்பற்ற சடப்பொருள் - பாசம்
- பதி - சத்து, சித்து

  பசு - சதசத்து, சிதசித்து

பாசம் - அசத்து, அசித்து

- முப்பொருட்களும் அநாதியானவை, நித்தியமானவை
- முப்பொருட்களுக்குமிடையிலான தொடர்பினை சைவசித்தாந்தம் வியாபகம், வியாப்பியம், வியாத்தி எனக் கூறுகிறது.

**01. சைவசித்தாந்தம் கூறும் பதி, பசு, பாசம் என்பபவற்றை விளக்குக.**

**1. பதி இறை, கடவுள், பரமசிவன், தலைவன்**

- **இருநிலைகள்** - பொது இயல்பு – தடத்தலக்கணம்
  - சிறப்பியல்பு – சொரூபலக்கணம்
- **சொரூபலக்கணம்**
  ஊரிலான் / பேரிலான் / குணமிலான் / குறியிலான், போக்கிலான் / இப்படியானவன் / இந்நிறத்தவன் இவ்வண்ணத்தவன் இவன் என எவராலும் சொல்ல முடியாது. (சிவப்பிரகாசம் சொல்கிறது)

- **தடத்தலக்கணம்**
  ஆன்மாக்கள் மீது கொண்ட பெருங்கருணை காரணமாக அநாதியாகவே மலங்களால் பீடிக்கப்பட்ட அவற்றின் துன்பங்களைப் போக்கி அருள் செய்வதற்காக எழுந்தருளும் நிலை
  அருவம், உருவம், அருவுருவம் என்னம் முத்திருமேனிகளுடாக ஐந்தொழில்களை செய்வான். (அருவம், உருவம், அருவுருவம்) (படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்)

- பதி சத், சித், ஆனந்தம் என்னும் இயல்பினை உடையது (சச்சிதானந்தம்)
  இம்மூன்றினுள்ளும் எண்குணங்கள் அடங்குகின்றன.
  (தன் வயத்தனால், தூய உடம்பினனாதல், இயற்கை உணர்வினனாதல், மற்றுமுணர்தல்)

- மூன்று வகைப் பேதங்கள்
  1. அபேத நிலை - இறைவன் உலகங்களும் உயிர்களுமாக நிற்கும் நிலை
  2. பேதநிலை - இறைவன் தானாக அல்லது வேறாக நிற்கும் நிலை
  3. பேதாபேத நிலை- இறைவன் அவையே தானாக நிற்கும் நிலை

**2. பசு – ஆன்மா, உயிர், ஜீவன், தேகி, உள்ளம், சதசத்து, சித்தசித்து**

- பசு – பாசத்தால் பந்திக்கப்பட்டது.
- அநாதியானது, அழிவில்லாத நித்தியப்பொருள்
- எண்ணிக்கையிற்பல
- சரீரந்தோறும் வெவ்வேறு வகையாய் இருக்கும்.
- சார்ந்ததன் வண்ணமுள்ள பொருள்
- பாசத்தோடு சேர்ந்து நிற்கும் நிலை ⟶ பெத்த நிலை
  பதியோடு சேர்ந்து நிற்கும் நிலை ⟶ முத்தி நிலை
- ஆன்மாவின் மூன்று அவத்தைகள்

1. கேவலாவத்தை - ஆணவமலத்தோடு இயைந்து அறியாமையில் மூழ்கி நிற்கும் நிலை
2. சகலாவத்தை - உடம்பை ஏற்கும் உயிர் மலபந்தங்களுக்கு உட்பட்டு நிற்கும் நிலை
3. சுத்தாவத்தை - இறைவன் திருவருளுக்கு ஆகும் நிலை

- ஆன்மாக்கள் பெத்த நிலையில் மூன்று வகைப்படும். மலங்களினடிப்படையிலாகும்.

1. சகலர் - திரிமலத்தார், ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையுடையவர்கள்
2. பிரளயாகலர் - ஆணவம், கன்மம் ஆகிய இரு மலங்களையுடையவர்கள்
3. விஞ்ஞானகலர் - ஆணவ மலம் மட்டும் உடையவர்கள்

- சகலாவத்தை நிலையிலும் கேவலாவத்தை நிலையிலும் 5 காரியாவத்தைகளை உடையன.

1. சாக்கிரம் - நனவு நிலை
2. சொப்பனம் - கனவு நிலை
3. சுழுத்தி - உறக்க நிலை
4. துரியம் - பேருறக்க நிலை
5. துரியாதீதம் - உயிர்ப்படங்கல் நிலை

- வினைகளைப் புரிவதன் மூலம் பிறவியெடுக்கும்
- இறுதி இலட்சியம் - வீடுபோது
- நல்வினைப்பயனால் இறுதி இலட்சியத்தை அடைய முயற்சிக்கின்றன.
- இருவினை ஒப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் இறைவனடி சேருகின்றன.

**3. பாசம் - தளை, கட்டு, மலம், பந்தம், அசித்து**

தளை, கட்டு, பந்தம் - உயிர்களைக் கட்டி வைத்திருத்தல் மலம் - உயிரை மாசுப்படுத்துதல்

- ஆன்மாவைப் பற்றும் சடத்தன்மையுள்ள, அறிவற்ற நித்தியமான பொருள்கள்
- பாசத்தில் அடங்குவன – ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்கள்
- ஆன்மாவை அநாதியாகப்பற்றியுள்ளதால் மூலமலம் சகசமலம் கன்மமும் மாயையும் இடையிடையே வந்து செயற்கையாகக் கூடுவதால் ஆகந்துக மலம் எனப்படுகின்றன.

**4. ஆணவம் - தளை, தடை, பிணி, ஆள்**

மூலமலம், சகசமலம், இருண்மலம் எனவும் அழைக்கப்படும்.

- ஆணவம்
  - உயிர்களை மயக்கி அணுத்தன்மைப் படுத்துவது
  - சிற்றறிவும் சிறுசெயலையும் உண்டாக்குதல்
- சகச மலம் - உயிர்களுடன் சேர்ந்தே இருப்பது
- தன்னையும் காட்டாது பிறபொருளையும் காட்டாது. (இருண்மலம்) ஆணவம் இருளிலும் கொடியது
- ஆன்மாக்கள் வினைகளைப் புரிந்து பிறவித்துன்பத்தை அனுபவிப்பதற்குக் காரணம்.
- உயிரின் அறிவு, இச்சை, செயல் ஆகியவற்றை மறைத்து நிற்கும்.
- எண்குண்ங்கள்

1. விகற்பம் - தன்னை விடப்பிறர் ஒவ்வாரெனல்
2. கற்பம் - பிடித்ததைப் பிடித்திருத்தல்
3. குரோதம் - கோபம் கொண்டு நினைத்தல்
4. மோகம் - ஒன்றிற்கு ஆசைப்படுதல்
5. கொலை - கொல்லுதல்
6. அஞர் - எப்பொழுதும் துக்கப்படுதல்
7. மதம் - அகங்காரம் மேலிடுதல்

8. நகை - சிரித்தல்

- ஆன்மாக்களின் கேவலநிலை, சகல நிலை இரண்டிலும் ஆன்மாக்களைப் பந்தித்து நிற்கும். சுத்த நிலை என்னும் முத்திப்பேற்றில் வறுத்த வித்துப் போன்று வலி கெட்டு நிற்கும்.
- செம்பிற் களிம்பு போல உயிருடன் காணப்படும்.

## 5. கன்மம்

- கன்மம் ⟶ வினை, செயல்
- மனம், வாக்கு, காயம் என்பவற்றால் செய்யப்படுவது
- இன்பதுன்பம் தரும் புண்ணிய பாவத்தின் வடிவம்
- ஆன்மாக்கள் மாயையில் ஒடுங்கும் போது கன்மமும் மாயையில் ஒடுங்கும்

- **கன்மத்தின் செயல்கள்**
  1. இருத்தல் - இந்திரிய வழிச் செல்லுதல்
  2. கிடத்தல் - அவ்வழியில் ஒங்கி நிற்றல்
  3. விடுதல் - முயலுதல்
  4. இயற்றல் - இதவிகிதம் செய்தல்
  5. பரநிந்தை- பிறர்பழி கூறல்
  6. மேவல் - பல பிறப்பகளில் மேவல்

- **மூவகைக் கன்மங்கள்**
  1. சஞ்சிதம் - முன் செய்த வினை – எஞ்சிய வினை
  2. பிராரத்தம் - முன்வினைப்பயனை இப்பிறவியில் அனுபவித்தல்
  3. ஆகாமியம் - பிராரத்த கன்மத்தை அனுபவிக்கும் போது செய்யும் புதிய வினைகள்

- **அனுபவத்திற்கு வரும் போது 3 வகை**
  1. ஆதி தெய்வீகம் - தெய்வம் காரணமாக வரும் கன்மம்
  2. ஆதி பௌதீகம் - பஞ்ச பூதங்களால் வரும் கன்மம்
  3. ஆதி ஆத்மீகம் - உயிர்களால் வரும் கன்மம்

- ஆனவத்துக்கு அடங்கிச் செய்யும் வினை – தீவினை
  ஆணவத்தை அடக்கி ஆன்மாவை ஈடேற்றும் செயல்கள் - நல்வினை
  நல்வினை ⟶ சிவநல்வினை, பசுநல்வினை
  தீவினை ⟶ பசுத்தவினை, சிவத்தீவினை

- வெறுவினை ⟶ சமைத்தல், ஓவியம் வரைதல், தைத்தல் போன்றன

- பற்றற்ற வினை ⟶ எல்லாம் அவன் செயல் என நினைத்து திருவருள் துணைக் கொண்டு செய்யும் வினை

## 6. மாயை

- ஒடுங்குவதற்கும் தோன்றுவதற்கும் காரணமான பொருள்
- மாயை சுத்தமாயை, அசுத்தமாயை, சுத்தாசுத்த மாயை என மூன்று வகைப்படும்.
  1. சுத்தமாயை ⟶ சிவதத்துவம் - 05 – நாதம், விந்து, சதாக்கியம், ஈசுரம், சுத்தவித்தை
  2. அசுத்தமாயை ⟶ வித்தியாதத்துவம் - 07 – காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன் மூலப்ரகிருதி
  3. சுத்தாசுத்தமாயை ⟶ ஆன் மதத்துவம் - 24 -

அந்தக்கரணங்கள்
தன்மாத்திரைகள்
ஐம்பொறிகள்
கனமேந்தியங்கள்
பஞ்சபூதங்களா

- மாயா காரியங்கள் - தனு, கரண, புவன, யோகம்
- உலகத் தோற்றத்துக்கு முதற்காரணம் மாயை
- சுத்தமாயை ஆகிய சிவதத்துவங்கள் ஆன்மா மெய்யறிவு விளக்கம் பெற உதவுகின்றன.
- ஆன்மா முத்தியடையும் வரை விடிவாமளவும் விளக்குப் போல மாயை உதவி புரிகிறது.

**02. சைவசித்தாந்தம் கூறும் முத்தி, முத்திக்கான மார்க்கங்கள் என்பவற்றைச் சுருக்கமாக விளக்குக.**

- **முத்தி**
  மலபந்தங்களிலிருந்து விடுபட்டு இறைவனை அடைந்து பேரின்பப் பெருவாழ்வைப் பெறுதல்.
  - இறைவனை திருவருளால் ஆன்மா முத்தியடையும்
  - இருவினை ஒப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம்
  - இருவினை ஒப்பு ⟶ ஆன்மா நல்வினை, தீவினை ஆகியவற்றினும் அவற்றின் பயன்களில் விருப்பு வெறுப்பு இன்றி, இரண்டையும் ஒரே தன்மையாகக் கருதல் ஆகும்.
  - மலபரிபாகம் ⟶ ஆன்மாவை இறுகப்பற்றியுள்ள ஆண்வமலத்தின் பலம் தேய்ந்து வலிமைகெடுதல்.
  - சத்திநிபாதம் ⟶ திருவருட் சக்தி ஆன்மாவில் படிந்து அதனை தன்வயப் படுத்தி நிற்றல்
  - இந்நிலையில் இறைவன் குருவாகி வந்து ஆன்மாவின் பக்குவநிலைக்கேற்ப ஆண்டுகொணடருளுவார்.
- ஆன்மா பிறப்பு இறப்பு எனும் தொடச்சியிலிருந்து விடுபட்டு இறைவன் திருவடியை அடைந்து இரண்டறக் கலந்து பேரின்பம் பெறுதல் முத்தி நிலை ஆகும்.
- முத்திநிலை அனுபவிக்கத்தக்கதே தவிர வாக்கினாற் கூற முடியாதது, மனதினால் எண்ண முடியாதது.
- முத்தி – தாடலை யோற் கூடல் - (தாள் + தலை)
- **முத்திக்கான மார்க்கங்கள்**
  **மும்மலங்களிலிருந்து விடுபடுதல்**
  1. சரியை, கிரியை, யோகம், ஞானம் / தீட்சை
  2. ஒழுக்கம் இறைபணி நிற்றல்
  3. **இறைபணி நிற்றல்**
     - அகப்பூசை, புறப்பூசை
     - மந்திரசெபம்
     - திருக்கோயில் வழிபாடு
     - அடியார் வழிபாடு
     - சமூகத்தொண்டு
  4. விரதங்கள்
  5. குருலிங்க சங்கம வழிபாடு

**03. சைவசித்தாந்தம் கூறும் தடத்த நிலையில் இறைவன் ஆற்றும் ஐந்தொழில்களுக்கும் விளக்கம் கூறுக.**

- **படைத்தல் (சிருஷ்டி)**

- உயிர்களுக்கு வேண்டிய உடம்பு உணர்த்துவதற்கு வேண்டிய கருவி, காரணங்கள், வாழ்க்கைக்கு வேண்டிய இடங்கள் நுகர்ச்சிக்கு வேண்டிய பொருட்கள் (தனு, கரண, புவன, போகம்) என்பவற்றைப் படைத்தல்.
- சூக்குமமான நிலையில் உள்ளவற்றைத் தூலநிலைக்குக் கொண்டு வருதல்.
- படைப்புக்கு – முதற்காரணம் - மாயை
  நிமித்தக் காரணம் - இறைவன்
  துணைக் காரணம் - சிவசக்தி

- **காத்தல் (திதி)**
  தோற்றுவிக்கப்பட்ட உலகு, என்பவற்றை உரிய கால எல்லை வரையில் காப்பாற்றி கன்ம நுகர்ச்சிக்குத் துணை செய்தல்.

- **அழித்தல் (சங்காரம்)**
  பல பிறவிகளில் பிறந்திறந்து உழலும் உயிர்களை இளைப்பாற வைத்தல் ஆகும்.

- **மறைத்தல் (திரௌபவம்)**
  இரு வினைகளை ஒன்றாக எண்ணும் நிலையினை வருவித்து மலங்களை முதிர்விக்கும் அருட்செயல்

- **அருளல் (அனுக்ரகம்)**
  உயிர்களின் பக்குவநிலையில் அவற்றின் மலபாசத்தை ஒழிக்கும் வீடுபேறு எனப்படும் முத்தியை அருளுவது

**04. சைவசித்தாந்தம் "பதியின் உண்மைத்தன்மை" பற்றிக் கூறும் கருத்துக்களைத் தருக.**

- வேதாகமங்களை ஆப்தவாக்கியமாகக் கொண்டு கடவுள் என ஒரு பொருள் உண்டு எனக் கூறப்படுகிறது.
- காட்சிக்குப் புலனாகக் கூடிய உலகம் உண்டு என்ற உண்மையைக் கொண்டு அதனைப் படைத்த ஒருவனும் உளன். அவன் தான் இறைவன் என நிரூபித்தல்.
  பானையைப் படைத்த குயவன் ஒருவன் இரப்பது போல் உலகைப் படைத்த இறைவனும் உள்ளான் என்பதை உணர்த்துதல்.

- காரிய நிகழ்ச்சிக்கு வேண்டப்படும் காரணங்கள் மூன்று ஆகும்.

| <u>நிகழ்ச்சி</u> | | <u>பானை</u> | | <u>உலகம்</u> |
|---|---|---|---|---|
| முதற்காரணம் | - | மண் | - | மாயை |
| துணைக் காரணம் | - | திரிகை | - | சிவசக்தி |
| நிமித்தக் காரணம் | - | குயவன் | - | இறைவன் |

- குடை பல்வேறு பகுதிகளை உடையது. அப்பகுதிகளை இணைப்பதற்கு ஒருவன் தேவை அதேபோன்று உலகப் பகுதிகளையெல்லாம் இணைப்பதற்கு ஒருவன் தேவை அவனே இறைவன்.
- கன்மம் அறிவற்ற பொருள் அது தன்னைச் செய்த ஆன்மாவைச் சென்று அடையாது. எனவே ஒரு ஆன்மா செய்த கன்மத்தை ஆன்மாவிடமே சேர்ப்பிப்பதற்கு அறிவுடைய ஒருவன் தேவை அவனே இறைவன்.

## 16
## தீட்சை

- **தீட்சை**

- ➢ பாசத்தைக் கெடுத்து ஞானத்தைக் கொடுக்கும்
- ➢ வீடுபேற்றுக்கான வழிகளில் ஒன்று

- தீட்சையளிக்கும் போது தகுதி சமய, விசேட, நிருவான மூன்று தீட்சைகளும் பெங்ஞு ஆசாரிய அபிடேகம் பெற்ற குருவுக்கே உண்டு.
- தீட்சாகுரு தமது பார்வை, ஸ்பரிஷம், வாசகம், பாவனை என்பவற்றாலோ ஆகம விதிமுறையினாலோ அஞ்ஞானத்தை நீக்கி ஞானத்தை அளிப்பார்.

- **தீட்சையின் 3 வகைகள்**

  (1) சமய தீட்சை (2) விசேட தீட்சை (3) நிர்வாணதீட்சை

- **சமய தீட்சை**
  - ➢ சைவசமயி ஆகுவதற்காக அளிக்கப்படும் தீட்சை
  - ➢ பிரவேச தீட்சை என அழைக்கப்படும்
  - ➢ சிவ சின்னங்களை அணியும் தகுதியை அளிப்பது
  - ➢ சிவாகமங்களை ஓதி உணரும் தகுதியை அளிப்பது
  - ➢ சரியாபாதத்தில் நிற்கும் உரிமை கிட்டும்

- **விசேட தீட்சை**
  - ➢ சிவலிங்க பூசை செய்வதற்கான தகுதியை அளிப்பது
  - ➢ சிவபெருமானின் அருவுருவத்திருமேனியை வணங்குவர்
  - ➢ கிரியை, யோக மார்க்கங்களுக்கு உரியவர்

- **நிர்வாண தீட்வை**
  - ➢ சமய தீட்சை, விசேட தீட்சை என்பவற்றில் மேம்பட்டது நிருவாண தீட்சை
  - ➢ நிருவாணதீட்சையின் உள்ளார்ந்த பொருள் மோட்சத்தைத் தரவல்ல தீட்சை என்பதாகும்.
  - ➢ சமய தீட்சை, விசேட தீட்சை என்பவற்றை பெற்று முறையாக ஆசாரசீலராக அனுட்டானம் செய்து வந்தவரே நிருவாண தீட்சையைப் பெறும் தகுதி வாய்ந்தவராவார்.
  - ➢ மெய்யினை மெய் என உணரும் நிலை தானாக எய்தப்பெறும்
  - ➢ முப்பொருள் உணரும் தன்மை
  - ➢ உயரிய ஞான நிலைக்கு இட்டுச் செல்லும் நிலை கிடைக்கும்

- **இரண்டு வகை**
  1. சத்தியோ நிர்வாண தீட்சை

     தீட்சை பெற்றவுடன் முத்தி பெறுவதாகும்
  2. அசத்தியோ நிர்வாணதீட்சை

     தீட்சை பெற்றவர் (தேகாந்தத்தில்) உயிர் பிராரத்த வினையை அனுபவித்து உடம்பைப் பிரியும் காலத்தில் (முத்திப் போறு அடையும் வகையில்) செய்யப்படுவதாகும்.

- **நிருவாணதீட்சை செய்யும் முறைகள்**

  **1. நயனதீட்சை**

  குரு தன்னைச் சிவமாகப் பாவித்து மாணாக்களைக் கண்ணால் நோக்கி அவன் செய்த கருமங்களை அழித்தொழிப்பதாகும்.

  **2. ஸ்பரிச தீட்சை**

  குரு தன் வலக்கையைச் சிவன் கையாகப் பாவித்து தீட்சை பெறுவோனின் தலையில் வைத்து தீட்சை அளித்தல் - சிவ அத்தம் வைத்தல் என்றும் கூறுவர்.

3. **வாசகதீட்சை**
   - குரு உபதேசம் என்றும் கூறுவர்.
   - மகாமந்திரமான திருவைந்தெழுத்து உள்ளிட்ட ஏனைய மந்திரங்களையும் தீட்சை பெறுவோனின் செவியில் உபதேசித்தல்.

4. **மானசதீட்சை**
   - பாவனை தீட்சை என்றும் கூறுவர்.
   - குரு தன்னைச் சிவமாகப் பாவித்து யோக முறையில் அவன் மனதில் புகுந்து ஆன்மாவை உடலிலிருந்து பாவனையில் கொண்டு வந்து தனது ஆன்மாவில் சேர்த்து சிவமானதாகப் பாவித்து மீளவும் ஆன்மாவை அவன் உடலில் சேர்த்தல்.

5. **யோக தீட்சை**
   - குரு சீடனைச் சிவயோகம் பயிலச் செய்தல்.
   - குரு தமது யோக பலத்தால் தீட்சை பெறுவோனின் இதயத்தில் புகுந்து ஆன்மாவைச் சிவத்தோடு சேர்த்தல்.

6. **சாத்திர தீட்சை**
   சைவாகமங்களின் பொருளையும் சாத்திர உண்மைகளையும் சீடனின் காதில் உபதேசித்தல்.

7. **ஔத்திரி தீட்சை**
   மேற்சொன்ன ஆறு முறைகளையும் தழுவி, ஓமகுன்டம் மண்டலம் முதலிய சாதனங்கள் அமைத்து மந்திரம், கிரியை, பாவனை முதலியவற்றோடு தீட்சை அளித்தல்
   இது இரண்டு வகைப்படும் அவை
   (1) கிரியாவதி – ஓமம், குண்டம் முதலியவற்றை அமைத்து கிரியைகளோடு செய்வது.
   (2) ஞானாவதி – ஓம குண்டங்களை மனதால் கற்பனை செய்து தீட்சை புரிதல்

- **தீட்சை அளிப்பவர்க்கு இருக்க வேண்டிய தகைமைகள்**
  - ஆசாரிய அபிடேகம் செய்து குருப்பட்டம் பெற்றவர்.
  - இல்லறம் பேணுபவர்.
  - உடல், உளக்குற்றமற்றவர்.
  - கல்வி ஞானம், ஒழுக்கம் நிரம்பப் பெற்றவர்.
  - சைவ நாற்பாதங்களில் பயிற்சி பெற்றவர்.
  - சைவ பாரம்பரியத்தையும் ஒழுக்கநெறி முறைகளையும் போதிப்பவராக இருத்தல்.

- **தீட்சை பெற்றவர் ஒழுக வேண்டிய நெறிமுறைகள்**
  - இவை சிவநெறி ஒழுக்கங்கள் எனப்படும்.
  - ஐம்பெரும்பாவங்களிலிரந்து விலகியிருத்தல்.
  - தவம், ஈகை, இறைவணக்கம், பெரியோரைப் பேணுதல், மெய்ப்பொருளைக் காண விழைதல்.
  - திருமுறை ஓதல் தோத்திரம் பாடுதல், தியானம் செய்தல், புராணபடனம் செய்தல், ஆலயத்தொண்டு செய்தல்.
  - சைவாசாரம், குருபக்தி உடையவராய் இருத்தல்
  - திரிகரண சுத்தியுடையவராயிருத்தல்
  - முத்தியின்பத்தை இலக்காகக் கொள்ளல் வேண்டும்.

# 17
# பஞ்சாட்சர மந்திரம்

- அகந்தே அணியும் சிவசின்னம்
- பஞ்ச + அட்சரம் - ஐந்தெழுத்து – திருவைந்தெழுத்து
- சிவபெருமானை உணர்த்தும் மந்திரம்
- ஆன்மாக்களைக் காக்கும் மந்திரம்
- வேதங்கள் ஆகமங்கள், திருமுறைகள், சைவசித்தாந்த சாத்திரங்கள் பஞ்சாசரத்தின் சிறப்பைக் கூறி நிற்கின்றன.
- நம்பனாமம், நாதனாமம், நக்கனாமம், நந்திநாமம், வரதனாமம் என்னும் பெயர்களாலும் அழைக்கப்படும்.

**01. தூல பஞ்சாட்சரம், சூக்கும பஞ்சாட்சரம் என்பவற்றை விளக்குக.**

- ஸ்ரீ பஞ்சாட்சரம் தூல பஞ்சாட்சரம், சூக்கும பஞ்சாட்சரம் என இரண்டு வகைப்படும்.

**(1) தூல பஞ்சாட்சரம்**

- ➢ நகராதி பஞ்சாட்சரம் எனவும் அழைக்கப்படும்
- ➢ உபாய மார்க்கத்தினருக்குரியது - இவ்வுலக இன்பங்களை நாடுவோர்க்கு உரியது
- ➢ நமசிவாய என்பதாகும்.

ந – திரோதான சக்தி (பிறவிப்பிணியிலே ஆன்மாக்களைச் சேர்க்கும் திரோதான சக்தி

ம – மலம்

சி – சிவம்

வா – திருவருட்சக்தி

ய – ஆன்மா

**(2) சூக்கும பஞ்சாட்சரம்**

- ➢ சிகராதி பஞ்சாட்சரம் எனவும் அழைக்கப்படும்
- ➢ முத்தி மார்க்கத்தினர் ஓத வேண்டியது

சி – சிவம்

வா – திருவருட்சக்தி

ய – ஆன்மா

ந – திரோதான சக்தி

ம – மலம்

**02. பஞ்சாட்சர மந்திரம் ஓதும் முறையினைக் கூறுக.**

- வடக்குமுகமேனும் கிழக்கு முகமேனும் இருத்தல் வேண்டும்.
- மரப்பலகை, இரத்தினக்கம்பளம், புலித்தோல், மான்தோல் என்பவற்றில் ஒன்றை ஆசனமாகப் பயன்படுத்த முடியும்.
- முழந்தாள் இரண்டையும் மடக்கிக் காலோடு காலை அடக்கி, இடைத்தொடையினுள்ளே வலப்புறக் காலை வைத்து இரண்டு கண்களும் மூக்கு நுனியைப் பொருந்த நிமிர்ந்திருந்து கொண்டு ஓதுதல் வேண்டும்.
- தூய்மையான இடத்தில் உடற்தூய்மையுடன் ஓதுதல் வேண்டும்.
- மாமிசபோசன இல்லாதவராய், சைவாசாரமுடையவராய் சிவதீட்சை பெற்றவராய் இருத்தல் வேண்டும்.
- தன் செவிக்குக் கேட்பின் மத்திமம் பிறர் செவிக்குக் கேட்பின் அதமம் மானசமாக ஓதுல் உத்தமம்.

# 18
# திருநீறு

- சிவ சின்னங்கள் சிவபெருமானைக் கறித்து நிற்பன.
- சிவசின்னங்களில் திருநீறு ஒன்றாகும்.
- சிவசின்னங்களைக் காணும் போது அவற்றைச் சிவமாகக் கருதுதல் வேண்டும்.
- திருநீறு, விபூதி, பசிதம், பஸ்மம், இரட்சை, ஷாரம் எனும் பெயர்களால் அழைக்கப்படும்.
- திருநீறு உத்தம திக்குகளான வடக்கு, அல்லது கிழக்கு நோக்கித் தரித்தல் வேண்டும்.
- திருநீற்றில் மகிமையை அப்பர், சம்பந்தர் மெய்ப்பொருள் நாயனார் ஆகியோரிக் வரலாறுகளில் அறிய முடிகிறது.
- சம்பந்தர் அருளிய திருநீற்றுப்பதிகத்தில் திருநீற்றின் மகிமைகள் கூறப்பட்டுள்ளது.
- குரு, சிவனடியார் முதலியோரிடமிருந்து திருநீற்றை அடக்கத்துடன் அவர்களை வணங்கி இரு கைகளை நீட்டி வாங்கி அணிதல் வேண்டும்.
- திருநீற்றை அணியும் போது ''சிவசிவ'' என்று உச்சரித்து அணிதல் வேண்டும்.
- ''நீறில்லா நெற்றி பாழ்'' என்று ஔவையார் சிறப்பித்துள்ளார்.

**01. திருநீற்றுக்கு வழங்கப்படும் பெயர்களையும் அதற்கான காரணங்களையும் குறிப்பிடுக.**

1. விபூதி - அழியாத ஞானத்தையும் செல்வத்தையும் கொடுத்தல் - மேலான செல்வம்
2. திருநீறு - தீவினை அனைத்தையும் நீறாக்குவது
3. பஸ்மம் - பாவங்கைள எரித்து நீறாக்குதல்
4. இரட்சை - தன்னைத் தரித்த ஆன்மாக்களை இரட்சித்தல்
5. ஷாரம் - உயிர்களது மும்மலங்களையும் நீக்குதல்

**02. திருநீற்றின் நான்கு வகைகளையும் குறிப்பிடுக.**

1. கற்பம் - குற்றமில்லாத பசுவின் சாணத்தை முறைப்படி அக்கினியால் சுட்டு வெண்ணீறானதை எடுத்து மலர்கள் இட்டுப்பத்திரப் படுத்தியது.
2. அனுகற்பம் - சித்திரை மாதத்தில் காட்டிலே உலர்ந்து கிடக்கின்ற சாணியை அக்கினியாற் சுட்டுப்பத்திரப்படுத்தல்
3. உபகற்பம் - இரு மரங்கள் இணைந்து உரோஞ்சுதலால் எரிந்து தானேயுண்டான நீறு
4. அகற்பம் - மலைகளிலும் நிலங்களிலும் இயற்கையில் விளைந்த திருநீற்றைச் சுத்தி செய்து எடுப்பது

**03. திருநீற்றைத் தரித்தல் எவ்வாறு அழைக்கப்படும் திருநீற்றைத் தரிக்கும் இருமுறைகளையும் விளக்குக.**

- விபூதி தாரணம் என அழைக்கப்படும்.
- உத்தூளனம், திரிபுண்டரம் என்னும் இருமுறைகள் ஆகும்.
- உத்தூளனம்
  - உத்தூளனம் என்பது பரவிப்பூசுதல் ஆகும்.
- திரிபுண்டரம்
  - திரிபுண்டரம் என்பது திருநீற்றை நீரில் குழைத்து மூன்று குறிகளாகத் தரித்தல் ஆகும்.
  - குறிகள் வளையாதும் இடையறாதும் ஒன்றையொன்று தொடாமலும் அகலாமலும் சம அளவு இடைவெளி விட்டு அணிய வேண்டும்.
  - சமய தீட்சை பெற்றவர்கள் மாத்திரம் தரிக்கத் தகுதியுடையவர்கள்.

- தலை நெற்றி, மார்பு, தொப்பூழ், முழந்தாள் இரண்டு, புயம் இரண்டு, முழங்கை இரண்டு, மணிக்கட்டுக்கள் இரண்டு, விலாப்புறம் இரண்டு, முதுகு, கழுத்து எனும் பதினாறு உறுப்புக்களும் ஆகும்.

**04. திருநீறு அணிவதன் பயன்கள்**

- மலத்தின் வலியைக் கெடுத்தல்.
- நோய்நீக்கம்
- மனவடக்கம் பேணுதல், மனமகிழ்ச்சி பெறுதல்.
- பாவங்களை நீக்குவதாலாகும்.
- அழகு, புகழ் தரும்
- சிவநெறி நிற்போரின் அடையாளம்.
- நிறைந்த செல்வத்தைத் தரும்.

## 19
## உருத்திராக்கம்

- சிவ சின்னங்களில் ஒன்று
- உருத்திர + அக்கம் ⟶ உருத்திரனது கண்
- உருத்திராக்கம் பற்றி மகாபுராணங்கள், உபபுராணங்கள், தலபுராணங்கள், உபநிடதங்கள், ஆகமங்கள், சைவத்திருமுறைகள், வைணவ திருவாய்மொழி, சித்தர் பாடல்கள் ஆகியன குறிப்பிடுகின்றன.
- திரிபுரத்து அரசர்களால் தமக்கு ஏற்பட்ட துன்பத்தை சிவபெருமானிடம் முறையிட்டபோது உருத்திரனது கண்களிலிருந்து உதிர்ந்த விழித்துளிகளிலிருந்து தோற்றம் பெற்றதால் உருத்திராக்கம் எனப் பெயர் பெற்றது.
- இறைவன் ஆன்மாக்களிடம் கொண்டுள்ள பெருங்கருணையையே நினைவூட்டுகிறது.
- உருத்திராக்கம் திருவருட்பேற்றின் அறிகுறி
- பிறபெயர்கள்
  (1) அக்கம் - சிவனின் கண்போல விளங்கி திருவருளை வழங்குவது
  (2) கண்மணி - சிவனின் கண்கிளிலிருந்து பொழிந்த முத்துப்போன்ற நீர் வடிவாய் உள்ளது
  (3) கண்டிகை - குற்றங்களையும் துன்பங்களையும் கண்டிப்பதால்
- சிவனடியார்களின் ஆபரணம் உருத்திராக்கம் என்பதால் “ஆரம் கண்டிகை” என்று சிறப்பிக்கின்றார்.
- உருத்திராக்கம் உயிரைச் சுத்திகரிக்கும் அதேவேளை மருத்துவ அடிப்படையில் உடலைச் சுத்திகரிக்கும் அதிசயங்களை உடையது
- ஆலயங்களுக்குச் செல்லும் போதும், விரதம் அனுட்டிக்கும் போதும், புண்ணிய தலயாத்திரை செய்யும் போதும், தீர்த்தம் அனுட்டிக்கும் போதும் உருத்திராக்கம் தரித்தல் பலன் தரவல்லது.
- சந்தியாவந்தனம், சிவமந்திர செபம், சிவபூசை, சிவத்தியானம் போன்ற காலங்களிலும் உருத்திராக்கம் தரித்தல் வேண்டும்.
- உருத்திராக்கத்தின் மேற்பாகத்தில் பிரமாவும், நடுப்பாகத்தில் உருத்திரனும் கீழ்ப்பாகத்தில் விஷ்ணுவும் இருப்பதாகவும் விளக்கம் கூறப்படுகிறது.
- உருத்திராக்கத்தை முறையாகத் தரிப்பின் இரு தோள்களிலும் சிகையிலும் இரு கைகளிலும் கழுத்திலும் ஒவ்வொரு காதிலும் தரித்தல் வழக்கமாகும்.
- தூய உள்ளம் உடையவரே தரித்தல் வேண்டும்.

**01. உருத்திராகத்தை முறையாக அணிந்தவர்கள் பெறக்கூடிய பயன்களைக் குறிப்பிடுக.**

- திருவருட் பேறு கிடைக்கும். பக்தி, ஞானம் பெருகும்.
- ஆன்மா சைவநெறியினின்றும் பிறழாது காக்கும் இரட்சை
- உடல் நலம் செல்வவளம் பெருகும்.
- நீண்ட ஆயள் கிடைக்கும்
- மறுமையில் இறையடியில் இன்பம் பெருகும்
- மனோசக்தி, ஆத்ம பலம் கிடைக்கும்
- பாவங்களைப் போக்கும்
- யாகப் பயனைத் தரவல்லது
- மருத்துவக்குணமுடையது என்பதால் உடல் வியாதிகளைக் குணப்படுத்தும்
- அக்கினியுடன் தொடர்புடைய சங்கடங்கள் ஏற்படாது.

## 20
## சைவ நாற்பாதங்கள்

- ஆன்மா மலபந்தங்களிலிருந்து விடுபடுவதற்குச் சைவ சித்தாந்தம் கூறும் பல வழிகளில் சைவ நாற்பாதங்களும் ஒன்றாகும்.
- ஆன்மாக்கள் படிமுறையில் முத்தி நிலைமையை நோக்கிச் செல்வதற்கு இவை உதவுகின்றன.
- இவை சாதனங்கள் முத்தி வழிகள் என நூல்கள் கூறுகின்றன.

**01. சைவநாற்பாதங்கள் பற்றிய பொதுவான விளக்கமொன்றைத் தருக.**

- சைவ நாற்பாதங்கள் - பதியாகிய பரமசிவத்தை அடையச் சைவ சமயிகள் அதாவது சிவவழிபாட்டு நெறியினர் பின்பற்றுவதற்குரிய நான்கு வழிகள் அல்லது மார்க்கங்கள் ஆகும்.
- சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பனவேயாகும். இவை முறையே ஒழுகுதல், வினைபுரிதல், கூடுதல், அறிதல் என்னும் கருத்துக்களை அவற்றின் வினையடிகள் உணர்த்துகின்றன.
- சரியை - தொண்டு வழி கிரியை - சடங்குவழி யோகம் - தியானவழி ஞானம் - மெய்யுணர்வு நெறி

**02. சரியை நெறி, கிரியை நெறி, யோக நெறி, ஞான நெறி பற்றிய சிறு விளக்கக் குறிப்புகள் தருக.**

1. **சரியை** - புறத்தொழிலால் உருவத்திருமேனியை வழிபடுதல்
    - இறைவனை எசமானாகக் கருதி வழிபடும் நெறி – தாசமார்க்கம்.
    - கோயில் தொண்டு, அடியவர் வழிபாடு பிரதான இடம் பெறுகிறது.
    - சாலோக முத்தி பெறப்படும்.
    - நாவுக்கரசர் பின்பற்றிய நெறி

2. **கிரியை** - புறத்தொழிலாலும் அகத்தொழிலாலும் அருவுருவத்திருமேனியை வழிபடுதல்.
    - அகவழிபாடும் புறவழிபாடும்

- நறுமண மலர் சூட்டல், தூபதீபம் காட்டுதல், நைவேத்தியம் செய்தல், அர்ச்சனை செய்தல்.
- சாமீப முத்திநிலை பெறப்படும்.
- திருஞான சம்பந்தர் பின்பற்றிய நெறி

3. **யோகம்** - அகப்பூசை மூலம் அருவத்திருமேனியை வழிபடுதல்.
   - புலனடக்கம், தியானம் என்னும் நெறிகளை உடையது.
   - அட்டாங்க யோகங்களை உடையது.
   - சாரூப முத்தி பெறப்படும்.
   - சுந்தர மூர்த்தி நாயனார் பின்பற்றிய நெறி.

4. **ஞானம்** - இறைவனை அறிவாலும் ஞான நெறியாலும் வழிபாடு செய்தல்.

- **தசகாரியச் செயற்பாடுகள்**
  - ஆன்ம தரிசனம் - ஆன்மசுத்தி - ஆத்மலாபம்
  - தத்துவரூபம் - தத்துவதரிசனம் - தத்துவசுத்தி
  - சிவரூபம் - சிவதரிசனம் - சிவயோகம் - சிவஞானம்

- **ஞானபூசை, ஞான வழிபாடு**
  - ஞான நூல்களை ஓதுதல்
  - பிறருக்கு ஓதுவித்தல்
  - ஞானநூற் பொருளைத் தக்க ஆசானிடம் கேட்டல்
  - தகுதியுடைவர்களுக்கு ஞான நூல்களை உரைத்தல்
  - ஞானநூற்பொருளைச் சிந்தித்தல்

  இவை கேட்டல், சிந்தித்தல், தெளிதல் என்பவற்றால் குறிப்பிடப்படுகின்றன
- சிவசாயுச்சிய முத்தி பெறப்படும்.
- மாணிக்கவாசகர் நின்ற நெறியாகும்.

**03. சைவநாற்பாதங்கள் பற்றிய சிவம் தொடர்புக் கோட்பாடு (உறவு நிலைக் கோட்பா), பயன் கோட்பாடு (ஆணவநீக்க அளவுக்கோட்பாடு) படிநிலை வளர்ச்சிக் கோட்பாடு (கனி வளர்ச்சிக் கோட்பாடு) உறுப்பமைப்புக் கோட்பாடு என்பவற்றை விளக்குக.**

1. **சிவம் தொடர்புக் கோட்பாடு அல்லது உறவு நிலைக்கோட்பாடு**
   - பசுவுக்கும் பதிக்குமிடையிலான தொடர்பு
   - சரியை - தாச மார்க்கம் - பதியைத் தலைவராகக் கொண்டு வழிபடுதல்
   - கிரியை - சற்புத்திரமார்க்கம் - தந்தை தாயாக ஏற்று வழிபடுதல்
   - யோகம் - சகமார்க்கம் - நண்பர் (தோழமை) வழிபாடு
   - ஞானம் - சன்மார்க்கம் - சற்குருவாக ஏற்று வழிபடுதல்

2. **பயன்கோட்பாடு அல்லது ஆணவ நீக்க அளவுக் கோட்பாடு**
   - முத்திக்குத்தடையாகவுள்ள ஆணவத்தின் வலிமையை ஒழித்தல். இதனை மலபரிபாகம் என்றும் சொல்வர்.
   - சரியை - ஆணவ வலி காற்பங்கு சரியும்
   - கிரியை - ஆணவமல வலி அரைப்பங்கு கெடுதியுற்றிடும்
   - யோகம் - ஆணவ வலி முக்காற்பங்கு சரிந்திடும்
   - ஞானம் - ஆணவம் முற்றும் வீழும்

3. **படிநிலை வளர்ச்சிக்கோட்பாடு அல்லது கனி வளர்ச்சிக்கோட்பாடு**

- சரியையிலிருந்து ஞானம் வரை ஒன்றிலிருந்து மற்றொன்று தொடர்ச்சியாக வளர்ந்து முழுமைபெறும் வழிகள் ஆகும்.
- விரும்பும் சரியை முதல் மெய்ஞ்ஞான நான்கும் அரும்பு மலர் காய் கனி போலன்றோ பராபரமே – தாயுமானவர்.
- கனி வளர்ச்சியுடன் ஒப்பிடுதல்.
- அரும்பான சரியை மலர் போலக் கிரியையை விரிந்து காய்போல படி நிலை வளர்ச்சி கண்டு இறுதியில் கனி போல முதிர்ந்து ஞானம் என்னும் முழுநிலை பெறுகின்றது.

**4. உறுப்பமைப்புக் கோட்பாடு**

- சைவ நாற்பாதங்கள் ஒவ்வொன்றிலும் ஏனைய பாதங்களின் கருத்துக்கள் சில உறுப்புகளாக அடங்கியுள்ளன. இதற்கிணங்க.
- சரியை - சரியையில் சரியை, சரியையில் கிரியை, சரியையில் யோகம், சரியையில் ஞானம்
- கிரியை - கிரியையில் சரியை, கிரியையில் கிரியை, கிரியையில் யோகம், கிரியையில் ஞானம்
- யோகம் - யோகத்தில் சரியை, யோகத்தில் கிரியை, யோகத்தில் யோகம், யோகத்தில் ஞானம்
- ஞானம் - ஞானத்தில் சரியை, ஞானத்தில் கிரியை, ஞானத்தில் யோகம, ஞானத்தில் ஞானம்

| | | |
|---|---|---|
| 01. ஞானத்தில் ஞானம் | - | ஆணவ வலியொடுக்கம் - 1002 |
| 02. ஞானத்தில் யோகம் | - | அத்துவித முத்தி (ஞானம்) |
| 03. ஞானத்தில் கிரியை | - | ஞானமாகிய செம்பொருள் |
| 04. ஞானத்தில் சரியை | - | தகைமை, ஞான வேட்கை, ஞாகப்பயிற்சி |
| 05. யோகத்தில் ஞானம் | - | ஆணவ வலி மடிவு – 752 (அபரஞானம்)<br>பதமுத்தி – சாரூபம் |
| 06. யோகத்தில் யோகம் | - | அருவ வழிபாடு |
| 07. யோகத்தில் கிரியை | - | முழுச்சோதி நினைத்திருத்தல் |
| 08. யோகத்தில் சரியை | - | தகைமைஈ, யோகத் தேர்ச்சி |
| 09. கிரியையில் ஞானம் | - | ஆணவலி கெடல் - 502<br>(அபரஞானம் - பதமுத்தி – சாமீபம்) |
| 10. கிரியையில் யோகம் | - | உருவ வழிபாடு |
| 11. கிரியையில் கிரியை | - | அரவுருவ வழிபாடு |
| 12. கிரியையில் சரியை | - | தகைமை – கிரியைத் தேர்ச்சி |
| 13. சரியையில் ஞானம் | - | ஆணவ வலிச்சரிவு 252<br>பதமுத்தி சாலோகம் |
| 14. சரியையில் யோகம் | - | உருவ வழிபாடு |
| 15. சரியையில் கிரியை | - | உருவ வழிபாடு: |
| 16. சரியையில் சரியை | - | தகைமை – தொண்டுகளில் அறிவு,<br>பயிற்சி, திறன், ஆர்வம், நாட்டம்,<br>ஆக்க மனப்பாங்கு |

## 21
## குரு லிங்க சங்கம வழிபாடு

- இந்து சமயம் கூறும் ஆன்மீக விடுதலைக்கான மார்க்கங்களில் குரு லிங்க சங்கம வழிபாடும் அடங்குகின்றது.
- குரு இலிங்க சங்கமத்தை ஆதாரமாகக் கொண்டு இறைவன் ஆன்மாக்களுக்கு அருள் புரிகின்றான்.
- குரு இலிங்க சங்கம வடிவில் இறைவனை வழிபடுதல் மதித்தல் முத்திப் பேற்றிற்கு வழிவகுக்கும்.
- சிவபெருமானை நாம் விரும்பிய வடிவங்களினூடாக வழிபடலாம் - அவை இறைவழிபாடு சார்ந்தவை ஆகும்.

**01. குரு இலிங்க சங்கம வழிபாடு என்பவற்றை விளக்குக.**

- குரு வழிபாடு

  குரு குற்றங்களை நீக்குபவர் / அஞ்ஞானத்தைப் போக்குபவர்

  குரு வித்தையாசான், சமயாசாரக் கிரியைகளைப் போதிப்பவர், யோக முறைகளில் பயிற்சி வழங்குபவர், தீட்சை அருளும் சற்குரு, சைவசமய சாத்திரங்களைப் போதிப்பவர்.
- ஞானம் அருளும் சான்றோரைக் குரு, ஞானகுரு, குருநாதர், சற்குரு அருளுரு என்றும் தெய்வம் என்று மதித்தலும் அவரை மனம் வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் வழிபடுதல் சைவ மரபு
- சிவபெருமானே குரு வடிவாய் எழுந்தருளி பிறவித்துன்பத்தை நம்மை ஆட் கொள்கின்றார்.
- சற்குரு நன்னெறி எது? தீயநெறி எது? என உணர்த்துபவர்.
- குருவின் அனுக்ரகத்தால் ஞானம் கிடைக்குமென சாந்தோகய உபநிடதம் ‘‘ஆசார்யவான் புருஷோதே’’ எனக் கூறுகிறது.
- குருவின் பூதவுடல் வாழ்வைத் துறந்த மாதம் தினம், நட்சத்திரம் என்பவற்றை ஆண்டுதோறும் குருபூசைத் தினமாகக் கொண்டு வழிபாடு செய்தல் சைவ மரபாகும்.
- குரு விழிபாட்டில் மூலம் முத்தியடைந்தவர்கள் திருமூலர், மங்கையற்கரசியார், அப்பூதியடிகள் போன்றோர்.

**02. இலிங்க வழிபாடு**

- ஆன்மாக்களும் உலகமும் ஒடுங்குவதற்கும் தோன்றுவதற்கும் இடமாயுள்ளது இலிங்கம் ஆகும் - சிவலிங்கம் - அருவுருவத்திருமேனி.
- லி - ஒடுங்குதல், கம் - தோன்றுதல்.
- ஆலயத்தில் உள்ள விக்கிரங்களில் சிவலிங்கமே முதன்மையானது
- சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு மார்க்கத்தைப் பின்பற்றுபவர்கள் அவரவர் பக்குவத்திற்கேற்ப வழிபடுவர்.
- சிவலிங்கம் இட்டலிங்கம் பரார்த்தலிங்கம் என இருவகைப்படும்
- இட்டலிங்கம் - இது ஆன்மார்த்தலிங்கம் எனவும் அழைக்கப்படும். வாணலிங்கம், படிகலிங்கம், இரத்தினலிங்கம், யோகலிங்கம், ஷணிகலிங்கம் என பல வகைப்படும்.
- பரார்த்ததலிங்கம் - தாவரலிங்கம் எனவும் அழைக்கப்படும். சுயம்பு லிங்கம், காணலிங்கம், தைவிகலிங்கம், ஆரிடலிங்கம், மானிடலிங்கம் என வகைப்படும்.
- இலிங்கத்தைப் பிரதிஸ்டை செய்து பூசை வழிபாடுகளாக கிரியை வழி நிறைவேற்றுவது பரார்த்தபூசை.
- முறையாகத் தீட்சை பெற்ற ஒருவர் குரு அளித்த இலிங்கத்தை வீட்டில் தமது நலனுக்காக கிரியை பூர்வமாகச் செய்து ஆன்மார்த்த பூசை இவ்வாறு வழிபடப்படும் இலிங்கம் இட்டலிங்கம்.
- வீரசைவர்கள் (இலிங்காயதர்கள்) ⟶ இட்டலிங்க வழிபாடு
- சிவலிங்கம் ⟶ கீழ்ப்பாகம் - சக்தியின் அடையாளமான ஆவுடையார்.

- முழுலிங்கத்தின் மேற்பாகம் - சிவத்தைக் குறிக்கும் இலிங்கம்
- மேற்பாகம் - 36 தத்துவங்களையும் கடந்த ஞானகாசம்
- கீழ்ப்பாகம் - அண்டங்கள் சிவசக்தியால் ஆளப்படுகின்றன
- இலிங்க வழிபாட்டில் முத்தியடைந்தோர்
  சேரமான் பெருமாள், சாக்கியநாயனார், கலிக்காமர் பூசலார்.

**03. சங்கம வழிபாடு**

- சங்கமம் என்பது சிவனடியார் கூட்டம்
- சிவபெருமானிடம் மெய்யன்பு பூண்டொழுகுவோர் சிவனடியார் ஆவார்.
- சிவனடியார் சிவபெருமானிடம் அன்பு பூண்டவர்கள்
  - சிவபெருமானை நினைத்தல், அவரைப்பற்றிக் கேட்டல், அவர் புகழ் பாடுதல், திருவைந்தெழுத்தை ஓதி இன்புறுதல் ஆகியன சிவனடியார் இயல்புகளாகும்.
  - சிவபெருமானை நினைவுபடுத்துபவர்
  - பூசுகின்ற வெண்ணீறு போல உள்ளத் தூய்மை உடையவர்கள்
  - விருப்பு வெறுப்பு இல்லாதவர்கள்

**04. சங்க வழிபாட்டின் சிறப்பு**

- உள்ளத்தில் உள்ள கீழ்த்தர எண்ணங்களை அகற்றி உயர் எண்ணங்களை வளர்க்கிறது.
- உலகப்பற்றை நீக்கித் தெய்வப்பற்றை வளர்க்கிறது.
- பக்தியையும் வைராக்கியத்தையும் வளர்க்க உதவுகின்றன.
- உள்ளத்தைத் தூய்மைப்படுத்துகிறது.

**05. சங்கம வழிபாட்டு முறை**

- வேறுபாடு களைந்து சிவனடியாரை வரவேற்று உபசரித்து வழிபடுதல்.
- சிவனடியார் காட்டிய வழிப்படி ஒழுகுதல்.
- அவர் உதவுபவற்றை இரு கைகளால் ஏற்றல்.
- தேவையறிந்து பணி செய்தல்.
- சிவனடியார் பெருமை, அருட் செயல்களைப் பாடுதல், பிறர்க்கு எடுத்துரைத்தல்.

**06. சங்கம வழிபாட்டில் முத்தியடைந்தோர்.**

- குலச்சிறை நாயனார், வாசீசர், சுந்தரர், திருநீலகண்டர், இயற்பகையார், சிறுத்தொண்டர், இளையான்குமாற நாயனார்.

## 22
## அத்வைதம் - சைவ சித்தாந்தம் என்வற்றின் ஒப்பீட்டு விளக்கம்

| அத்வைதம் | சைவ சிந்தாந்தம் |
|---|---|
| 1. அத்வைதம் - “அ + துவிதம்” - அதாவது இரண்டு அல்லது ஒன்று | சைவ சிந்தாந்தம் என்ற பதம் சைவம் + சித்து + அந்தம் / சிவப்பரம்பொருள் தொடர்பான நெறியின் முடிந்த முடிவான அறிவைச் சாதிப்பது. |

| | | |
|---|---|---|
| 2. பன்மை வாதத்தை மறுத்து ஒருமை வாதம் முன்வைப்பு | | பன்மை வாதம் |
| 3. கி.பி - 8 ஆம் - கி.பி 9ஆம் நூற்றாண்டுக் காலகட்டம் | | கி.பி - 13ஆம் நூற்றாண்டு |
| 4. உபநிடதம், கீதை, பிரம்ம சூத்திரத்தில் உள்ள அத்வைத சிந்தனை இருப்பினும், கௌடபாதரின் மாண்டூக்கிய காரியை அதனை விளக்கியுரைத்திருப்பினும், சங்கரரே பிரமாணவியல் ரீதியாக அதனை நிறுவியர். | | வேத, சிவாகமங்கள், சங்க இலக்கியங்கள், சைவத் திருமுறைகள் - அட்டப்பிரகரண நூல்களும் மெய்கண்ட சாத்திரங்களுமே கோட்பாடாக நிறுவியது. |
| 5. பரம் பொருள், உயிர், பிரபஞ்சம் - ஆராய்ச்சி | | பரம்பொருள், உயிர், பிரபஞ்சம் - ஆராய்ச்சி |
| 6. பரம்பொருள் மட்டுமே உண்மை - ஒருமை வாதம் பிரபஞ்சம் தோற்றம், ஒவ்வொரு ஆன்மாவும் பிரமமே | | பதி, பசு, பாசம் - முப்பொருள் உண்மை கொள்கை (திரிபதார்த்த நிச்சயம்)<br>பன்மை வாதம் |
| 7. பிரமாண நூல்கள் | • பிரபஸ்தான திரயங்கள், மாண்டுக்கிய காரிகை<br>• முப்பெரும் பாடியம்<br>• விவேக சூடாமணி | வேதம் - பொது<br>ஆகமம் - சிறப்பு<br>12திருமுறைகள், 14 மெய்கண்ட சாஸ்திரங்கள் யசுர்வேத சதருத்ரியம் சுவேதானிய உபநிடதம் |
| 8. | வேதம் | வேதம் |
| 9. பிரமாணங்கள் | பிரத்தியட்சம், அனுமானம், ஆப்த வாக்கியம், அவைபலத்தி, அருந்தாபத்தி, உவமானம் | பிரத்தியட்சம், அனுமானம், ஆப்த வாக்கியம் |
| 10.பரம் பொருள் | • பிரமம் உண்மை<br>• நிர்குண நிலை<br>• சகுண நிலை (ஈஸ்வரன்) | பரம்பொருள் - பதி – உண்மை<br>• சொரூப இலக்கணம் (இயல்பான தன்மை)<br>• தடத்த இலக்கணம் |
| 11. | ஈஸ்வர நிலை – சகுண பிரமம் நோக்கம் எதுவும் இல்லை | தடத்த நிலை மூவகை திருமேனி<br>நவபேதங்கள்<br>பஞ்ச கிருத்தியம்<br>பதியின் எண்குணங்கள்<br>மலபந்தத்தில் அகப்பட்ட ஆன்மாவிற்கு சிவபேற்றினை அளிக்கும் நோக்கம் |
| 12.ஆன்மா | பிரம்மமே அவித்தை காரணமாக ஆன்மாக்களாகத் தென்படுகிறது – அவச்சேத வாதம், பிரதிவிம்ப வாதம்<br>அனேகான் வாதம் மறுக்கப்பட்டுள்ளது. | பதியினைப் போலவே பசுவும் நித்தியமானது எண்ணற்ற ஆன்மாக்கள் இப்பிரபஞ்சத்தில் உள்ளது. அநாதியாகவே பாசத்தால் கட்டுண்ட அவை முட்டை, வியர்வை, வித்து, கருப்பை என நான்கு முறைகளில் |

| | | |
|---|---|---|
| | ஏகான்ம வாதம் | என்பத்தினாங்கு நூறாயிரம் யோனி பேதங்களுக்கு உட்படும்.<br>ஆன்மாக்கள் - மலங்களின் அடிப்படையில் சகலர் பிரளயாகலர், விஞ்ஞானகலர் |
| 13.ஆன்ம விடுதலை | தன்னை பிரம்மமாக உணர்தலே முத்தி | உயிர்கள் ஆணவத்தின் சகவாசத்தால் பல பிறவிகளின் பலனாகப் பெற்ற சஞ்சித வினை முழுவதுமாக அழிவதனால் சாத்தியப்படும் - விடுதலை<br>ஆணவத்தின் வலி கெடுவதனால் மல சம்பந்த முற்றிருந்த ஆன்மா சிவ சாந்தியடைகிறது |
| 14.மெய்ஞ்ஞானமே முத்திக்கான வழி சீவன் முத்தி – விதேக முத்தி ஸ்ரீ இரண்டையும் ஏற்கிறது | | நாற்பாத நெறிமுறைகள் முத்திக்கு வழி |
| 15.ஆன்ம விடுதலைக்குத் தடையேற்படுத்தும் இடையீட்டுப் பொருட்கள் என்ற வகையிலே அத்வைதம் மாயை அவித்தை பற்றியே விபரிக்கிறது. அநிர்வசனீயம் வியட், கமட்டி அணுகுமுறை என்கிறது. | | ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதாயி எனும் பஞ்ச மலங்கைள இடையீட்டுப் பொருட்களாக விபரிக்கின்றது. |
| 16.விடுதலையை தடை செய்யும் மாயை பிரம்பத்தில் இருந்து தோன்றியது | | பதி, பசு, போலவே மலங்களும் அநாதியானவை. |

## 23
## ஆகமங்கள்

- ஆகமம்
    - தொன்று தொட்டு வரும் அறிவு.
    - ஆன்மா மலநாசம் பெற்று இறைவனை அடைய வழிகாட்டும் நூல்

- ஆகமங்களை சிவபெருமானே அருளினார்.
- ஆகமங்கள் இந்து சமயத்தின் சிறப்பு நூல்.
- ஆகமங்கள் சரியா பாதம், கிரியா பாதம், யோக பாதம், ஞான பாதம் என்னும் நான்கு பிரிவுகளையுடையது.
- ஆகமங்கள் ஆலய அமைப்பு முறை, திருவுருவ வழிபாடு, கடவுள் வழிபாடு, சித்தாந்த சிந்தனைகள் என்பவற்றை உள்ளடக்கியுள்ளன.
- கோயில் கிரியைகளை சிவாகமங்கள் கர்ஷணம், பிரதிட்டை, உற்சவம், பிராயச் சித்தம் என நான்கு வகைப்படுத்தப்படுகின்றன.
- நித்திய கிரியை, நைமித்திய கிரியை, காமிய, நிஷ்காமிய கிரியை எனவும் வகைப்படுத்துவர்.
- ஆலய மகோற்சவக் கிரியைகள் ஐந்தொழில் தத்துவத்தை உணர்த்துகின்றன.

**01. ஆகமம் என்ற சொல்லின் பொருள் யாது?**

- தொன்று தொட்டு வரும் அறிவு
- ஆன்மா மலநாசம் பெற்று இறைவனை அடைய வழிகாட்டும் நூல்

**02. ஆகமங்கள் வேறு எவ்வாறு சிறப்பிக்கப்படுகிறது?**

சிரெளதம், சுபதந்திரம்

**03. சைவ ஆகமங்கள் எவ்வாறு அழைக்கப்படும்?**
சிவாகமங்கள்

**04. வைணவ ஆகமங்கள் எவ்வாறு அழைக்கப்படும்?**
சங்கிதைகள்

**05. சாக்த ஆகமங்கள் எவ்வாறு அழைக்கப்படும்?**
தந்திரங்கள்

**06. "வேதமோடாகமம் மெய்யாம் இறைவன் நூல்" எனக் குறிப்பிட்ட நூல் எது?**
திருமந்திரம்

**07. ஆகமங்களின் கிரியை நெறியை விளக்கி கூறும் நூல் எது?**
பத்ததிகள்

**08. "மன்னுமாமலை மகேந்திரமதனில் சொன்ன ஆகமம்" என பாடியவர் யார்?**
மாணிக்கவாசகர்

**09. சைவ ஆகமங்களின் பொருளை விளக்குக.**

- ஆ-பசு, க-பதி, ம-பாசம் அதாவது பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களை உணர்த்தும் நூல்.
- ஆ-சிவஞானம், க-மோட்சம், ம-மலநாசம்
- அதாவது மலத்தை நாசம் பண்ணி சிவஞானத்தை உதிப்பித்து மோட்சத்தை நல்குவது

**10. சிவாகமங்கள் எத்தனை?**
28

**11. சிவாகமங்கள் ஒவ்வொன்றும் கொண்டுள்ள நான்கு பிரிவுகளும் எவை?**
(1) சரியா பாதம்
(2) கிரியா பாதம்
(3) யோக பாதம்
(4) ஞான பாதம்

**12. சரியா பாதத்தில் கூறப்படும் விடயங்கள் எவை?**
பிராயச்சித்த விதி, பவித்திர விதி, ஆலய அமைப்பு விதி, சுற்றுப் பிரகாரம், கோபுரம், பரிபாலகர் அமைப்பு, உமா மகேசுவரர் இலக்கணம், சிவலிங்க இலக்கணம்

**13. கிரியா பாதத்தில் கூறப்படும் விடயங்கள் எவை?**
மந்திரம், உற்சவம், நித்திய நைமித்தியம், காமிய கிரியைகள், சிவசின்னங்கள் அணியும் முறை

**14. அட்டாங்க யோகம், அட்டமா சித்திகள், அறுவகை ஆதாரங்களை கூறும் பாதம் எது?**
யோக பாதம்

**15. முப்பொருள் உண்மை, புவனங்களின் தோற்றம் பற்றிக் கூறும் பாதம் எது?**

ஞான பாதம்

16. **ஞான பாதம் வேறு எவ்வாறு அழைக்கப்படும்?**
ஆகமாந்தம்

17. **ஆலயம் ஒன்றில் அமைய வேண்டிய பிரகாரங்கள் பற்றிக் கூறும் ஆகமம் எது?**
காமிக ஆகமம் - பிரகார லட்சண விதிப்படலம்

18. **திருவுருவங்களை செதுக்குவதற்குரிய கருங்கல்லைத் தெரிவு செய்தல் பற்றி சிவாகமங்கள் கூறும் பகுதி எது?**
சியாபரீட்சணம்

19. **கர்ஷணம் என்றால் என்ன?**
ஆலயம் அமைப்பதற்குரிய இடத்தை பண்படுத்துதல்

20. **"திருவுருவங்கள் அளவில் மிகினும் குறையினும் நலமுடையன அல்ல" என்று கூறும் நூல் எது?**
சுக்கிர நீதி

21. **"ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்று மிலார்க்கு ஆயிரம் திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ" என பாடியவர் யார்?**
மாணிக்கவாசகர்

22. **ஆலய கிரியைகளின் போது இடம்பெறும் குற்ற நிவர்த்தியின் பொருட்டு ஆற்றப்படும் கிரியை எவ்வாறு அழைக்கப்படும்?**
பிராயசித்தம்

23. **சிவாகமங்களில் சைவ சித்தாந்தம் கருத்து கூடுதலாக உள்ள பாதம் எது?**
யோக பாதம், ஞான பாதம்

24. **சித்தாந்த கருத்துக்கள் அதிகமாக உள்ள ஆகமங்கள் எவை?**
கிரணம், ரௌரவம், பௌஷ்கரம்

25. **அட்டாங்க யோகங்கள் எவை?**
இயமம், நியமம், ஆசனம், பிரணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி

26. **அட்டமா சித்திகள் எவை?**
அணிமா, லகிமா, மகிமா, கரிமா, பிராப்தி, பிரகாமியம், ஈசத்துவம், வசித்துவம்

27. **சாக்த ஆகமங்கள் எத்தனை?**
77

28. **வைணவ ஆகமங்கள் எத்தனை?**
108 / 218

29. **வைணவ ஆகமங்கள் வேறு எவ்வாறு அழைக்கப்படும்?**
தந்திரம், சங்கிதை, பாகவத சாத்திரம்

30. **வைகாசன மரபை தொகுத்தவர் யார்?**

வைதிக ரிஷி விகாணஸ்

**31. சிவாகமங்கள் 28 எவை?**

| | | |
|---|---|---|
| 01. காமிகம் | 11. விஜயம் | 21. புரோற்கீதம் |
| 02. யோகம் | 12. நிச்சுவாசம் | 22. லளிதம் |
| 03. சிந்தியம் | 13. சுவாயம்புவம் | 23. சித்தம் |
| 04. காரணம் | 14. ஆக்கிநேயம் | 24. சந்தானம் |
| 05. அசிதம் | 15. வீரம் | 25. சருவோக்தம் |
| 06. தீப்தம் | 16. ரௌரவம் | 26. பாரமேசுரம் |
| 07. சூக்குமம் | 17. மகுடம் | 27. கிரணம் |
| 08. சகச்சிரம் | 18. விமலம் | 28. வாதுளம் |
| 09. அஞ்சுமான் | 19. சந்திர ஞானம் | |
| 10. சுப்பிரபேதம் | 20. முக விம்பம் | |

**32. சிவாகமங்கள் கூறும் கோயிற் கிரியைகளின் நான்கு பிரிவுகளையும் விளக்குக.**

- கர்சணம்
  ஆலயம் அமைப்பதற்குரிய இடத்தைப் பண்படுத்துதல்
- பிரதிட்டை
  ஆலயத்தில் திருவுருவங்களைப் பிரதிட்டை செய்தல்
- உற்சவம்
  ஆலயத்தில் வருடமொருமுறை இடம்பெறும் உற்சவம் / திருவிழா
- பிராயச்சித்தம்
  ஆலயக் கிரியைகளின் போது இடம்பெறும் குற்ற நிவர்த்தியின் பொருட்டு ஆற்றப்படும் கிரியை

**33. நித்திய, நைமித்திய, காமிய, நிஷ்காமி கிரியைகள் என்பதற்கு விளக்கம் தருக.**

- நித்திய கிரியை
  தினமும் நடைபெறும் ஆறுகாலப் பூசைகள் பன்னிரண்டு காலம் வரையும் இடம்பெறலாம்.
- நைமித்திய கிரியை
  விசேட நாட்களில் நித்திய கிரியைகளில் ஏற்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் கிரியைகள்
- காமிய கிரியை, நிஸ்காமிய கிரியை
  நித்திய நைமித்திய கிரியைகளை பயன் கருதிச் செய்யப்பட்டால் காமியக்கிரியை பயன் கருதாமல் செய்யப்பட்டால் நிஸ்காமியக்கிரியை

**34. மகோற்சவக் கிரியைகள் உணர்த்தும் தத்தவத்தை விளக்குக.**

- கொடியேற்றத்திற்கு முன் நடைபெறும் மிருகச் சங்கிரணம் அங்குரார்ப்பணம், கிராமசாந்தி, வாஸ்துசாந்தி, பேரிதாடனம், சமஸ்த தேவாகனம் - படைத்தல் தொழிலை உணர்த்துகின்றன.
  - கொடியேற்றம் - படைத்தல் தொழிலை உணர்த்துகின்றன
  - வாகனத்திருவிழா. ஓமம், பலி – காத்தல் தொழிலை உணர்த்துகின்றன
  - சூர்ணோற்சவம், இரதோற்சவம் - அழித்தல் தொழிலை உணர்த்துகின்றன
  - மௌனோற்சவம் - மறைத்தல் தொழிலை உணர்த்துகின்றன
  - தீர்த்தோற்சவம் - அருளல் தொழிலை உணர்த்துகின்றன

- கொடியேற்றப்படாத நிலையில் கொடிமரம் பதியின் சொரூப நிலையை உணர்த்துகின்றது.
  - கொடியேற்றப்பட்டபின் கொடி மரம் பதியின் தடத்த நிலையின் ஆன்மாக்களின் பொருட்டுச் செயற்படுவதனைக் காட்டுகிறது.
  - கொடிமரம் - பதியையும்
    கொடிச்சீலை - பசுவையும்
    மஞ்சட் கயிறு - திருவருட்சக்தியையும்
    தருப்பைக்கயிறு - பாசத்தையும்
    சுட்டி நிற்கின்றன.
  - ஆன்மாவானது பாசத்திலிருந்து விடுபட்டு திருவருட் சக்தியின் உதவியுடன் இறைவனை அடைதலாகிய முத்திப் பேற்றினைப் பெறல் என்பதையே கொடியேற்றம் உணர்த்தி நிற்கின்றது.
  - மகோற்சவத்தின் போது தினமும் சுவாமி வெளிவீதி வலம் வருதல் இறைவன் சாம்பவ தீட்சையை ஆன்மாக்களுக்கு அளிப்பதாகக் கூறப்படுகிறது.

## 24
## ஆகமம் சாரா வழிபாட்டு முறைகள்

1. **நாட்டார் வழிபாடு கிராமிய வழிபாடு, ஊர்த்தெய்வ வழிபாடு, குலதெய்வ வழிபாடு, சிறுதெய்வ வழிபாடு, எல்லைப்புற வழிபாடு என்றும் அழைக்கப்படுகின்றன.**
   - சடங்குகள் பிரதான இடத்தை வகிக்கின்றன.
   - வழிபாடு மக்களின் நேரடிப் பங்களிப்புடன் இடம்பெறும்
   - பாரம்பரிய பண்பாட்டு அடிப்படைகளைக் கொண்டது.
   - கண்ணகையம்மன் நாகதம்பிரான், தி஌பதையம்மன், சுடலைமாடன், ஐயனார், அண்ணமார், மாரியம்மன், விறுமர், மதுரைவீரன், கல்லெறிமாடன், வதனமார், பூதவராயர், காளி, வராசி, கொத்தி, ரோதமுனி, கருப்புசாமி, நாச்சியார், சீதை போன்ற கடவுளர்களைக் குறிப்பிடலாம்.
   - மலையகம், யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு, அளவெட்டி, சுருவில், நயினாதீவு, முல்லைத்தீவு போன்ற தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் இவ்வழிபாடு இடம்பெறுகின்றன.

1 **நாட்டார் வழிபாட்டின் இயல்புகளைக் குறிப்பிடுக.**
   - கிராமங்களின் நுழைவாயில், வயல்வெளி, மரத்தடி, குளக்கரை, ஆற்றங்கரை, மலைப்பகுதிகள் ஆகிய இடங்களில் அமைந்திருக்கும்.
   - நோய் நீக்கம், பகைவரை வெல்லுதல் நினைத்த காரியத்தை நிறைவேற்றுதல் போன்ற நோக்கங்களுக்காக வழிபாடு இடம்பெறுகிறது.
   - சூலம், கல், மரம் போன்றவற்றில் உறைபவை
   - பத்ததி நியமங்கள் காணப்படுதல்
   - சடங்குகள் உத்தரவு பெற்று நிகழும்
   - பிராமணரல்லாததோரால் (பூசாரிமார்கள்) சடங்கு நிகழ்த்தப்படும்

- **வழிபாட்டின் போது இடம்பெறுவன**

  படைத்தல், மடைபரவுதல், தூளிபிடித்தல், பரிகலம் அழைத்தல், வளந்து வைத்தல், பொங்கலிடுதல், கலையாடுதல், வழிவிடுதல், கட்டாடுதல், கட்டச் சொல்லுதல், நூல்முடிதல், தண்ணீர் ஓதிக்கொடுத்தல், தீப்பள்ளம் ஏறுதல், சூனியங்கள் வெட்டுதல், கண்ணகி கதைபடித்தல்

- **நாட்டார் வழிபாட்டில் கலைகள்**

- ➢ காவடி, கரகம், கூத்து, கோலாட்டம், இசை, அலங்காரம்
- ➢ உடுக்கு, பறை, தம்பட்டை, சல்லாரி போன்ற கருவிகளை இயக்குவது

**2 கண்ணகி வழிபாடு பற்றிக் குறிப்பிடுக.**

- கிராமியப் பெண் தெய்வங்களுள் பெருந்தெய்வம் எனப் போற்றத்தக்கவள் கண்ணகி
- கண்ணகி வழிபாட்டின் தோற்றம் சிலப்பதிகாரத்துடன் ஆரம்பமாகிறது.
- கிராமியத் தெய்வ வழிபாட்டிலிருந்து ஒழுக்கத்தை முதன்மைப்படுத்தும் பத்தினித் தெய்வ வழிபாடாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.
- உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர் என்ற உண்மைக்கமைய கற்பின் வலிமையால் தர்மத்தை நிலைநாட்டிய கண்ணகி தெய்வநிலை பெற்றவராவார்.
- கண்ணகியம்மன் வழிபாட்டை முதலாம் கஜபாகு மன்னன் இலங்கைக்குக் கொண்டு வந்ததாக அறியப்படுகிறது.
- கண்ணகி வழிபாட்டின் தொன்மையை நற்றிணை புறநானூறு போன்ற இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளன.
- கண்ணகி சிவசக்தியின் அம்சமாகவும் காளியின் அவதாரமாகவும் கருதப்படுகிறாள்.
- கண்ணகி தெய்வ வடிவுடன் தோன்றிய கோவலனைக்கண்டு அவனுடன் வான ஊர்தியிலே தேவலோகம் அடைந்தாள். இதனைக்கண்ட குன்றக்குரவர் கண்ணகியைத் தங்கள் குல தெய்வமாகக் கருதி குரவைக் கூத்து நிகழ்த்தி வழிபட்டனர்.
- சேரவேந்தன் செங்குட்டுவன் கி.பி 2ஆம் நூற்றாண்டில் கண்ணகிக்கு விழாவெடுத்தான் அவ்விழாவில் இலங்கை மன்னன் கஜபாகுவும் கலந்து கொண்டான் என்றும் சேரநாட்டிலிருந்து திரும்பி வரும்போது கண்ணகி படிமங்களைக் கொண்டு வந்தான் எனக் கூறப்படுகிறது.
- கண்ணகி வழிபாடு வீர வழிபாட்டின் கீழ் அடங்கும்
- மாரியம்மன் வழிபாடு, பத்தினி தெய்வ வழிபாடு கண்ணகி வழிபாட்டிலிருந்து வந்ததாகும்.
- கண்டி இராச்சியத்தில் கண்ணகிக்கு விழா எடுக்கப்பட்டது. தலதாமாளிகையிலும் கண்ணகிக்குச் சிலை உண்டு.
- கஜபாகு மன்னன் முதன்முதலாக அங்க நாமக்கடவை என்னும் இடத்தில் கோயில் கட்டினான். ஆடி மாதந்தோறும் அநுராதபுரத்திலிருந்து விழா எடுத்தான். கி.பி 2 ஆம் நூற்றாண்டிலிருந்து இன்று வரை இவ்வழிபாடு நிலவி வருகிறது.
- சிங்களவர்கள் ''பத்தினி தெய்யோ'' என்னும் காவல் தெய்வமாக வழிபட்டு வருகின்றனர்.
- தென்னிந்தியாவிலிருந்து வர்த்தக நோக்கில் வந்தவர்களாலும் வழிபடப்பட்டு வந்தது.
- ஈழத்தில் கண்ணகி வழிபாடு அழியாத ஒரு வழிபாடாக நிலைத்துவிட்டாலும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் இவ்வழிபாட்டை ஆதரிக்கவில்லை என்பதால் சில கோயில்கள் இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலங்களாகியன.

**01.கண்ணகி வழிபாடு இடம்பெறும் இடங்களைக் குறிப்பிடுக.**

- பாண்டிய நாடு, சேரநாடு, சோழநாடு, ஈழநாடு
- வடக்கில் --- வற்றாப்பளை, காரதீவு, சுருவில், நயினாதீவு, முல்லைத்தீவு, பருத்தித்துறை, மட்டுவில், சுழிபுரம், சுட்டிபுரம், மயிலிட்டி, புன்னாலைக்கட்டுவன், உடுவில், கோப்பாய், செட்டிகுளம், கரம்பன், புங்குடுதீவு, சுதுமலை, நுணாவில், நவாலி, புளியங்குளம்
- மட்டக்களப்பில் --- அம்பாறை, பிரதேசங்களில் கல்முனை, காரைதீவு, தம்பிலுவில், பட்டிப்பளை, கல்லாறு, துறை நீலாவணை, வீரமுனை, மகிழூர், செட்டிபாளையம், களுவாஞ்சிக்குடி, பழுகாமம், வந்தாறுமூலை, வாழைச்சேனை, சித்தாண்டி, முதலைக்குடா, மண்முனை, போரைதீவு, மண்டூர், ஆரையம்பதி
- திருகோணமலையில் --- கந்தளாய், உவர்மலை
- மலையகத்தில் --- மாலிபொடை, காத்மாத், டபார் தோட்டம்
- மொனராகலையில் --- படால்கும்புரை, மத்துகம, குருநாகல், வில்பாய

**02.கண்ணகி வழிபாட்டின் நோக்கங்களைக் குறிப்பிடுக.**

- நோய் நீக்கம் - (வெப்பு நோய் / அம்மை நோய்)
- மழை வளம் பெறுதல் - வரட்சி நீக்கம்
- பயநீக்கம்
- குலதெய்வமாகக் கருதுதல்
- ஒழுக்க விழுமியங்கள் பேணப்படுதல்
- கொள்கைத் திண்மையை வளர்த்தல்
- பெண்களுக்கான மதிப்பைப் பேணுதல்
- நீதி அறம் பேணுதல்
- வறுமை நீக்கம்
- கமத்தொழில் வளர்ச்சி பெறுதல்
- வினைப்பயனை வெல்லுதல்

**03.கண்ணகித் தெய்வ வழிபாட்டு முறைகளைக் குறிப்பிடுக.**

- தற்போது ஆகம முறைப்பட்ட வழிபாடுகள் சில இடங்களில் காணப்படுகின்றன. ஆகமம் சாரா சடங்கு முறையிலமைந்த வழிபாட்டு முறைகளும் அமைந்துள்ளன.
- பிரதேச ரீதியாக இடத்துக்கிடம் சில வேறுபாடுகளுடன் சடங்கு நடைபெறும்.
- பொங்கல் பொங்குதல், குளிர்த்தி வைபவம், பாக்குத்தெண்டல் நிகழ்வு
- கச்சு நேருதல், படைபரவுதல், வளந்து நேருதல், தூளி பிடித்தல்
- கூத்து, கும்மி, கோலாட்டம் இடம்பெறுதல்
- கும்பம் வைத்தல், கதவு திறத்தல், மண்டபம் காவல் பண்ணுபதல், கலியாணச்சடங்கு, கும்பச்சடங்கு, பரிகலம் அழைத்தல், சாட்டைப்பலி, மடைப்பலி
- கலை ஆடுதல், கட்டுச் சொல்லுதல், தீமித்தல், கல்யாணக்கால் வெட்டுதல்

**04.“கலியாணக்கால் வெட்டுதல்” என்னும் சடங்கை விளக்குக.**

- ஆலயத்திலிருந்து பூசைப்பெட்டியை அடியவர் ஏந்தி வருதல்.
- தெய்வமாடுவோர் ஆடி வருவர்.
- அம்மன் பல்லக்கில் பவனி வருதல்
- மக்கள் நிறைகுடம், மடைவைத்து வழிபடுவர்.
- பவனி கலியாணக்கால் வெட்டும் இடம் வரை இடம்பெறும்
- பூசகர் பெண்போல் சேலை உடுத்து கலியாணக்கால் வெட்டும் மரத்தடியில் மடைவைத்து வழிபாட்டியற்றுவார்.
- பின் அம்மரத்திலிருந்து பொருத்தமான கிளையை வெட்டி கலியாணக்கால் பெற்று ஊர்வலமாகக் கொண்டு வருதல்.
- கோயிலின் மண்டபத்தில் நடப்பட்ட கலியாணக் காலை அலங்கரித்து கண்ணகியாகக் கருதி வழிபடுவர்.
- கண்ணகிக்கும் கோவலனுக்கும் கல்யாணம் நடத்தும் கல்யாண பாவனை இடம்பெறும்.
- ஏடுபடித்தல் (கல்யாணப் படிப்பு)
- பெண்கள் குரவையிட்டு மகிழ்வர்.
- பெண்கள் மடிப்பிச்சை எடுத்தல் மடைகொடுத்தல் நெல்லுக்குற்றுதல் இடம்பெறும்.

**05.“விநாயகப்பானை எழுந்தருளப்பண்ணுதல்” என்பதனை விளக்குக.**

குளிர்த்திச் சடங்கு நடைபெறும் அன்று நெல்குற்றி எடுக்கப்பட்ட அரிசியைக் கொண்டு மூன்று பானைகளில் பொங்கலிடுவர். இதில் முதலாவது பானை விநாயகருக்குரியதாகக் கருதி முதலில் பொங்கல் நடைபெறும். அதனைத் தொடர்ந்து ஏனைய பொங்கல் இடம்பெறும்.

**06.“திருக்குளிர்த்தி ஆடல்” என்பதனை விளக்குக.**

- வைகாசிப்பூரணை தினத்தன்று பூப்பந்தலின் கீழ் பாணக்கம் கரைக்கப்பட்டு பூசகர் பெண்போல வேடமிட்டு முக்காடிட்டு அம்மனைப் போற்று வந்து நிற்பார். அப்போது இருவர் மாறி மாறிக் குளிர்த்திப் பாடல் பாட அம்மன் குளிர்த்தி ஆடுவார்.
- இவ்வேளையில் தெய்வம் ஆடல், உடுக்கு, தவில், சிலம்பு, மணி, அம்மானைக்காய் போன்றவை ஓங்கி ஒலிக்கப்படும் கட்டுச்சொல்லுதல் சாட்டைப்பலி, மடைப்பலி என்பன தெய்வம் ஆடுவோரால் நிகழ்த்தப்படும்.
- இறுதி நிகழ்வாக வாழி பாடுதல் இடம்பெற்று குளிர்த்தி நிறைவுபெறும்.

**07.கண்ணகி அம்மன் சடங்கின்போது நிறைவேற்றப்படும் நேர்த்திக்கடன்களைக் குறிப்பிடுக.**

- காவடி எடுத்தல்
- அங்கப்பிரதட்சணம்
- பாளை விற்றல்
- பிள்ளை விற்றல்
- மடைகொடுத்தல்
- பட்டாடை செலுத்துதல்
- அங்க அடையாளங்கள், தென்னம்பிள்ளை, மாடு, ஆடு, கோழி, பிள்ளைத்தொட்டில் என்பன

**08.கலை நிகழ்வுகளைக் குறிப்பிடுக.**

கூத்து, கும்மி, கரகம், வசந்தன் ஆட்டம், கொம்பு விளையாட்டுக்கள், போர்த் தேங்காய் அடித்தல்

**09.கண்ணியம்மன் வழிபாட்டின் போது பாடப்படுவன எவை?**

- கண்ணகி வழக்குரைகாதை
- சிலம்பு கூறுதல்
- உடுக்குச் சிந்து பாடுதல்
- திருக்குளிர்த்தி
- அம்மானை
- கண்ணகி அம்மன் சிந்து
- கண்ணகி காவியம்

**10. பின்வரும் விடயங்கள் பற்றி விளக்கக் குறிப்புகள் எழுதுக.**

(அ) மாரியம்மன் வழிபாடு
(ஆ) ஐயனார் வழிபாடு
(இ) அண்ணமார் வழிபாடு
(ஈ) பெரியதம்பிரான் வழிபாடு

(அ) **மாரியம்மன் வழிபாடு**

- செல்வி, செல்லி, செல்லியாத்தாள், செல்லாண்டியம்மன், முத்துமாரி அம்மன், ஆயிரம் கண்ணுடையாள், கண்ணாத்தாள், ஆயி, மகமாயி, மாரி, கௌமாரி, தண்டமாரி, தலைமாரி, சந்தனமாரி, உடல்மாரி, ஊரம்மா, மாரியம்மா என்றெல்லாம் போற்றப்படுகின்ற மாரியம்மன் ஈழத்தில் மகாமாரி, மாரியம்மன், முத்துமாரியம்மன் என்று போற்றி வழிபடப்படுகின்றாள்.
- மாரி என்றால் மழை எனப்பொருள்படும். எனவே மாரியம்மனை மழை வேண்டி வணங்குவர்.

- பண்டைய காலத் திராவிடத் தெய்வம்
- மகிஷாசுரனை மும்மூர்த்திகளால் அழிக்க முடியாமல் போனபோது மும்மூர்த்தியாக மாறி அழித்தாள் என்பதால் மாரி எனப் பெயர் வந்தது.
- சிவனை நோக்கிக் கடுந்தவம் புரிந்து 18 முத்துக்களையும் 4448 வியாதிகளையும் கோர்த்த கண்டசரமாலையை வரமாகப் பெற்றவன். பின் தான் வரமாகப்பெற்ற முத்துக்களை முதலில் சிவனின் மேனியில் எறிந்த பொழுது அதைச் சிவனார் பொறுக்காமல் ''பத்தினியே எனக்கு ஏன் எறிந்தாய்? சிறுபாலர்க்கும் வயோதிபர்களுக்கும் போடாதே, வம்புகளுரைத்தோர்க்கும் வாழ்வினைக் கெடுத்தோர்க்கும், துன்பங்கள் செய்தோர்க்கும் வஞ்சனை செய்தோர்க்கும் கற்பை அழித்தோர்க்கும் முத்துக்களை எறியும் தாயாரே'' என்று சிவன் வாக்குக் கொடுத்ததாகக் கூறப்படுகிறது.
- ஆங்கிலேயர்களும் மாரியம்மனுக்கு மரியாதை செலுத்தியதாகக் கூறப்படுகிறது.
- திருமாலின் தங்கையே மாரியம்மன் என மட்டக்களப்புப் பிரதேச தாலாட்டுப்பாடல்கள் கூறுகின்றன.

  (''காரண சவுந்தரியே நாரணனார் தங்கையரே''

  ''ஆதி பராபரியே அரனுடைய தங்கையம்மன்'')
- மாரியம்மன் வழிப்பாட்டுடன் காத்தவராயன் சுவாமி, ஆரியப்பூமாலை தொட்டியத்துச் சின்னான், கழுமரவழிபாடு என்பன முக்கியத்துவம் பெறுகின்றன.
- மாரியம்மன் வழிபாட்டில் வேப்பிலை முக்கிய இடம் பெறுகிறது.

- **மாரியம்மன் வழிபாடு இடம்பெறும் இடங்கள்**
  - தமிழ்நாட்டில் - திருவேற்காடு, சமயபுரம், அன்பில், தஞ்சை தென்னலூர், கரூர், வலங்கைமான், மணப்பாறை, அறந்தாங்கி, நாகப்பட்டினம், கோவை, திண்டுக்கல்
  - இலங்கையில் - மலையகம், யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய பிரதேசங்கள் இதில் மாத்தளை முத்துமாரியம்மன், விளாங்குளம் முத்துமாரியம்மன் கோயில்கள் பிரபல்யமானவையாகும்.

- **மாரியம்மன் வழிபாட்டு முறைகள்**
  - மாரியம்மன் வழிபாடு ஆகம முறைக்கு உட்பட்டும் ஆகம முறைக்கு உட்படாத கிராமிய வழிபாடாகவும் நடைபெறுகின்றது.
  - நாட்டார் வழிபாட்டுக்குட்பட்ட ஆலயங்களில் காப்புக்கட்டுதல், கொடித்தம்பம், நிறுத்துதல், கரகம் பாலித்தல், பொங்கல், பூமிதித்தல், கூழ்வார்த்தல், கஞ்சி வார்த்தல், மஞ்சள் நீராடுதல், மாவிளக்கு, முளைப்பாரி எடுத்தல், ஆயிரம் கண்பானை அளித்தல், தீச்சட்டி எடுத்தல், கரகம், காவடி ஆடுதல், மடைபரவுதல் என்பன இடம்பெறுகின்றன.
  - ஸ்ரீசக்கர வழிபாட்டு முறைகள்
  - இளநீர், நீர், மோர் பானங்கள் படைத்தல்
  - அலகுகுத்துதல், தீ மிதித்தல்
  - நேர்த்திக்கடன், உருவாடுதல்
  - வளந்துபானை தேடுதல், காய்ச்சோற்றுப் பொங்கல், வெட்டுமாறன்தூள், காய்படை, பூமடை
  - எலுமிச்சம்பழம் தடைவெட்டி நீரூற்றி வழிபடுதல், எலுமிச்சம்பழத் தோலை மறுபுறம் நிமிர்த்தி நெய்விட்டு விளக்கேற்றுதல்
  - தை ஆடி மாதங்களிலும் செவ்வாய், வெள்ளி, ஞாயிறு ஆகிய நான்களிலும் வழிபடுவர்.
  - மதிப்பெடுத்தல், சாமிபார்த்தல், அங்கப் பிரதட்சணம்
  - பணம் தெண்டல், பாக்குத் தெண்டல், ஊர்காவல் பண்ணுதல்
  - பரிகலம் அழைத்தல், தூளிபிடித்தல், வளந்து நேருதல்

- பண்டம் எடுத்தல், மடை பரவுதல், வழிவெட்டுதல்
- கதவு திறத்தல், குளிர்த்தி, கதவடைத்தல், பிள்ளை விற்றல்

- **மாரியம்மன் வழிபாட்டின் சமூகமுக்கியத்துவம்**
  - மழை பெறுதல், வளம் சிறத்தல்
  - கண்ணோய், அம்மைநோய், சின்னமுத்து போன்ற நோய்களிலிருந்து பாதுகாப்பு
  - தீயோரை அழித்து நல்லோரைக் காத்தல்
  - மக்களைப் பாதுகாத்தல், வறுமை நீக்கம்
  - வழிபாட்டில் வேப்பிலை முக்கியம் பெறுகிறது
  - காரிய சித்திபெறுதல், திருமணத்தடை நீங்குதல்
  - சுகப்பிரசவம்

- **வளர்க்கப்படும் கிராமியக் கலைகள்**
  - கரகம், காவடி, கூத்து, நாடகம்

- **ஓதப்படும் நூல்கள்**
  - மாரியம்மன் தாலாட்டு. மாரியம்மன் காவியம், மாரியம்மன் குளிர்த்தி, மாரியம்மன் வசந்தம்
  - மாரியம்மன் ஊஞ்சல், பதம், அகவல், அந்தாதி, மாரியம்மன் கரகப்பாடல், அகவல், அந்தாதி

- **நன்மைகள்**
  - கிராமம், கோயில் இல்லம் புனிதத்தன்மை பெறுதல்.
  - விரத நியமங்கள் ⟶ இறைவழிபாடு,<br>இறை நம்பிக்கை ⟶ புலனடக்கம்
  - சமூக உறவுகளில் கூட்டுப்பொறுப்பு சமூக ஒற்றுமை
  - கிராமியக் கலைகள், நோய் நீக்கம் (கண்ணோய், அம்மை நோய்)

**(ஆ) ஐயனார் வழிபாடு**

- **தோற்றம்**
  - தாருகாவனத்து முனிவர்களின் ஆணவத்தை அடக்க எண்ணிய சிவபெருமானுக்கும் மோகினி வடிவம் கொண்ட திருமாலுக்கும் புத்திரராக உதித்தவர் ஐயனார்.
  - மாசி மாத தேய்பிறை அமாவாசைக்கு முதல் நாள் சிவராத்திரி அன்று தோற்றம் பெற்றார.

- **வடிவம்**
  - இளைஞரைப் போன்றவர், கிழக்குத்திசை நோக்கியிருப்பார்.
  - மார்பில் பூணூல் அணிந்திருப்பார், சந்தனம் பூசியிருப்பார்
  - தலையில் கிரீடம்
  - வலது காதில் குழை, இடது காதில் குண்டம்
  - சர்வேஸ்வரனுக்குரிய அனைத்து ஆபரணங்களும் அணிந்திருப்பார்.
  - இடதுகையை இடதுகாலின் மேல் வைத்திருப்பார்
  - வலது காலைத் தொங்க விட்டிருப்பார்
  - யானை மீது அமர்ந்திருப்பார்
  - தனித்திருக்கும் ஐயனார் பாலசாஸ்தா என்றும் அழைக்கப்படுவார்.

- புஸகலாதேவி, பூரணாதேவி ஆகிய இரு தேவியருடன் இணைந்திருப்பார்.

- **உணவு**
  - சைவ உணவு, சர்க்கரைப் பொங்கல்

- **பிரசாதம்**
  - சந்தனமும் சுத்தமான நீரும் விபூதி குங்குமமும்

- **வழிபாடு**
  - ஆகமநிலைக்குட்பட்ட நிலையிலும் ஆகமநிலைக்குட்படாத நிலையிலும் வழிபாடு இடம்பெறுகிறது.
  - நாட்டுப்புறக் காவல் தெய்வம், குலதெய்வ வழிபாடு என்றும் கூறுவர்.
  - சிவராத்திரி அன்று விசேடமாக வழிபாடுகள் இடம்பெறும்.
  - சாத்தன், சாதவாகனன் எனப் போற்றி வழிபடுவர்.
  - எருதுகட்டுதல்
    (ஆடு, மாடுகளைக் காணிக்கையாக வழங்குதல்)
  - மஞ்சுவிரட்டு திருவிழா
    (ஆடு மாடுகளை இளைஞர்கள் விரட்டிப் பிடித்தல்)
  - புரவி எடுத்தல்
    (சிறிய மன்குதிரைகளைச் செய்து திருவிழா அன்று கோயிலில் சேர்ப்பர்)
  - முளைப்பாரி எடுத்தல்
    (அனைத்துத் தானியங்களையும் முளைகட்டி வைத்து அவற்றைப் பெண்கள் தலைகளில் சுமந்து சென்று கோயிலில் கொண்டாடுவர்.

- **சமூக முக்கியத்துவம்**
  - சைவ – வைணவ சமய ஒருமைப்பாட்டின் அடையாளம்
  - எல்லைப்புறக் காவல் தெய்வம், கிராமதேவதை
  - கால்நடைகளைக் காப்பாற்றுபவர்
  - விளைச்சலைப் பெருக்குபவர்
  - தேன் எடுக்கச் செல்வோரையும் வழிப்போக்கரையும் காக்கும் தெய்வம்
  - நீர்ப்பாசனக் குளங்கள் உடையாமலும் கடும் வரட்சிக் காலத்தில் நோய்கள் பீடிக்காமலும் இருப்பதற்கும் மழைவேண்டி அருள் புரிவதற்கும் வழிபடப்படும் தெய்வம்
  - வருந்தி வணங்குவோருக்கு விரும்பி அருள்புரிவர்

- **ஈழத்து ஆலயங்கள் சில**
  - கனகராயன் குளத்திற்கு அருகில் உள்ள ஆதி சமவன் குளம் ஐயனார் கோயில் / கோண்டாவில் சபரீச ஐயப்பன் ஆலயம் / கொழும்பு அளுத்மாவத்த ஐயனார் ஆலயம்

**(இ) அண்ணமார் வழிபாடு**

- பொல்லுக்கிழவன், சிவகுடும்பன் போன்ற பெயர்களாலும் அழைக்கப்படுவார்.
- ஒளி பொருந்தியவர், அலங்காரமான உடையைத் தரித்தவர், திசைகளெல்லாம் உறைபவர், அழகிய தோற்றம் உடையவர், அறம் பேணுபவர், இசையில் நாட்டம் உடையவர், உலகத்தைத் தோற்றுவிக்கும் அளவுக்கு உயர்ந்தவர், சொற்களால் வர்ணிக்க முடியாதவர்.

- **தோற்றம்**
  - தக்கன் யாகத்தை அழிக்க வீரபத்திரரால் தோற்றுவிக்கப்பட்டவர்களுள் ஒருவர்
  - தக்கன் கொடுத்த பலாப்பழத்தை உண்டு திளைத்திருந்ததால் வீரபத்திரரே களத்துக்கு வந்தார். வீரபத்திரருக்குப் பயந்த அண்ணமார் கமத்துள் (வயல்) வேலை செய்பவர்போல் மறைந்து நின்றார். இதன்பின் கமக்காரரின் குலதெய்வமாக வழிபடப்படுகிறார்.

- **வழிபாட்டின் நோக்கம்**
  - தொழில் விருத்தி
  - கொடிய நோய் நீக்கம்
  - பயிர்களின் அதிக விளைச்சல் (நெல் / பனங்கிழங்கு / மரவள்ளி)

- **வழிபாட்டு முறை – சடங்குகள்**
  - ஆண்டுப் பொங்கல்
  - மடைபரவுதல் (பழங்கள், பலவிதமான பலகாரங்கள்)
  - வளந்துப்பானை வைத்தல்
  - மடைப்பொருட்கள் வாழையிலை, பனையோலை என்பவற்றில் பரவிப் படைக்கப்படும்
  - மடைபரவலின் போது பறை முழங்குதல், கலையாடுதல் கட்டுச்சொல்லுதல், சூனியம் வெட்டுதல் என்பன இடம்பெறும்.
  - தொழிலின் விளைவு கருதி மக்கள் பனம்பாத்தி, மரவள்ளித்தடி, முதல் சீவும் பனங்கள்ளு என்பவற்றில் பங்கு வைத்து நேர்த்திக்கடன் வைப்பர்.

- **இலங்கையில் வழிபடப்படும் இடங்கள்**
  - கோப்பாய் இலகடி அண்ணமார், இணுவில் இளந்தாரி அண்ணமார், வடமராட்சி கிருச்சியால் அண்ணமார், யாழ்ப்பாணம் மயிலணி அண்ணமார், ஆத்திசூடி அண்ணமார் ஆலயம் என்பன குறிப்பிடத்தக்கன.
  - புத்தூர் கிழக்கு, பன்னாலை, அரியாலை, வடமராட்சி, தென்மராட்சி, வன்னியில் கள்ளிக்குளம், கொக்கிளாய்ப் பிரதேசங்களிலும் வழிபாடு இடம்பெறுகிறது.

- **இலங்கையில் அண்ணமார் வழிபாடு பற்றிக் கூறும் நூல்கள்**
  - முல்லைத்தீவு அண்ணமார் சிந்து
  - காரைநகர் பிட்டி ஓலை அண்ணமார் கதை
  - கோணேசர் கல்வெட்டு என வழங்கப்படும் கோணேசர்சாசனப் பாடல்
  - அரியாலை மாதன் சின்னையா ஏடு
  - புராணக்கதைகள்
  - யாழ்ப்பாண வரலாறு கூறும் மரபுவழி இலக்கியமான வையாபாடல்

- ஐம்பதுகளைத் தொடர்ந்து மிகச்சிறிய அளவில் சமஸ்கிருத முயற்சிகள் இடம்பெற்ற போதும் ஏனைய நாட்டார் வழிபாடுகளைப் போல அதிக மாற்றம் காணாதது அண்ணமார் வழிபாடு ஆகும்.

**(ஈ) பெரிய தம்பிரான் வழிபாடு**

- **தோற்றம்**
  - தக்கனின் யாகத்தை அழிப்பதற்காக வீரபத்திரரால் தோற்றுவிக்கப்பட்டவர்
  - தக்கனின் ஓம குண்டத்தில் தோன்றியவர்

- தக்கனோடு போரிடச் சென்றவர் தக்கன் கொடுத்த மாம்பழத்தை உண்டு மயங்கிவிட்டார்
- வீரபத்திரர் தேடிச் சென்ற போது ஆடை தோய்ப்பவர்களின் சாடியில் ஒளித்துக் கொண்டார்.
- வீரபத்திரர் சென்று ஆடை தோய்ப்பவன் சாடியைத் திறக்க பெரிய தம்பிரான் வெளியே வந்தார். அப்போது ஆடை தோய்ப்பவன் "பெரிய தம்பிரானே எங்கள் குலத்தைக் காத்தருள வேண்டும்" எனக் கூறினான் அன்று முதல் ஆடைதோய்ப்பவர்களின் குலதெய்வமாகப் போற்றி வழிபடப்படுகிறார்.

- அழகுபொருந்திய வெள்ளைத்தாமரையில் வீற்றிருப்பவன், வெற்றிக் கொடியைக் கையில் கொண்டவன், எங்கும் நிறைந்திருப்பவன், பிழைகளைப் பொறுப்பவர், ஆக்குபவரும் அழிப்பவரும் அவரே என நூல்கள் புகழ்ந்து பேசும்.

- **வழிபாட்டு முறை – சடங்குகள்**
  - ஆகமம் சாராத சடங்குமுறை – பிரதேசங்களுக்கிடையில் வேறுபடும்
  - சடங்கை நடத்துபவர் கட்டாடி முதலியார்
  - பொங்கல், விரதமிருத்தல், நேர்த்தி செய்தல், காய்கறிபழங்கள் கொடுத்தல்.
  - பரிகலம் அழைத்தல், கொடியேற்றம், இராசசேவை (வாழ்த்துப்பா), சேலையை விரித்து ஆடுதல்.
  - பொங்கல் மடை பரவுதல், கண்ணூறு கழித்தல், தீப்பாய்தல், வழிபடல்.
  - மடைப்பொருட்கள் - பட்டு, பழங்கள், சிலம்பு, பிரம்பு, இரும்பு, உலக்கை, கண்ணாடி, மஞ்சள், எண்ணெய், சாதிக்காய், தொட்டில்

- **வழிபடு நோக்கம் / சமூக முக்கியத்துவம்**
  - பட்டிகள் பெருகும், பாற்சோறு பொங்கும்
  - புத்திரப்பேறு கிட்டும்
  - செல்வம் பெருகும்
  - சமூக ஒழுகலாறு பேணப்படுதல்
  - புனிதத்தன்மை பேணப்படுதல்
  - சமூகக் கூட்டுணர்வு பெருகுதல்
  - இடையூறற்ற வழிபாடு

- **பிரபந்தங்கள்**
  - பெரிய தம்பிரான் காவியம், பெரியதம்பிரான் துதி, பெரிய தம்பிரான் பதிகம், பெரிய தம்பிரான் ஊஞ்சல், பெரிய தம்பிரான் அடைக்கல அகவல்.

- **ஆலயங்கள்**
  - ஏழாலை பெரிய தம்பிரான் ஆலயம் (ஆலயப் பூசகர் படிமத்தான் என அழைக்கப்படுவார்)
  - அக்கரைப்பற்று பாண்டிருப்பு, பெரிய நீலாவணை தாளங்குடா, அரசடி, ஏறாவூர், வந்தாறுமூலை, தம்பிலுவில், குடியிருப்பு
  - சித்தங்கேணி, அராலி, அளவெட்டி, ஏழாலை, தொல்புரம், சுழிபுரம், பலாலி, மானிப்பாய்

## 25
## பண்டிகைகள்

- இந்து சமய மக்களால் விசேட தினங்களில் சமயம் சார்ந்ததும் சமூகம் சார்ந்ததும் வருடத்தின் குறிப்பிட்ட தினத்தில் புத்தாடை, வழிபாடு, விருந்து என்பவற்றுடன் சிறப்பாகக் கொண்டாடப்படுபவை பண்டிகைகள் ஆகும்.
- முத்தி அடைவதற்கான வழிவகைகளில் பண்டிகைகளும் அடங்குகின்றன.
- **பண்டிகைகள் கொண்டாடப்படுவதன் மூலம் பல நற்பயன்களையும் மனித விழுமியங்களையும் அடைந்து கொள்கிறோம்.**
  - சாத்வீகக் குணங்கள் பெருகுதல் (அன்பு, கருணை, நன்றியுணர்வு)
  - மன நிறைவு ஏற்படுதல்
  - விருந்தோம்பல் பண்பு வளருதல்
  - பகிர்ந்துண்ணுதல்
  - சமூக நல்லிணக்கம் பேணுதல் மனித உறவுகள் பலமடைதல்.
  - சமய உணர்வு பெறுதல்
  - பாவங்களை விலக்குதல்
  - சிந்தனை, சொல், செயல் புனிதமடைதல்
  - குடும்ப உறவுகள் பேணப்படுதல் - பெரியோரை மதித்தல்
  - அறநெறி ஒழுகுதல்
  - பிறர் நலம் பேணுதல்
  - பகை உணர்வுகளை விலக்கிக் கொள்ளுதல்.

**01.பின்வரும் பண்டிகைகள் பற்றிய தகவல்களை எழுதுக.**

(அ) தைப்பொங்கல்
(ஆ) சித்திரை வருடப்பிறப்பு
(இ) தீபாவளி

**(அ) தைப்பொங்கல்**

- தை மாத முதல் நாளில் கொண்டாடப்படும் பண்டிகை
- சூரிய பகவான் தெற்கிலிருந்து வடக்கு நோக்கிச் செல்லும் உத்தராயண காலத்தின் தொடக்க நாள்
- சூரியன் தனு இராசியிலிருந்து மகர இராசிக்குச் செல்லும் நாள் என்பதால் ''மகர சங்கராந்தி'' என்று அழைப்பர்.
- தைப்பொங்கல் தினம், தைத்திருநாள், உழவர் திருநாள், சூரியப் பொங்கல், அறுவடை நாள் என்றும் அழைப்பர்.
- உணவு உற்பத்திக்கும் உயிர் வளர்ச்சிக்கும் தேவையான வெப்பம் சூரிய ஒளி என்பவற்றைத் தரும் சூரிய பகவானுக்கும் சேற்றில் இறங்கி உழைத்து எமக்கு உணவை வழங்கும் உழவர் பெருமக்களுக்கும் நன்றி தெரிவிக்கும் நன்றித் திருநாள்.
- பொங்கல் என்பதற்குப் பொங்கிப் பெருகுதல் என்றும் பொருள் கொள்ளலாம். இன்பம், செல்வம் பொங்கிப் பெருகுதல்.
- தைப்பொங்கல் முதல் நாள் போகிப் பண்டிகை கொண்டாடப்படும் - அல்லவை அழிந்து நல்லமை பெருகட்டும் எனும் அடிப்படையில் கொண்டாடப்படுகிறது.

**கொண்டாடப்படும் முறை**

- வீட்டு முற்றத்தில் சூரியன் எழும் திசை நோக்கி நடைபெறும்.
- அதிகாலை எழுந்து, வீட்டைச்சுத்தம் செய்து. பின் நீராடிப் புத்தாடை அணிவர்.
- பொங்கல் இடம்பெறும் இடத்தினை மெழுகி மாவிலை தோரணம் கட்டி அலங்கரிப்பர். கோலமிட்டு அழகுபடுத்துவர்.

- மஞ்சள், இஞ்சி மலர் மாலைகளால் அலங்கரிக்கப்பட்ட புதிய பானையில் அறுவடை செய்த புத்தரிசி இட்டு புதுப்பாலில் சர்க்கரை சீனி இட்டுப் பொங்கல் பொங்குவர்.
- பால் பொங்கி வரும் போது வாழ்வில் இன்பங்கள் பொங்கிப் பெருக வேண்டும் என்று ''பொங்கலோ பொங்கல்'' என்று குரவையிடுவர். சிறுவர் வெடி கொழுத்தி மகிழ்வர்.
- பொங்கும் மங்களம் எங்கும் தங்குக என்ற உணர்வோடு சூரியனுக்கும் படைத்து மகிழ்வர்.
- ஆலய வழிபாடு செய்வர். கரும்பு, கனி வகைகள் கற்கண்டு போன்றவற்றையும் படைப்பர்.
- விவசாய உற்பத்திக்கு உதவிபுரிந்த மாடுகளுக்கு நன்றி கூறும் தினமாகத் தைப்பொங்கலுக்கு அடுத்த நாள் நிகழும் மாட்டுப் பொங்கல் திகழ்கிறது. இது பட்டிப் பொங்கல் எனவும் அழைக்கப்படுகிறது.
- மாடுகளைக் குளிப்பாட்டிக் கொம்புகளுக்கு வர்ணம் பூசி மாலை அணிவித்து பொட்டிட்டு படையலிட்டு வணங்கி வழிபாடு செய்வர்.

**தைப்பொங்கல் பண்டிகை மூலம் வளர்க்கப்படும் பண்புகள்**

- அன்பு, அறம், அகிம்சை, கருணை
- நன்றிமறவாமை
- பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்
- இறையுணர்வு, ஆன்மீக வாழ்வு
- பெரியோரை மதித்தல்
- வாழ்த்தும் பண்பு வளர்க்கப்படுதல்
- மனித உறவுகள், மனித நேயம் பேணப்படுதல்.

**(ஆ) சித்திரை வருடப் பிறப்பு**

- சித்திரை மாதம் மேட இராசியில் சூரியன் பிரவேசிக்கும் போது சித்திரை வருடப்பிறப்பு பிறக்கிறது.
- இத்தினத்தில் பிரம்மா படைப்புத் தொழிலைத் தொடங்கியதாகப் புராணங்கள் கூறுகின்றன.
- புறச்சுத்தம், அகச்சுத்தம் பேணப்படும்.
- புத்தாண்டு தினத்தில் வரும் சுபவேளையில் மருத்துநீர் தலையில் வைத்து நீராடுவர். (மருத்துநீர் பலவகையான மலர்கள், மருத்துவக் குணம் நிறைந்த இலைகள், அறுகு, மஞ்சள், மிளகு, திப்பிலி பால் முதலியவற்றைச் சேர்த்துக் காய்ச்சித் தயாரிப்பதாகும்.)
- பாவங்கள், தோசங்கள் நீங்குவதற்காக மருத்துநீர் தேய்த்து நீராடுவர். ஆலயங்களில் அல்லது அர்ச்சகர்களின் வீட்டில் தயாரிக்கப்படும்.
- புத்தாடை அணிவர்.
- நிறைகுடம் வைத்தல்.
- அலங்காரத் தோரணம் கட்டுதல்.
- பலவகைப் பலகாரங்கள் முற்றத்தில் பொங்கும் பொங்கல் பழவகைகள் என்பவற்றை இறைவனுக்குப் படைத்து வழிபாடு செய்வர்.
- ஆலய வழிபாடு செய்தல்.
- மூத்தோர், பெரியோர் ஆகியோரிடம் ஆசீர்வாதம் பெறுதல்.
- பஞ்சாங்கம் குறிப்பிடும் சுபநேரத்தில் மூத்தோரிடமிருந்து கைவிசேடம் பெறுதல்.
- சித்திரை வருடப்பிறப்பில் வரும் சுபநேரத்தில் புதிய செயற்பாடுகளை ஆரம்பிப்பர்.
- ஏர்மங்கலம், புதிரெடுத்தல், விதைத்தல், கல்வி, கலைசெயற்பாடுகள், வியாபாரம், புதுக் கணக்கு ஆரம்பித்தல்.

- பாரம்பரிய விளையாட்டுக்களான போர்த்தேங்காய் அடித்தல், ஊஞ்சல், கிளித்தட்டு, கிட்டிப்புள் ஆகியவற்றை விளையாடி மகிழ்வர்.
- கலைநிகழ்ச்சிகள் இடம்பெறும் - அழகியல் உணர்வு பெருகும்.

**வளர்க்கப்படும் பண்பாட்டம்சங்கள்**

- பகிர்ந்துண்ணுதல்
- பெரியோரை மதித்தல்
- இறை நம்பிக்கை
- அன்பு, கருணை, நன்றியுணர்வு
- சகோதரத்துவம்
- சமூக நல்லிணக்கம், சமூக ஒற்றுமை
- பகைமை மன்னிக்கப்பட்டு மனித உறவு பலப்படுத்தல்
- தேசிய ஒற்றுமை, இன ஐக்கியம் பேணப்படுதல்

**(இ) தீபாவளி**

- மகா விஸ்ண நரகாசுரனைச் சங்காரம் செய்த ஐப்பசி மாதத்து கிருஷ்ண பட்சச் சதுர்த்தசி அன்று கொண்டாடப்படகிறது.
- தீபாவளி – தீப + ஆவலி – தீபங்களை வரிசையாக ஏற்றுதல்.
  (இன்று தீபாவளி என்னும் பெயரால் அழைக்கப்பட்டு வருகிறது)
- ஆன்மாக்கள் நரக வழியினின்றும் கடவுளால் நீக்கப்படுவதால் நரக சதுர்த்தசி என அழைக்கப்படுகிறது.
- பாரதத்தில் இமயம் தொடக்கம் குமரி வரை பல பிரதேசங்களிலும் இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் நாடுகளிலும் ஏனைய உலக நாடுகளிலும் (புலம்பெயர் தமிழர்களால்) கொண்டாடப்படுகிறது.

- **வடபாரதத்தில் தீபாவளி பின்வருமாறு அழைக்கப்படுகிறது**.
  1. யட்சராத்திரி
  2. சுகராத்ரி
  3. தீபப்பிரபதி உற்சவம்
  4. ஜெகத்ரபத்திரி
  5. தீபோற்சவம்
  6. தீபமாலா வர்ணனம்
  7. கார்த்திகை அமயம் தீபமால வர்ணனம்

- **தென்பாரதத்தில் தீபாவளி கொண்டாப்படப்பட்டமைக்கான சான்றுகள்**
  - முற்கால சாளுக்ய மன்னனான திருப்புவன மல்லவின் கி.பி 1117 இன் கன்னடக் கல்வெட்டு
  - விஜயநகர ஆட்சிபற்றி ‘‘ஆகாசபைரவசுதா’’ என்ற நூலில் மன்னனின் வெற்றி செல்வளம் என்பவற்றுக்காக இரு நாட்கள் மகாலட்சுமி பூசை செய்தவை என்பதாகும்.

- **கொண்டாடப்படும் முறை**
  - நீராடி அக, புறச் சுத்தத்துடன் ஆலயங்களுக்குச் சென்று விளக்கேற்றி வழிபாடு செய்தல், புண்ணிய காரியம் செய்தல்.
  - இல்லங்கள் தோறும் தீபங்கள் ஏற்றுதல்.
  - இலங்கையிலும் தமிழ்நாட்டிலும் பின்வருமாறு கொண்டாடப்படுகிறது.
    - பழையவற்றை நீக்கிப் புதியனவற்றை வாங்குதல்

- தாயாரின் அல்லது மனைவியில் கையால் தலையில் எண்ணெய் தேய்த்து நீராடுதல்
- எண்ணெய்யில் இலக்குமியும் வெந்நீரில் கங்கையும் இருப்பதாக ஐதீகம்

➢ தீபாவளிப்பட்சணங்களும் அறுசுவை உணவைத் தயாரித்து உறவினர் நண்பர்களுக்கு விருந்தளித்து மகிழ்வர்.

- **தத்துவம்**
  - ➢ தீப ஒளி சிற்சக்தியாகக் கொள்ளப்படடு ஒளியானது இருளை நீக்குவது போல சிற்சக்தி ஆன்மாவின் அக இருளை நீக்கி மலத்தைப் போக்கி ஞானத்தினை நல்குகிறது.
  - ➢ ஒவ்வொருவரும் ஞானமாகிய ஒளியை அடைவதே தீபாவளிப் பண்டிகையின் தத்துவம் ஆகும்.
  - ➢ நல்லெண்ணமாகிய எண்ணெய்யை நம் உடம்பில் பூசி சித்தமாகிய அரப்பினால் அழுக்காறு வெகுளி என்பவற்றைத் தேய்த்துப் போக்குதல் வேண்டும். ஞானமாகிய தூய உடைகளை உடுத்து விளக்கேற்றிப் புற இருளை நீக்கும் போது அக இருளும் நீங்கும்.

- **முக்கியத்துவம்**
  - ➢ இறை உணர்வு
  - ➢ மனம், சிந்தனை, செயல் தூய்மையாக இருத்தல்
  - ➢ மகிழ்ச்சி, ஒற்றுமை கூடி வாழ்தல், விட்டுக் கொடுத்தல்
  - ➢ குடும்பம், சமூகம் மகிழ்ச்சியடைதல்.
  - ➢ பகிர்ந்துண்ணுதல்

- **தீபாவளிப் பண்டிகை தொடர்பான கதை**

  நானே பெரியவன் என்று அகங்காரம் கொண்டிருந்த நரகாசுரன் எல்லோரையும் வருத்தினான். ஆலயங்களிலே பூசைகள் விழாக்களை நிறுத்தினான். வீடுகள் கோயில்கள் இருளில் மூழ்கிக் கிடந்தன. மக்கள் இறைவனிடம் முறையிட்டனர். ''நல்லவர்களைக் காத்து தீயவர்களை அழிக்கவும் தர்மத்தை நிலைநாட்டவும் யுகந்தோறும் நான் தோன்றுகிறேன்'' என்று பகவத்கீதையில் அருளியபடி கிருஷ்ண பகவான் நரகாசுரனை வதம் செய்தார். ''நான் இறக்கும் இத்தினத்தில் உன்னை வழிபடுபவருக்கு அருள் புரிய வேண்டும்'' என்று நரகாசுரன் வேண்டிக் கொண்டான். இந்நிகழ்வை நினைவுக் கூரும் வகையிலேயே தீபாவளிப் பண்டிகை கொண்டாடப்படுகிறது.

## 26
## இந்து சமய விரதங்கள்

- விரதம், நோன்பு என்பன ஒருபொருட் சொற்கள்
- விரதமானது மனம், பொறிவழி போகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் கடவுளை மெய்யன்போடு வழிபடுதல் - ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் கூற்று
- விரதங்கள் இறைவனை நோக்கி அனுஷ்டிக்கப்படுகின்றன.
- விரதங்கள் இறைவனின் திருவருளைப் பெற உதவுகின்றன.
- இறைவனை நோக்கிச் செய்யும் தவமாகும்.

- **விரத காலத்தில் மேற்கொள்ள வேண்டிய பொதுவான நியதிகள்**
  - ➢ சங்கற்பம் செய்தல்
  - ➢ மனம், வாக்கு, காயம் மூன்றும் தூய்மைப்படுத்துதல்.
  - ➢ அதிகாலையில் நீராடி சுத்தமான ஆடை அணிதல்

- தூய மனத்துடன் ஆலய தரிசனம் செய்தல்
- திருமுறை ஓதுதல், புராணம் படித்தல், கேட்டல்
- சமயப்பிரசங்கம் கேட்டல்
- சிவ காரியங்களில் ஈடுபடுதல்
- பகலில் நித்திரை செய்தல், தாம்பூலம் தரித்தல், கோபம் கொள்ளுதல், மற்றவரை நிந்தித்தல், புகைத்தல், பொய் பேசுதல் தவிர்க்கப்படுதல் வேண்டும்.
- விரதமுடியில் சிவனடியாருடன் உணவு உண்ணுதல்

- **விரதங்கள் மூலம் பெறப்படும் பயன்கள்**
  - நற்பண்புகள் வளர்க்கப்படுகின்றன
  - தூய சிந்தனை, பணிவு, வலிமை, கடவுள் பக்தி
  - பாவங்கள் குறைகின்றன, உடல், உள மேம்பாடு
  - மனவடக்கம், மன ஒருமை, மன அமைதி
  - பக்தி நெறிக்கு வழிகாட்டுகின்றது
  - முத்திக்கு வழிகாட்டுதல் / ஆன்மீக வாழ்வு மேம்படுதல்
  - துன்பங்களைத் தாங்கும் பயிற்சி
  - பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யாத மனம்

- **விரதங்கள் வாரம், திதிகள், நட்சத்திரம் வருடம் என்ற அடிப்படைகளில் வகுக்கப்பட்டுள்ளன.**

**01. பின்வரும் விரதங்கள் பற்றிய தகவல்களைத் தருக.**

(அ) சிவராத்திரி
(ஆ) பிரதேச விரதம்
(இ) நவராத்திரி
(ஈ) வரலட்சுமி விரதம்
(உ) பெருங்கதை விரதம்
(ஊ) விநாயகர் சதுர்த்தி விரதம்
(எ) கந்தசஸ்டி விரதம்
(ஏ) வைரவ விரதம்
(ஐ) வைகுண்ட ஏகாதசி விரதம்

**(அ) சிவராத்திரி விரதம்**

- சிவபெருமானைக் குறித்து அனுட்டிக்கப்படும் விரதம்
- பிரமாவும் விஸ்ணுவும் அடிமுடி தேடிய வரலாற்றுடன் தொடர்புடையது
- சிவராத்திரி – சிவனுடைய இராத்திரி, சிவமான இராத்திரி,
  சிவனை அர்ச்சிக்கும் இராத்திரி
  சிவனுக்கு இன்பமான இராத்திரி
- நித்திய சிவராத்திரி மாத சிவராத்திரி, மகா சிவராத்திரி பட்ச சிவராத்திரி, யோக சிவராத்திரி என ஐந்து வகைப்படும்.
- **நித்திய சிவராத்திரி**
  ஆண்டிலுள்ள 24 சதுர்த்தசிகளிலும் இடம்பெறும் சிவராத்திரி
- **யோக சிவராத்திரி**
  திங்கட்கிழமை முழுவதும் அமாவாசையாக வந்தால் யோக சிவராத்திரி
- **பட்ச சிவராத்திரி**
  தை மாதம் கிருஷ்ணபட்ச பிரதமை முதல் 13 நாள் பூசை
- **மாத சிவராத்திரி**
  ஒவ்வொரு மாதம் தேய்பிறை சதுர்த்தசி இரவு
- **மகா சிவராத்திரி**

மாசி மாத கிருஷ்ணபட்ச (தேய்பிறை) சதுர்த்தசி (பதினாங்காவது நாள்) அனுஷ்டிக்கப்படும்.

- **விரத நியதிகள்**
  - ➢ விரத தினத்துக்கு முதல் நாள் ஒரு பொழுது உணவு உண்ணுதல்
  - ➢ விரத தினத்தன்று உபவாசம் இருத்தல்
  - ➢ சிவாலய தரிசனம்
  - ➢ நான்கு சாமப் பூசைகளைக் காணுதல்
  - ➢ சிவதோத்திரம் பாடுதல், சிவன் புகழ் பாடுதல், கேட்டல்
  - ➢ பஞ்சாட்சர மந்திரம் செபித்தல், சிவபுராணம் பாடுதல்
  - ➢ இரவு முழுவதும் விழித்திருத்தல் இயலாதோர் இலிங்கோற்ப காலம் வரையாவது கண்விழித்தல்
  - ➢ மறு நாட் காலை விரதம் முடித்து சூரிய உதயத்தின் முன் பாரணை பண்ணுதல்
  - ➢ சிவபெருமானுக்கு விளக்கிட்டு நல்லெண்ணெய் பஞ்சாமிர்தம், நெய், பால், தயிர், தேன், கருப்பஞ்சாறு, இளநீர், பழச்சாறு முதலியவைகளால் அபிசேகம் செய்தல்.
  - ➢ பலவித தின்பண்டங்கள், பழங்கள் படைத்தல்.
  - ➢ சிவனடியார்க்கு இயன்றளவு நன்மை செய்தல்.
  - ➢ 14 ஆண்டுகள் விரதமிருந்து கடைசி ஆண்டு பூர்த்தி செய்தல் வேண்டும்.

- **சிவராத்திரி விரதப்பயன்கள்**
  - ➢ பாவங்கள் விலகிப் புண்ணியம் கிடைக்கும்
  - ➢ அகவிருள் நீங்கி சிவஞான ஒளி பெருகும்
  - ➢ ஜீவகாருண்யம், அன்பு, பொறுமை, பணிவு, பகிர்ந்துண்ணல், சகோதரத்துவம் ஆகிய விழுமியப் பண்புகள் வளர்ச்சியடையும்
  - ➢ முத்தியின்பம் கிடைக்கும்.
  - ➢ ஆணவ வலிமை குன்றும்.
  - ➢ நூறு ஏகாதசி விரத பலனைத் தரும்.
  - ➢ சிவராத்திரி அபிசேக தீர்த்தத்தை அருந்தினால் தீராத நோய்கள் தீரும்.
  - ➢ தடைகள், தோஷங்கள், உடல் உபாதைகள் நீங்கும்
- **சிவராத்திரி விரதம் உணர்த்தும் தத்துவம்**

  அறிவு எல்லை மீறினால் அகங்காரம் ஏற்படும் செல்வம் எல்லை மீறினால் செருக்கு உருவாகும் செல்வத்தாலும் அறிவினாலும் சிவனை அளவிட்டு அறிய முடியாது. அன்பினாலும் பக்தியினாலுமே இறைவனைக் காண முடியும் என்னும் தத்தவத்தை உணர்த்துவதே சிவராத்திரி விரதம் உணர்த்தும் தத்துவம் ஆகும்.

- **சிவராத்திரி விரதத்துடன் தொடர்புடைய கதைகள்**
  - ➢ உமாதேவியார் விளையாட்டாகச் சிவபெருமானது கண்களைப் பொத்திவிட பேரிருள் பரவியது. இந்நிலையில் தேவர்கள் சிவபெருமானை நோக்கிச் சிவபூசை செய்த தினம்.
  - ➢ அகந்தை கொண்ட பிரமாவும் விஸ்ணுவும் சோதிப் பிழம்பாகத் தோன்றிய சிவபெருமானின் அடியையும் முடியையும் காணமுடியாது அகந்தை ஒளிந்த தினம்.
  - ➢ ஓர் ஊழியின் இறுதியிலே அண்டங்களை இருள் மூடிக் கொண்டது. அந்த இருளைப் போக்க வேண்டி உருதிரமூர்த்தி சிவலிங்கத்தை வைத்து வழிபட்டார் அதுவே சிவராத்திரி (ஆகமங்கள்)
  - ➢ பாற்கடலில் எழுந்த நஞ்சைச் சிவன் உண்டார். அந்த நஞ்சானது சிவனுக்கு கெடுதல் செய்யாதிருக்க வேண்டி தேவர்கள் இரவு முழுவதும் பூசை செய்தனர் (ஆகமங்கள்)
  - ➢ உலக முடிவாகிய ஊழிக்காலத்தில் பிரமதேவர் இறுதியுற்றார். உயிர்கள், உலகங்கள் ஒடுங்கின. அந்த இரவுப்பொழுதில் உமாதேவியார் இறைவனைப் பிரார்த்தனை செய்து இறையருள் பெற்றார்.

    "இவ்விரவிலே விரதம் இருப்போர் யாவராயினும் மோட்சத்தை அடைய அருள்க." என்று வேண்டினர்.

- சித்ரபானு என்ற மன்னன் முற்பிறவி ஒன்றில் சுச்வரன் என்னும் பெயருடைய வேடுவனாக இருந்தான். ஒருமுறை வேட்டைக்குச் சென்ற போது வில்வமரம் ஒன்றில் ஏறி அமர்ந்திருந்தான். நித்திரை வராமலிருக்க வில்வமிலைகளைக் கீழே போட்டான். மரத்தின் கீழே இருந்த சிவலிங்கத்தின் மேல் வீழந்தது. அன்றைய தினம் சிவராத்திரி என்பதால் அவன் மோட்சம் அடைந்தான். அறியாமலே அவன் செய்த செயல் அவனுக்கு மோட்சத்தைக் கொடுத்தது. அந்த இடம் திருவைகாவூர் என்னும் திருத்தலம் ஆகும்.

- **சிவராத்திரி மகிமை கூறும் நூல்கள்**

  கந்தபுராணம் / இலிங்க புராணம் / சிவராத்திரி புராணம்

**(ஆ) பிரதோச விரதம்.**

- பிரதோசம் ---- முற்பிறப்பில் செய்த குற்ற நீக்கமாகும்.
- சிவபெருமானை நோக்கி அனுட்டிக்கப்படும் விரதம்.
- மாதந்தோறும் வருகின்ற சுக்கிலபட்சம் எனும் வளர்பிறைக் காலத்திலும் கிருஷ்ணபட்சம் எனும் தேய்பிறைக் காலத்திலும் உண்டாகின்ற பதிமூன்றாம் நாளைப் பிரதோச காலம் என்பர்.
- இவ்விரத்தின் பெருமையைப் பிரமோத்தர காண்டத்தில் 123 செய்யுள்கள் விளக்குகின்றன.
- பிரதோச காலம் என்பது பி.பகல் 4.30 - இரவு 7.30 மணிவரை

- **விரத நியதிகள்**
  - அதிகாலை நித்திரை விட்டெழுந்து நீராடித் தூய்மையாக ஆலயத்துக்குச் சென்று வழிபடுதல்.
  - அருள் நூல்களையும் தேவார, திருவாசங்களையும் பஞ்சாட்சர மந்திரத்தையும் ஓதுதல்.
  - மாலை இறைவனுக்கு இடம்பெறும் பூசைகளுக்கு இயன்ற உதவிகளைச் செய்தல்.
  - இடபதேவருக்கு அறுகம்புல் மாலை, சிவப்பு அரிசி நிவேதனம், நெய்விளக்கு எரித்தல்.
  - தான, தருமம் செய்தல்.
  - உபவாசம் இருத்தல் உத்தமம் - இயலாதவர்கள் ஏதேனும் சிறிதளவு உட்கொண்டு அடுத்த நாட் காலை பாரன பண்ண முடியும்.
  - பிரதோச காலத்தில் போசனம் சயனம், ஸ்நானம், விஸ்ணு தரிசனம், எண்ணெய் தேய்த்தல், வாகனமேறல், மந்திர செபம், நூல் படித்தல் என்பன செய்யத்தகாதவை ஆகும்.

- **பிரதோச காலத்தில் சிவபெருமானை வழிபடும் முறை**
  - இடபதேவரை முதலில் வணங்கி அங்கு நின்று இடமாகச் சண்டேசுரரைத் தரிசித்து சென்ற வழியே திரும்பி வந்து மீண்டும் இடபதேவரைத் தரிசித்து அங்கும் நின்று வலமாகச் சென்று வடதிசையைச் சேர்ந்து கோமுகையை கடவாது முன் சென்ற வழியே திரும்பி வந்து இடப தேவரைத் தரிசித்து அங்கு நின்றும் இடமாகச் சென்று சண்டேசுரரைத் தரிசித்து அங்கு நின்று திரும்பி இடபதேவரை தரிசியாது இடமாகச் சென்று சண்டேசுரரைத் தரிசித்து திரும்பி வந்து இடபதேவரைத் தரிசித்து அவருடைய இரண்டு கொம்பின் நடுவே பிரணவத்தொடு "ஹரஹர" சொல்லிச் சிவலிங்கப் பெருமானைத் தரிசித்தல் வேண்டும். (ஆறுமுகநாவலர் 2 ஆம் சைவ வினாவிடை)

- **பிரதோச விரதத்தின் பயன்**
  - கடன், வறுமை, நோய், பயம், மரணவேதனை பாவம் நீங்கும்.
  - பாவ மன்னிப்பப் பெற்று பேரருள் பெற்று பெருவாழ்வு வாழுதல்

- **பிரதோச விரதம் பற்றிக் கூறும் நூல்கள்**
  சகலாகம சங்கிரகம், உத்தரகாரணம், சிவதருமோத்திரம், பிரமோத்தர காண்டம்

- **பிரதோச விரதத்தோடு தொடர்புடைய கதை**
  - ➢ இறைவன் நஞ்சுண்ட வரலாற்றோடு தொடர்புடையது.
  - ➢ தம் பிழைகளை உணர்ந்த தேவர்கள் இடபதேவரின் கொம்புகளுக்கிடையில் இறைவனின் திருநடனத்தைக் கண்டருளிய காலம் பிரதோச காலம் ஆகும்.
  - ➢ இத்தினம் வளர்பிறையும் திரயோதசியும் சனிக்கிழமையும் கூடிய தினமாகும். விரதம் அனுட்டிக்கத் தொடங்குபவர்கள் சனிப்பிரதோச நாளிலிருந்து தொடங்குதல் உத்தமம் ஆகும்.

**(இ) நவராத்திரி**

- தேவி வழிபாட்டின் தொன்மைக்கு கன்னி மாதத்தில் நடைபெறும் நவராத்திரி வழிபாடு சான்றாகும்.
- மேற்கு வங்காளம் - காளி பூஜை, துர்க்காபூசை
  மைசூர் - தசரா
  உத்தரப்பிரதேசம் - ராமலீலா
  இலங்கை - நவராத்திரி
  தென்னிந்தியா - நவராத்திரி
- புரட்டாதி மாதத்தில் அமாவாசையை அடுத்து வரும் பிரதமை தொடக்கம் நவமி ஈறாக வரும் ஒன்பது நாட்களும் அனுட்டிக்கப்படும் விரதமாகும் பத்தாம் நாள் விஜயதசமி கொண்டாடப்படும்.
- வசந்த காலத்தில் அனுட்டிக்கப்படுவது வசந்த நவராத்திரி சரத் காலத்தில் அனுட்டிக்கப்படுவது – சாரத நவராத்திரி

- **நவராத்திரி விரத நியதிகள்**
  - ➢ பிரதமைத் திதியில் கும்பம் வைத்துப் பூசையைத் தொடங்குதல்
  - ➢ வீடுகளிலும் ஆலயங்களிலும் கொலு வைத்தல்
  - ➢ ஸ்ரீசக்கர மகா யந்திர பூசை செய்தல்
  - ➢ சண்டி ஹோமம் வளர்த்தல்
  - ➢ சகலகலாவல்லிமாலை, அபிராமி அந்தாதி, தேவி மகாத்மியம், துர்க்கா அஷ்டகம், இலக்குமி தோத்திரம் போன்றவற்றைப் பாராயணம் செய்தல்.
  - ➢ முதல் எட்டு நாட்களும் பகல் உணவின்றி இரவில் பூசை முடிந்த பின் பலகாரம், பழம், பால் முதலியன உண்ணதல் வேண்டும்.
  - ➢ மகா நவமியன்று உபவாசகம் இருத்தல் வேண்டும்.
  - ➢ தசமி திதியில், பாரணை செய்தல் வேண்டும்.

- **வழிபாட்டு முறை**
  - ➢ முதல் மூன்று நாட்களும் தைரியம், மன உறுதி, வீரத்தை வேண்டித் துர்க்கா தேவியையும் செல்வத்தை வேண்டி அடுத்த மூன்று நாட்களும் இலட்சுமி தேவியும் இறுதி மூன்று நாட்களும் சகல கலைஞானங்களையும் கல்வி அறிவினையும் சரஸ்வதி தேவியையும் வேண்டி வழிபடுதல் வேண்டும்.
  - ➢ முதல் நாள் - சர்க்கரைப் பொங்கல்
  - ➢ இரண்டாம் நாள்- தயிர்சாதம்
  - ➢ மூன்றாம் நாள் - வெண்பொங்கல்

- ➢ நான்காம் நாள் - எலுமிச்சை சாதம்
- ➢ ஐந்தாம் நாள் - புளியோதரை
- ➢ ஆறாம் நாள் - தேங்காய்ச்சாதம்
- ➢ ஏழாம் நாள் - கற்கண்டு சாதம்
- ➢ எட்டாம் நாள் - சர்க்கரைப் பொங்கல்
- ➢ ஒன்பதாம் நாள் - சுண்டல்

- கடலை, அவல், வடை, மோதகம், கற்கண்டு, பாக்கு, வெற்றிலை, பழம் வைத்துப் படைத்தல்.

❖ **நவராத்திரி விழாவில் இடம்பெறும் கும்பம் வைத்தல், கொலு வைத்தல், மகா நவமி, விஜயதசமி, மானம்பூத்திருவிழா என்பவை பற்றிய தகவல்களைத் தருக.**

1. **கும்பம் வைத்தல்**
   - ○ முதல் நாளில் (பிரதமைத் திதியில்) ஒரு பாத்திரத்தில் மண் நிரம்பி நவதானியங்களைத் தூவி நீர் தெளிப்பர், அப்பாத்திரத்தில் அன்னையை ஆவாகனம் (எழுந்தருள) செய்த கும்பத்தை வைப்பர்.

2. **கொலுவைத்தல்**
   - ○ முதலாவது படி
     ஓரறிவுடைய புல், செடி, கொடி, தாவரங்களின் பொம்மைகள்
   - ○ இரண்டாவது படி
     ஈரறிவுடைய நத்தை, சங்கு போன்ற பொம்மைகள்
   - ○ மூன்றாவது படி
     மூன்றறிவு உயிரினங்களான கறையான் எறும்பு போன்றன
   - ○ நான்காவது படி
     நான்கு அறிவு உயிரினங்களான, நண்டு, வண்டு போன்றன
   - ○ ஐந்தாவது படி
     ஐந்தறிவுடைய மிருகங்கள், பறவைகள்
   - ○ ஆறாவது படி
     ஆறறிவுள்ள மனிதர்களின் பொம்மைகள்
   - ○ ஏழாவது படி
     சித்தர்கள், ரிஷிகள், மகரிஷிகள்
   - ○ எட்டாவது படி
     தேவர்கள், அட்டதிக்குப்பாலகர்கள், நவக்கிரக அதிபதிகள்
   - ○ ஒன்பதாம் படி
     பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகியோர்களின் தேவியர்களின் பொம்மைகள்

   **தத்துவம்**
   - ○ முக்குணங்களையும் கடந்து அம்பிகையின் அருளைப் பெறுதல்

     **முதலாம் படி**
     இயற்கையோடு ஒன்றித்து வாழ்தல்

     **இரண்டாவது படி**
     நிதானமாகச் சிந்தித்துச் செயற்படுதல்

     **மூன்றாவது படி**
     சுறுசுறுப்பு ஒற்றுமை உணர்வுடன் செயற்படுதல்

     **நான்காம்படி**
     ஆழமாகச் சிந்தித்துச் செயலாற்றுதல்

     **ஐந்தாவது படி**

மிருக குணத்தை நீக்கி கூடி வாழும் பண்பை வளர்த்தல்

**ஆறாம்படி**
மிருக குணத்தை நீக்கி மனித குணத்தை கடைப்பிடித்து முழு மனிதனாகுதல்

**ஏழாம் படி**
பொறுமை, பக்தி, தவம் என்பவற்றின் மூலம் தெய்வீக நிலை அடைதல்

**எட்டாம் படி**
தவம், யாகம் என்பவற்றைக் கடைப்பிடித்து தேவர்கள் அந்தஸ்துக்கு உயர வேண்டும்.

**ஒன்பதாம் படி**
தேவ நிலைக்குச் சென்ற உயிர்கள் தெய்வ நிலையை அடைதல்.

**3. மகாநவமி**

- நவராத்திரியின் ஒன்பதாம் நாள் மகா நவமி எனப்படும்.
- ஆயுத பூசை இடம்பெறும் தினம். (பாடப் புத்தகங்கள், பிரசாதங்கள், தொழில் செய்கருவிகள், எழுதுக்கருவிகள், இசைக்கருவிகள் வைத்து பூசை செய்தல்)

**4. விஜய தசமி**

- நவராத்திரி விரதத்தின் பத்தாவது நாள்
- வெற்றிக்குரிய தினம், வெற்றிக்குரிய பத்தாம் நாள்
- ஒன்பது நாள் நோற்ற நோன்பின் பயனைப் பெறும் நாள்
- ஆலயங்கள், கலைக்கூடங்கள் பாடசாலைகள் என்பவற்றில் கலை விழாக்கள் இடம்பெறும்.
- புதிய தொழில்களைத் தொடங்குதல், ஏடு தொடங்குதல், புதிய கல்வியினை, கலைகளைத் தொடங்குதல் இடம்பெறும்
- ஆலயங்களில் மானம் பூத்திருவிழா இடம்பெறும்

**5. மானம்பூத் திருவிழா**

- நவராத்திரி விரதத்தின் பத்தாம் நாள் ஆலயங்களில் இடம்பெறும்.
- கன்னி வாழை வெட்டுதல் என்றும் அழைப்பர்.
- மகிஷாசுரமர்த்தனம் - மகிஷ என்ற அசுர சக்தியை அழித்து மனிதவர்க்கத்தைக் காக்க அற்புதச் செயலை எடுத்துக் காட்டும் நிகழ்வு
- அன்னை அழித்த மகிடாசுரன் - ஆன்மாவை வருத்தும் ஆணவ மலம்
- சகல ஆன்மாக்களுக்கும் நலமளிக்கும் நிகழ்வு.

- **நவராத்திரி விரதப் பயன்கள்**
  - உடல், உள வலிமை, புத்தி, பலம், மனோதிடம், ஞானம், செல்வம்
  - மன அடக்கம், திரிகரண சுத்தி
  - புதிய “செல்” களின் வளர்ச்சியைத் தூண்டுகிறது
  - பழுதடைந்த உயிரணுக்கள் தம்மைத் தாமே அழித்துச் சுத்தம் செய்து கொள்ளும் சுழற்சி தீவிரமடைந்து முதுமை அடைவதிலிருந்து பாதுகாக்கின்றது.
  - பழுதடைந்த செல்களும் புரோட்டீனும் வெளியே தள்ளப்படுகின்றன.
  - பிறவிப்பிணியிலிருந்து விடுபடுதல்.

- ➢ பிற உயிர்களை மதித்து அன்பு பாராட்டி வாழும் பண்புகளை வளர்க்கிறது.
- ➢ தீங்கு விளைவிப்பவர் என்றும் அழிவார்கள் என்பதை உணர்த்துகின்றது.
- ➢ வெற்றிக்குக் கடுமையான முயற்சிகள் அவசியம் என்பதை எடுத்துக் காட்டுகிறது.
- ➢ மனிதப் பண்பை வளர்க்கத் தூண்டுகிறது.
- ➢ தீய பண்புகளை அழிக்கிறது.
- ➢ சுயநலப்பண்பை வளர்க்காது பிறர் நலம் பேணும் இயல்பை உருவாக்குகிறது.

**(ஈ) வரலட்சுமி விரதம் (மேலதிகம்)**

- குலப்பண்டிகை என்று அழைப்பர்.
- இலட்சுமி கடாட்சம் வேண்டி அனுட்டிப்பதனால் வரலட்சுமி விரதம் என்றும் வரலட்சுமி நோன்பு என்றும் அழைப்பர்.

- **அனுட்டிக்கும் காலம்**
  - ➢ ஆவணி மாதப் பூரணைக்கு முந்திய வெள்ளிக்கிழமை
  - ➢ பெண்கள் தமக்கும் தமது குடும்பத்தினருக்கும் வேண்டிய அருளைப் பெறுவதற்காகவே இவ்விரதம் அனுட்டிக்கப்படுகிறது.
  - ➢ வரலட்சுமி விரதத்தன்று வரலட்சுமித் தாயாரை வேண்டினால் அட்டலட்சுமிகளையும் வணங்கிய பலன் கிடைக்கும்.

- **விரத நியதிகள்**
  - ➢ தாமரைக் கோலத்தில் பச்சரிசியால் நிரப்பப்பட்ட கும்பத்தை வைத்தல் - வரவேற்புப் பூசை செய்தல்.
  - ➢ மஞ்சளில் தோய்த்த 9 நூலிழைகளை முறுக்கி எடுத்து முடிந்த ஒன்பது முடிச்சுக்காப்பை கும்பத்தில் வைத்துப்பூசை செய்தல்.
  - ➢ பூசை முடிவில் காப்பை வலக்கையில் கட்டிக் கொள்ளல்.
  - ➢ விசேட நைவேத்தியமாக நெய்சாதம் படைத்தல்.
  - ➢ விசேட அர்ச்சனைப் பொருளாக அறுகம் புல்லைப் பயன்படுத்துதல்.
  - ➢ உபவாசம் விதியாக இல்லை, நண்பகல் போசனம் அல்லது இரவு பலகாரம் உண்ணல் (கொழுக்கட்டை, இட்லி, பழவகை)
  - ➢ ஒன்பது வருடங்கள் தொடர்ந்து அனுட்டித்தல் நன்று.

- **வழிபடு முறை**
  - ➢ விநாயகர் பூசை --- மகாலட்சுமி அஸ்டோத்திரம் பாடுதல் ---- நோன்புச் சரடுக்குப்பூசை செய்தல் --- தாயாருக்குப் பருப்பு பாயாசம், தேங்காய் உழுந்துக் கொழுக்கட்டை, பால், தயிர், வெற்றிலை, பாக்கு, பழம் என்பவற்றை நைவேத்தியம் செய்தல் ---- பெரியோரிடம் ஆசீர்வாதம் வாங்குதல் ----- நோன்புச் சரடை வலதுகையில் கட்டிக் கொள்ளுதல்.

- **விரத நோக்கம் / பயன்**
  - ➢ பரம்பரை வாழையடி வாழையாக குலம் தழைத்தல்
  - ➢ கணவனின் நீண்ட ஆயுள்
  - ➢ அட்ட ஐஸ்வரியம் கிடைத்தல்

**(உ) பெருந்கதை விரதம் (மேலதிகம்)**

- விநாயக விரதங்களில் ஒன்று
- விநாயகர் சஷ்டி விரதம், பிள்ளையார் கதை விரதம், பிள்ளையார் நோன்பு என்ற பெயர்களாலும் அழைப்பர்.

- கார்த்திகை மாதத்து தேய்பிறைப் பிரதமை முதல் மார்கழி மாத வளர்பிறைச் சட்டி ஈறாக 21 நாட்கள் அனுட்டிக்கப்படும்.

- **விரத நியதிகள்**
    - தொடக்க நாளில் 21 இழைகள் கொண்ட காப்பை ஆண்கள் வலக்கையிலும் பெண்கள் இடக்கையிலும் அணிந்து கொள்ளுதல்.
    - முதலிரு தினங்களும் ஒரு பொழுது நண்பகலில் உணவு உண்ணுதல், இரவில் பால் பழம் உண்ணுதல்.
    - நாள்தோறும் விநாயகருக்கு இளநீரும், கரும்பு, மோதகம், அவல், எள்ளுருண்டை என்பவற்றை நிவேதனம் செய்தல்.
    - இறுதித் தினத்தில் உபவாசம் இருத்தல்.
    - பாரணைத் தினத்தில் காப்பை அணிவித்தல்.
    - பாரணையின் போது அடியவர்கள் உறவினர்களுடன் சேர்ந்து உணவு உட்கொள்ளுதல்.
    - 21 வருடங்கள் அனுட்டிப்பது உத்தமம். அல்லது 07 வருடங்கள் அனுட்டிக்க முடியும்.
    - பிள்ளையார் கதை விநாயக புராணம் என்பவற்றைப் படனம் செய்தல் வேண்டும்.

- **பெருங்கதை விரதத்தோடு தொடர்புடைய தகவல்கள்**
    - இலக்கண சுந்தரி ஆவண மிகுதியால் இவ்விரதத்தைக் கடைப்பிடிக்கும் போது இடையில் நோன்பைக் கைவிட்டாள் கட்டிலிருந்து கயிற்றைக் கழற்றி எறிந்தாள் பின் கணவனான விக்கிரமாதித்தனால் துரத்தப்பட்டாள்.
    கணவனைப் பிரிந்து இலக்கண சுந்தரி இவ்விரதத்தைக் கடைப்பிடித்து கணவனுடன் ஒன்று சேர்ந்தாள்.

- **பயன்கள்**
    - சகல பேறுகளும் கிடைக்கும்
    - காரியத்தடை நீங்கும்
    - இடர்கள் தீரும்

**(ஊ) விநாயகர் சதுர்த்தி விரதம்**

- விநாயகப் பெருமானை நோக்கி அனுஷ்டிக்கப்படும் விரதம்.
- ஒவ்வொரு மாதத்திலும் வரும் வளர்பிறைச் சதுர்த்தி இவ்விரதத்துக்குரிய சிறப்பான நாளாகும்.
- சதுர்த்தி என்பது சந்திரனின் இயக்கத்தை அடிப்படையாகக் கொண்ட இந்துக்காலக் கணிப்பு முறையில் அமாவாசை நாளையும் பூரணை நாளையும் அடுத்து வரும் நான்காவது திதி சதுர்த்தி ஆகும்.
- ஆவணி மாதம் வரும் சதுர்த்தி விசேடமானதாகும்.

- **விரத நியதிகள்**
    - அதிகாலையில் குளித்து பூசை அறையில் கோலமிடுதல்.
    - சூரியன் உதிக்கும் வரை எந்த உணவும் உட்கொள்ளக்கூடாது.
    - புதிதாக வாங்கிய கணபதி சிலையை ஒரு தலை வாழை இலையில் பச்சை அரிசியைப் பரப்பி அதன்மேல் வைத்து அறுகம்புல் எருக்கம்பூ மாலை, மலர் மாலை என்பவற்றால் அலங்கரித்தல்.
    - கொழுக்கட்டை எள், கடலை உள்ளிட்ட பலகாரங்கள் முக்கனி என்பவற்றைப் படைத்தல்.

- சந்தனம் குங்குமம் வைத்து தூபதீபம் காட்டி விநாயகருக்கு உகந்த மந்திரங்களை ஓதுதல் வேண்டும்.
- விரதம் இருப்பவர்கள் அன்றைய தினம் விநாயகர் சிலையை நீர் நிலையில் கரைத்து விரதத்தை முடித்தல் வேண்டும்.
- காலணி, குடை, பசுமா: தானம் செய்தல்.
- அன்னதானம் செய்தல் நன்று.
- ஒரு பொழுது உண்டு இரவிலே பழமேனும் பலகாரம் மேனும் உட்கொள்ளல் வேண்டும்.

- **பயன்கள்**
  - ஞாலம் போற்றும் வாழ்வு அமையும்.
  - பொருட் செல்வம் பெருகும்.
  - இன்பங்கள் சேரும் துன்பங்கள் ஓடும்.
  - மக்கள் பேறு, கூரிய புத்தி, காரிய வெற்றி.
  - வாழ்க்கைத் தடுமாற்றங்கள் அகலும்.

- **இவ்விரத நாட்களில் விநாயக புராணம் படிப்பது நன்று.**

- **விரதம் தொம்பான கதை**

  நாரதர் கொண்டு வந்த கனியை பிரமன் சொற்படி சிவபெருமான் முருகனுக்கு கொடுத்தருளினான். இதனைக்கண்ட விநாயகர் பிரமனைக் கடுங்கோபத்துடன் நோக்கினான். அஞ்சிய பிரமன் ''தனது குற்றத்தை மன்னிக்க வேண்டும்'' என்று பணிந்தான். பார்த்துக் கொண்டிருந்த சந்திரன் ஏளனச் சிரிப்புச் செய்தான். விநாயகர் சந்திரனைப் பிரகாசமின்றிப் போகச் சாபமிட்டார். தேவர்கள் இச்சாபத்தை நீக்க வேண்டுமென்று வேண்டினர். வருடத்தில் ஒரு நாள் ஆவணிமாதச் சதுர்த்தியில் சந்திரனைப் பார்ப்பவர்கள் துன்பமடைவார் என்று சாபத்தைக் குறைத்துக் கொண்டார். சந்திரனுடைய வழிபாட்டை ஏற்றுக் கொண்டு சதுர்த்தி தோறும் தம்மையும் துதித்துக் சந்திரனையும் துதிப்பவர் புண்ணியப் பேறு பெறுவர் என அருள் கொடுத்தார்.

- சித்தி விநாயக விரதம் - காரியசித்தி பெறுதல், அடாப்பழி நீங்குதல்
- சங்கடஹர சதுர்த்தி - நோய், கடன், சிறைவாசம், வனவாசம் என்பவற்றிலிருந்து காத்துக் கொள்ளதல்.
- தூர் வா கணபதி விரதம் - சந்ததி அடைதல், செல்வம் பெறுதல்.

**(எ) கந்த சஷ்டி விரதம்**

- முருகப் பெருமானுக்குரிய விரதங்களில் சிறப்பானதாகும்.
- ஐப்பசி மாதத்துத் தீபாவளி அமாவாசையை அடுத்து வருகின்ற வளர்பிறைப் பிரதமை தொடக்கம் சஷ்டி வரையுள்ள ஆறு தினங்கள் முருகப் பெருமானைக் குறித்து அனுட்டிக்கப்படும் விரதம்.

- **விரத நியதிகள்**
  - அமாவாசை தினத்தில் ஒரு வேளை உணவு உண்ணுதல்.
  - ஆரம்ப நாளில் ஆலயத்தில் தர்ப்பை அணிந்து காப்புக் கட்டுதல்.
  - ஆறு தினங்களும் உபவாசம் இருத்தல்.
  - ஆலயத்தில் இறைவழிபாடு, புராண படனம் செய்தல் போன்ற செயல்களில் ஈடுபடுதல்.
  - இறுதி நாளில் காப்பைத் தட்சணையுடன் அர்ச்சகரிடம் சமர்ப்பித்தல்.

- ஏழாம் நாள் அதிகாலை நீராடி ஆலயம் சென்று பாரனை பூசை முடிந்த பின் மாகேசுவர பூசை செய்து விரதத்தை நிறைவு செய்தல்.

- முருகப்பெருமான் சூரனைச் சங்காரம் செய்த தினம் சஷ்டி நாளாகும். இதனை நினைவு கூரும் வண்ணம் ஆலயங்களில் சூரன் போர் நிகழ்வு இடம்பெறும். ஆணவம் அடங்கி ஆன்மா இறைவனை அடைதல் இதன் தத்துவம் ஆகும்.
- மனிதர்களிடம் உட்பகையாக உள்ள காமம், வெகுளி, ஈயாமை, மயக்கம், செருக்கு, பொறாமை என்னும் அசுரப் பண்புகளை அழித்து தெய்வீக நிலையில் பெருவாழ்வு வாழ அருள் பாலிக்கும் இறைவன் ஆற்றலின் பெருமை கந்தசஷ்டி உணர்த்தும் மெய்ப்பொருள் தத்துவம் ஆகும்.
- சூரனைச் சங்காரம் செய்து சேவலைக் கொடியாகவும் மயிலை வாகனமாகவும் ஏற்று அவனுக்கு அருள் புரிந்தமையை உணர்த்துகிறது.
- தீயவராயினும் குமரவேள் திருமுன் உற்றால் தூயவராகி மேலைத் தொல்கதி அடைவர்.
- ஆன்மாக்களின் மலவிருளைப் போக்கிஞானத்தை நல்கி அருள்புரிதலே சூரசங்காரம் உணர்த்தும் தத்துவம் ஆகும்.
- இவ்விரதத்தை ஆறு ஆண்டுகள் அனுட்டித்தல் நன்று.

- **கந்தசஷ்டி விரதப் பயன்கள்**
  செல்வம், சகபோகங்கள், நற்புத்திரப் பேறு

**(ஏ) வைரவர் விரதம் (மேலதிகம்)**

- சித்திரை மாத பரணி நட்சத்திரத்தன்று வைரவருக்கு பூசை செய்து விரதம் இருக்கலாம்.
- தயிர்சாதம், வடைமாலை, சிவப்புப்பட்டு, சிவப்பு மாலையால் வழிபட்டு வைரவரின் அருளைப் பெற முடியும்.
- இதனைச் சித்திரைப் பரணி விரதம் என்பர்.

- **பலன்கள்**
  - எதிரிகள் தொல்லை நீங்கும்.
  - வாழ்வில் வளம் பெருகும்.
  - என்றும் எமைக் காப்பார்.
- **தேய்பிறை அஷ்டமி விரத வழிபாடு**
  - கார்த்திகை மாத தேய்பிறை அஸ்டமி திதியன்று பைரவ ஜெயந்தி ஆகும்.
  - காலபைரவரை வழிபட ஒவ்வொரு மாதமும் வரும் தேய்ப்பிறை அஸ்டமி திதி உகந்த நாளாகப் பார்க்கப்படுகிறது.

- **விரதமுறை**
  - அதிகாலை குளித்து வீட்டில் விளக்கேற்றி பைரவரை நினைத்து வழிபட வேண்டும்.
  - பகலில் ஒருமுறை மட்டும் சாப்பிடுதல்.
  - சிவன் கோயிலுக்குச் சென்று பஞ்சதீபம் ஏற்றி வழிபடுதல். (இலுப்பை எண்ணெய், விளக்கு எண்ணெய், தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய், பசு நெய் ஆகியவற்றைத் தனித்தனியாக ஏற்ற வேண்டும்.)
  - மாலையில் பைரவருக்கு வடை மாலை சாத்தி, தயிர்சாதம், சர்க்கரைப் பொங்கல் படைத்து குழந்தைகளுக்கும் பக்கதர்களுக்கும் வழங்கினால் நல்லது.
  - சிகப்பு நிற ஆடை அணிந்து சிகப்பு நிற மலர்களால் அர்ச்சித்து, வெள்ளைப் பூசணியில் நெய்தீபம் ஏற்றிவர நல்ல பலன்களைப் பெற முடியும்.
  - ஸ்ரீ காலபைரவர் காயத்ரி மந்திரம் சொல்லி வழிபடுதல் நன்று.

- **பயன்கள்**
  - வறுமை, பகைவர் தொல்லை நீங்குதல், வியாபார முன்னேற்றம், தனலாபம் பயம் நீங்குதல், அட்ட ஐஸ்வர்யங்கள் கிடைத்தல்.

**(ஐ) ஏகாதசி விரதம் (மேலதிகம்)**

- மகா விஸ்ணுவை நோக்கி அனுட்டிக்கப்படும் விரதங்களில் ஒன்று.
- மாதந்தோறும் வரும் வளர்பிறை தேய்பிறை ஏகாதசித் திதியன்று (பதினோராம் நாள்) அனுட்டிக்கப்படுகிறது.
- இவ்விரதம் ஒரு வருடத்தில் 24 நாட்கள் வரும்.
- அவற்றுள் மார்கழி மாத வளர்பிறையில் வரும் ஏகாதசி மிகச் சிறப்பு வாய்ந்தது அதனை வைகுண்ட ஏகாதசி என்று அழைப்பர்.

- **வைகுண்ட ஏகாதசி விரதம்**

  மார்கழி மாத வளர்பிறை ஏகாதசியன்று அனுட்டிக்கப்படும் / சுவர்க்கவாயில் ஏகாதசி என்றும் அழைப்பர்.

- **விரத நியதிகள்**
  - முதல் நாள் தசமி தினத்தில் ஒரு பொழுது உணவு உண்ணுதல்.
  - ஏகாதசியன்று காலை நீராடி தூய உடை அணிந்து உபவாசமிருத்தல்.
  - ஆலயத்துக்குச் சென்று அல்லது வீட்டில் இருந்தோ மகா விஸ்ணுவை நினைந்து நூல்களைப் பாராயணம் செய்தல், துளசியால் அர்ச்சித்தல் (நாலாயிர திவ்விய பிரபந்தம் போன்றன)
  - இத்தினத்தில் துளசித் தீர்த்தம் மட்டும் அருந்துதல்.
  - இரவு முழுவதும் நித்திரை விழித்து வழிபடுதல்.
  - ஏகாதசிக்கு அடுத்த நாள் காலையில் தீர்த்தமாடி மகாவிஸ்ணுவை வழிபட்டு பின் பாரணை செய்தல்.
- **விரதப் பயன்கள்**
  - வறுமை நீங்கிச் செல்வம் பெருகும்.
  - இலட்சுமி கடாட்சம் கிடைக்கும்.
  - பாவங்கள் நீங்கும்.
  - பக்தி பெருகும்.
  - வைகுண்டப்பேறு கிடைக்கும்.
  - முற்பிறவித் தோசங்கள் நீங்கும்.
  - சுவாச, குருதியோட்ட உறுப்புக்கள், கழிவகற்றும் உறுப்புக்கள் வலுப்பெறுகின்றன.
  - குருதியில் உள்ள நச்சுத் தன்மைகள் அழிக்கப்படுகின்றன.

- **விரதச் சிறப்புக் கூறும் நூல்**
  - விஷ்ணு புராணம்
  - நாரத புராணம்
  - அக்கினி புராணம்
  - வரத பண்டிதரின் ஏகாதசி புராணம்
  - அருட்கவி சீ.விநாசித்தம்பி எழுதிய ஏகாதசி புராணம்

## 27
## இந்து அறவியல்

- இந்து சமயம் சார்ந்த ஒழுக்கவியல் சிந்தனைகளையும் அறச் சிந்தனைகளையும் உள்ளடக்கி நிற்பதே இந்து அறவியல் ஆகும்.
- தர்மம் --- த்ரு என்னும் அடிச்சொல்லிருந்து பிறந்தது – தாங்குவது
  அறம் --- தகுந்த வழியில் நடத்தல்
- இன்ப துன்பங்களுக்கு அடிப்படையாக அமைவது அறம்.
- வேத உபநிடதங்களில் கூறப்பட்ட தர்மசிந்தனைகள் சனாதன தர்மம் என்றும் வைதிக தர்மம் என்றும் கூறப்படுகிறது.

**(அ) வேத இலக்கியங்களில் அறம்**

- ரிதம் என்பது ஒழுங்கு பற்றியதாகும்.
  (உலகினைத் தாங்குவதும் நிலை நிறுத்தவதும் ரிதமாகிய அறமே)
- அறக் கடவுளாக வருணன் போற்றப்படுகிறான்.
- வர்ண சூக்தம் - நல்ல சிந்தனைகள் தோன்றவும் தீய சிந்தனைகளிலிருந்து விடுபடவும் இறைவழிபாடு செய்யும் நிலை கூறப்பட்டுள்ளது.
- இயற்கை அற ஒழுங்கோடு தொடர்புபட்டுள்ளது.
- தர்மம் தன்னை மீறியவனைக் கொல்லும் தர்மம் தன்னைப் பாதுகாத்தவனைக் காப்பாற்றும்.

**(ஆ) உபநிடதங்களில் அறம்**

- அனைவரையும் சம நோக்குடன் நோக்கும் உயர்நிலை அறம் எனப்படுகிறது.
  - அகம்பிரம்மாஸ்மி - நான் பிரம்மமாக இருக்கிறேன்.
  - அயமாத்மா பிரமம் - இந்த ஆத்மாவே பிரம்மம்
  - தத்துவமசி - அது நீயாக இருக்கிறாய்
  - “ஸோ அகம் அஸ்மி - அது நானாக இருக்கிறேன்.
  - பிரக் ஞானம் பிரம்மம் - ஞானமே பிரம்மம
- அனைவரினும் தெய்வீகம் உண்டு, அனைவரையும் நேசி, அனைவரிடமும் அன்பாயிரு – மனிதநேயப் போதனைகள்
- மிக உயர்ந்த ஒழுக்க விழுமியப் பண்புகளை அறப் பண்புகளாகக் கூறியுள்ளன.
  ஸத்யம் வத - உண்மை பேசு
  தர்மம் ஸர் - தர்ம வழியில் நட
  சத்யாத்தப் பிரபதிதவ்யம் - சத்தியத்திலிருந்து நழுவுதல் கூடாது
  தர்மாத் நப்பிரமதிதிவ்யம் - தர்மத்திலிருந்தும் நழுவுதல் கூடாது
- பூத்யை நப்பிரமதிதய்வம் - பெருமையுள்ளவற்றைப் போற்ற தவறக்கூடாது
- மாத்ரு தேவோ பவ - தாயைத் தெய்வமாகப் போற்றுக
- பித்ரு தேவோ பவ - பிதாவைத் தெய்வமாகப் போற்றுக
- ஆசார்ய தேவோ பவ - ஆசானைத் தெய்வமாகப் போற்றுக
- அதிதி தேவோ பவ - விருந்தினரைத் தெய்வமாகப் போற்றுக
- விதிக்கப்பட்ட தருமங்களைச் செய்தல் அறம்

**(இ) தர்மசாத்திரங்களில் அறம்**

- யுகதர்மம் பற்றிக் கூறப்பட்டுள்ளது.
- சமயச் சடங்குகள் தர்மத்தை (அறம்) அடிப்படையாகக் கொண்டது.
- தர்மசாத்திரங்களில் வர்ண தர்மம், ஆச்சிரதர்மம், புருடார்த்தம் என்பன அறம் பற்றிக் கூறுவன

**(ஈ) புராண, இதிகாசங்களில் அறம்**

- மகாபாரதம், இராமாயணம், புராணங்கள் அறத்தைக் கூறுகின்றன.
- மகாபாராதம்

அறம் வெல்லும் அதர்மம் தோற்கும்
நன்றி மறவாமை போன்ற அறப்பண்புகள் கூறப்பட்டுள்ளன

- இராமாயணம்
  அறம், ஒழுக்கம் என்பவற்றின் மூலம் பாவங்களிலிருந்து விடுபட்டு ஆன்ம ஈடேற்றம் பெற முடியும்.
- அன்பு, சத்தியம், பொறுமை, பொது நலம் என்பன புராண இதிகாசங்களில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

**(உ) பகவத்கீதை**

- எங்கே தர்மம் உள்ளதோ அங்கே வெற்றி உள்ளது என்பது வலியுறுத்தப்படுகிறது.
- மனித அறம் பற்றிய நூல்.

**(ஊ) திருக்குறள்**

- அறத்துப்பால் அறக்கருத்துக்களை வலியுறுத்துகிறது.
- அறத்தைக் கடைப்பிடிப்பவன் தவிர்க்க வேண்டிய செயல்கள் பற்றிக் குறிப்பிடுகின்றது.
- அறங்களைக் கடைப்பிடிப்பவர்களுக்கு உயர் பேறாகிய பேரின்பம் கிடைக்கும் எனக் கூறப்பட்டுள்ளது.

**(எ) திருமந்திரம்**

- யாவரும் செய்யக்கூடிய அறங்கள் பற்றிக் கூறுகின்றது.
  (யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை)
- அறவழியில் அன்றாட வாழ்வினை அமைத்துக் கொள்ளல் வேண்டும்.

**(ஏ) சைவ சித்தாந்தம்**

- அறம் மேலானதாகக் குறிப்பிடுகின்றது.
- சைவ சாதனையுடன் நெருங்கிய தொடர்புடையது.
- சிவஞான சித்தியார் அறம் பற்றிக் கூறுவன.

"ஒழுக்கம், அன்பு, அருள், ஆசாரம், உபசாரம், உறவு, சீலம்
வழுக்கிலா தவம் தானம் வந்தித்தல், வணங்கல், வாய்மை
அழுக்கில்லா துறவு அறிவு, அர்ச்சித்தல் ஆதி
இருக்கில்லாத அறங்கள்

## 28
## புருடார்த்தங்கள்

- மனித வாழ்வை மேம்படுத்தவதற்காக இந்து சமயம் வகுத்த அறநெறி முறைகளில் ஒவ்வொரு மனிதனும் ஆன்மீக இலட்சியத்தை அடைய வாழ்க்கையின் நான்கு நிலையிலும் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கங்கள் இப்புருடார்த்தங்களை அடிப்படையாகக் கொண்டதாகும்.
- புருடார்த்தங்கள் என்பவை மனிதனால் அடையப்பட வேண்டிய செல்வங்கள் ஆகும்.
- இவை தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் எனப்படும் இவற்றை அறம், பொருள், இன்பம், வீடு என்பர்.
- வாழ்வின் இலட்சியத்தை அடைய அறத்தின் வழி பொருளீட்டி வாழ்க்கையில் இன்பத்தை அனுபவிக்க வேண்டும். இதன்வழி வீடுபேறு சித்திக்கும் என்பது ஆன்றோர் வாக்காகும்.
- உலகியல் வாழ்க்கையைச் சிறப்பிக்கும் கோட்பாடு

- இம்மை வாழ்க்கைக்கு மதிப்பளித்து அதனூடாக மறுமை வாழ்க்கையையும் சிறப்பிக்கும் கோட்பாடு
- **அறம்.**
  - புருடார்த்தங்களில் அறமே பிரதானமானதாகும்.
  - அறம் - தர்மம் எனவும் பொருள்படுகிறது.
  - தர்மம் - "த்ரு" என்ற வினையடியிலிருந்து தோன்றிய சொல் வைத்திருத்தல், போஷித்தல், காப்பாற்றுதல், தாங்கிக் கொண்டிருத்தல். எனும் பொருளை உடையது.
  - தர்மம் - கட்டளை, வாழ்க்கை நெறி, விதி, கடமை, ஆணை, கோட்பாடு, சட்டம், ஒழுக்கம், நீதி, நேர்மை
  - அறம் - ஒழுக்கம், புண்ணியம், ஞானம்
  - இருக்குவேதம் - ப்ரதமா தர்மம (முதல் ஆணை) சனாததர்மானி (பழைய ஆணை)
  - அதர்வவேதம் - சமயக்கடமைகளையும், கிரியைகளையும் பெரியோர் விதித்தவாறு செய்யும் ஒருவனுக்குக் கிடைக்கக் கூடிய புண்ணியங்களைத் தர்மம் குறிக்கின்றது.
  - மிருகதாரண்ய உபநிடதம் - தர்மம் சத்தியம் என்ற பொருளில் கூறுகிறது.
  - தைத்ரிய உபநிடதம் - குருகுலவாசம் முடிந்து வீடு திரும்பும் மாணவனுக்கு குரு கூறும் உபதேசம் கூறப்பட்டுள்ளது. சத்யம் வத, தர்மம் சர எனும் கூற்றுக்கள் கூறப்பட்டுள்ளன.
  - முண்டக உபநிடதம் - சத்யம் ஏவ ஜபதே (சத்தியமே வெற்றி தரும்)
  - சாந்தோக்கிய உபநிடதம் - பிரம்மச்சாரி, இல்வாழ்வான், வானப்ரஸ்தன் ஆகியோருக்கான கடமைகள் தர்மத்தின் மூன்று பிரிவுகள் எனக் கூறுகிறது.
  - பகவத்கீதை - தனக்கு விதிக்கப்பட்ட கடமையை (தர்மத்தை) செய்யும் போது இறத்தலே நன்று.
  - மனுஸ்மிருதி - ஆசாரமே மேலான தர்மம்

  - **மகாபாரதம்**
    - அகிம்சையே மேலான தர்மம்
    - பிரபஞ்சத்தினைத் தாங்குதல்
    - நல்லொழுக்கமுள்ளவர்கட்கு நன்மை யெய்தல்.
    - வாழ்க்கையை நெறிப்படுத்துவது, நல்லவர்களைத் தாங்கி நிற்பதும்.
    - பரம்பொருள் உறைந்திருக்கும் மனிதனின் மானிடப்பண்பை உணர்த்துவதும் ஒவ்வோர் உயிரிலும் இறைவன் உள்ளான் என்பதும் தர்மம் ஆகும்.
    - மகா பாரதத்தில் தர்மன் தருமத்தின் அடையாளம்.
  - தர்மம் தலைகாக்கும், அரசன் அன்று கொல்லும் தெய்வம் நின்று கொல்லும்.
  - புராணங்கள் - சாதாரண தர்மம்
    யாவர்க்கும், எக்காலத்தும் பொருத்தமானதாகவும், நிரந்தரமானதாகவுள்ள ஒழுக்க விதிகள்
  - விசேட தர்மம் (ஸ்வதர்மம்) – அவரவர்க்குரிய தர்மம்
  - அரிச்சந்திரன் தர்மத்தை இலட்சியமாகக் கொண்டான்.
  - மனிதகுலம் ஆன்மீக ரீதியாக முழுமையடைய உலகில் வாழ்வுக்கு வழிகாட்டுவது தர்மத்தின் தலையாய நோக்கம்.

  - **தர்மசாத்திரங்கள்**
    - கடமை, ஒழுக்கம் தர்மம் சட்டங்கள் மனச்சாட்சி என்பன அறமாகக் கூறப்பட்டுள்ளன.
    - தர்மசாத்திரங்கள் சுவதர்மம், ஆச்சிரம தர்மம், இராஜதர்மம் என்பன பற்றிக் கூறுகின்றன.

- சுவதர்மம் (குலதர்மம)
  ஒவ்வொருவரும் தத்தமது கடமைகளை செய்தல்.
- ஆச்சிரம தர்மம்
  பிரமசர்யம், கிஹஸ்தம், வானப்ரஸ்தம், சந்நியாசம் பற்றிய கடமைகள் விளக்கப்பட்டுள்ளன.
- இராஜ தர்மம்
  நீதிபரிபாலனம், சமுதாய ஒற்றுமை, முடிசூட்டுதல் பற்றிய தகவல்கள் தர்மம் தவறினால் நாட்டில் ஏற்படும் தீமைகள்

➢ **தர்மசாத்திரங்கள்** - அகிம்சை பற்றிக் கூறுகின்றன.

➢ **புராணங்கள்**
- அகிம்சை, சஷமா (பொறுமை
- இந்திரிய நிக்கிரவர (புலனடக்கம்)
- தயை (இரக்கம்)
- தானம் (கொடை)
- சௌச (தூய்மை)
- சத்யம் (உண்மை)
- தபஸ் (தவம்)
- ஞானம் (அறிவு)

பற்றி பத்ம புராணம் கருட புராணம், சஹ்ம புராணம், அரிச்சிந்திர புராணம் ஆகியன விளக்குகின்றன.

➢ **தருமம்**
மனித செயற்பாடுகளுக்கு அப்பாலும் பிரபஞ்சமனைத்தையும் தாங்குவது.

➢ **ஜைமினியின் பூர்வமீமாம்சை**
வேதங்களில் கூறப்பட்டுள்ள சமய ஒழுக்கக் கடமைகளைச் செய்தலே தர்மம் - இறுதியில் சாந்தி, சமாதானம் உண்டாகும்.

➢ **சங்க இலக்கியங்களில் அரசியல் தர்மம்**
"அறம் துஞ்சும் செங்கோல்" (புறம்-2) அரசியல் பிழைத்தார்க்கு அறம் கூற்றாகும் (சிலப்பதிகாரம்)

புறநானூறு – சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும் அறத்து வழிபாடும் தோற்றம் போல

➢ **திருக்குறள்.**
- இல்லறம், துறவறம் இரண்டுமே ஒருவனை இறை நிலை அடையச் செய்யும்.
- இல்லறத்தைச் சரியாகப் பின்பற்றுபவர்களுக்கு துறவறம் மூலம் பெறத்தக்க பயன்களையும் பெற முடியும்.
- அறத்தின் மூலம் நல்வாழ்வை வாழ முடியும்.

➢ **திருக்குறள்**
- அறம், பொருள், இன்பம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட நூல்.
- நாலாவது அதிகாரம் அறன் வலியுறுத்தல் ஆகும்.
- அறத்தால் வருவதே இன்பம்……
- அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை
- சிறப்பீனும் செல்வமுமீனும் அறத்தினூங்கும்
  ஆக்கம் எவனே உயிர்க்கு

- அறத்து ஆற்றின் இவ்வாழ்க்கை......
- இல்வாழ்வான் என்பான்......
- பழியஞ்சிப்பாத்தூண் உடைத்தாயின் இல்வாழ்க்கை......

போன்ற குறள்கள்

- **பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் பெரும்பாலானவை அறம் பற்றிக் கூறுகின்றன.**
- **ஔவையார் - அறம் செய விரும்பு.........**
- **பௌத்த மதத்திலும் தர்மம் நன்று வலியுறுத்தப்பட்டுள்ளது**.

- **பொருள்**
  - அர்த்தம் - பொருள், ஆக்கம், செல்வம்
  - பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை உலக வாழ்க்கைக்குப் பொருள் அவசியம்.
  - தனி மனித, சமுதாய சிறப்பு வாழ்க்கைக்குப் பொருள் அவசியம். (வீடு, காணி, பணம், உணவு, தானம் என்பவற்றுக்கு)
  - அறமும் இன்பமும் தழைப்பதற்குப் பொருள் அவசியம்.
  - அறத்தின் மூலம் பொருளை ஈட்டுதல் அவசியம்.
  - அர்த்தசாஸ்திரம், திருக்குறள் என்பவற்றில் பொருளை ஈட்டுவதற்கான வழிவகைகள் கூறப்பட்டுள்ளன.
  - திருக்குறள்
    - பொருட்பாலில் அரசியல் பற்றி விளக்கப்பட்டுள்ளது.
    - பொருளை ஈட்டுவதற்குத் துணை புரிவது அரசு அடிப்படையில் கூறப்பட்டுள்ளது.
  - தர்மசாத்திரங்கள் அர்த்தசாஸ்திரம்
    இராஜசேவை, வாணிபம், விவசாயம் முதலிய தொழில்களால் பொருளீட்டல் வேண்டும் என்கிறது.
  - நேர் வழியில் பொருள் தேடாவிடின் அப்பொருள் தேடியவனுக்கு இம்மையிலும் மறுமையிலும் பகையாக முடியும்.
  - துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் ''பிறர்க்குதவி செய்யார் பெருஞ்செல்வம் பேறு உலோபிகளின் பொருளை பிறர்குதவியாக்குபவர் பேராம்'' எனக் கூறுகிறார். எடுத்து ஈடுவோரின் பொருளாகவே கொள்ள வேண்டும்.
  - பரிதானம், சுங்கம் கொடாமை, வட்டிகட்டி முதலிய தீய வழிகளில் ஈட்டும் பொருள் அதர்மத்துக்கே வழிகோலும். அதனாலேயே ஔவையார் தீவினை விட்டீட்டல் பொருள் எனக் கூறியுள்ளார்.
  - பிரம்மசரிய நிலையிலிருப்பவர்க்கு குரு பொருள் வளத்தினைக் கவனிப்பாயாக என கூறுகின்றார்.
  - இல்லறம் நல்லறமாக அமைய அறவழியில் பொருள் ஈட்டப்படுதல் வேண்டும்.
  - பஞ்சயக்ஜம் செய்வதற்கு பொருள் அவசியம்.
  - ஈட்டிய பொருளை அறப்பணிகளில் ஈடுபடுத்துதல் வேண்டும்.
  - பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புவதற்குப் பொருள் அவசியம்.
  - ஐவகைப் பெருவேள்விகளுக்குப் பொருள் அவசியம்

- **இன்பம்**
  - காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்டதே இன்பம் ஆகும்.
  - இன்பம், சிற்றின்பம், பேரின்பம் என இருவகைப்படும்.
  - சிற்றின்பம்
    - உலகியல் வாழ்க்கையால் பெறப்பட்ட பதவி, குடும்பம், உறவுகள் என்பன மூலம் கிடைக்கும் இன்பங்கள் அதாவது அழியும் பொருள்களால் கிடைக்கும் இன்பம்.
    - உலகில் வாழும் காலம் வரை கிடைப்பது.

➢ பேரின்பம்

இறைவனைச் சார்ந்து அனுபவிப்பது, முடிவற்ற, எல்லையற்ற, நிலையான இன்பம்.

➢ சங்க இலக்கியங்களில் அகத்திணை மரபுகள் இன்பம் பற்றிய கருத்துக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- **வீடு**

➢ ஆன்ம இலட்சியத்தின் இறுதிப்பேறு – மோட்சம்

➢ அறவழியில் நின்று பொருளீட்டி நேர்வழியில் நின்று இன்பத்தை அனுபவித்து அவ்வாழ்க்கையின் சிறப்பினால் இறைநிலையை அடைதல்.

➢ இந்து சமயம் எல்லாத் தளைகளிலிருந்தும் துன்பங்களிலிருந்தும் ஆன்மாக்கள் விடுதலை பெற இயலும் என்று உறுதி அளிக்கின்றன.

➢ துன்பங்களிலிருந்து முழுமையான விடுதலை பெறுதலே உண்மையான இன்பம்.

➢ ஈடிணையற்ற ஆனந்தத்தை உணர்ந்து அனுபவிப்பதே வீடுபேறு ஆகும்.

➢ ஒருவன் இறப்பு, பிறப்பு என்கின்ற பிறவிப்பிணியில் இருந்து ஈற்றில் நற்கதி பெறுகின்ற நிலை மோட்சம் ஆகும்.

➢ மாசிலா அறம் பயின்றதாய்ப் பிறருக்கு உதவுவதை நோக்காகக் கொண்டு நடைபெறுமாயின் அதுவே சிவபோகம் ஆகிய இலட்சியத்துக்கு நன்னெறியாகும்.

➢ அறம், பொருள், இன்பம் மூன்றையும் முறையாக அனுசரிப்போருக்கு இயல்பாகவே வீடு கிடைக்கும்.

➢ வீடு என்கின்ற இன்பத்தை அடைந்த ஆன்மாவிற்கு மறுபிறப்பு இல்லை

- **ஈதல் அறம் தீவினை விட்டீட்டல் பொருள்**

எந்நாளும்
காதலர் இருவர் கருத்தொருமித்து
ஆதரவு பட்டதே இன்பம் பரனை நினைந்திரம்
மூன்றும் விட்டதே பேரின்பவீடு (ஔவயார்)

- நான்கு உறுதிப்பொருள்களிலும்

அறம் - புத்தியைச் சார்ந்தது
பொருள் - உடலைச்சார்ந்தது
இன்பம் - மனத்தைச் சார்ந்தது
வீடு – ஆன்மாவைச் சார்ந்தது

## 29
## ஆச்சிரம தர்மங்கள்

- வையத்துள் வாழ்வாங்கு வாழவும் அதன் பயனாக ஆன்மீக விடுதலை பெறவும் எம் முன்னோர்களால் வகுக்கப்பட்ட படிநிலைகளே ஆச்சிரம தர்மங்கள் ஆகும்.
- இயற்கை விதிமுறையின் நடைமுறைக்கிணங்க பிரம்மச்சர்யம், கிருஹஸ்தம், வானப்ரஸ்தம், சந்நியாசம் என்னும் நான்கு வாழ்க்கைப் படிநிலைகளாகக் இந்து அறிஞர்கள் வகுத்துள்ளனர்.
- ஓவ்வொரு படிநிலைகளிலம் ஆற்ற வேண்டிய கடமைகள் வாழ்க்கை முறைகள் பற்றி தரும சாத்திரங்கள் விளக்குகின்றன.

1. **பிரம்மச்சரிய நிலை – மாணவ நிலை**

- வாழ்க்கையின் ஆரம்பக் கட்டநிலை - மாணவப்பருவம்
- இம்மாணவ நிலை குருகுல அடிப்படையில் இடம்பெறுகிறது.
- ஏனைய மூன்று படிநிலைகளையும் கடப்பதற்கான பயிற்சிக் காலம் மாணவப்பருவம் ஆகும்.
- பிரமம் என்னும் மெய்பொருளை நோக்கிய மாணவனை அழைத்துச் செல்லும் படிநிலை
- அறிவையும் அனுபவத்தையும் மூலதனமாகக் கொண்டு ஆற்றலை வளர்த்துக் கொள்ளும் படிநிலை.
- குருவின் இல்லம் நாடிச்சென்று குருவைத்தெய்வமாக மதித்துப் பணிவிடை செய்து குருவின் கட்டளைகளுக்குக் கீழ்ப்பணிந்து வாழ்க்கைக்குத் தேவையானவற்றைக் கற்றுக் கொள்ளுதல்.
- வேதக்கல்வி, அரசியல், பொருளியல், அனுபவக்கல்வி வழங்கப்படும்.
- குருவிடமிருந்து பயிற்சி பெற்ற மாணவனுக்கு அறிவுரை கூறும் விடயங்கள் தைதரிய உபநிடதத்தில் கூறப்படுகிறது.
  - சத்தியத்தைப் பேசுங்கள், தர்மம் செய்யுங்கள்
  - கற்றதை ஒதுக்கித் தள்ளி விடாதீர்கள்
  - பிறருக்குக் கேடு விளைவிப்பதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்
  - பெற்றோரை மறந்து விடாதே.
  - இறைத்துவ நிலையை அடையும் நோக்கோடு படிநிலைகளைக் கடப்பாயாக.
- வெளியுலக பந்தங்களை தவிர்த்துக் குருவிற்கும் தனக்கும் இடையில் மட்டும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு வாழ்க்கை நடத்துவதால் சிறப்பான ஒழுக்கமாகப் பிரமச்சர்ய நிலை விளங்குகிறது.
- புலனடக்கம், நல்லொழுக்கம், ஆசாரம் பேணுதல், பிரம்மசரிய விரதம் காத்தல், கல்வி கற்றல் பிரம்மச்சரிய நிலையின் சிறப்புக்களாகும்.
- குருவுக்கு இயன்ற தட்சணை வழங்கி பெற்றோரின் இல்லம் சென்று கிருஹஸ்த வாழ்வுக்குத் தயாராகும் நிலை.

**2. கிருஹஸ்த நிலை**

- வாழ்க்கையின் இரண்டாவது கட்ட நிலை - இல்லற நிலை
- வானப்ரஸ்த நிலை, சந்நியாசநிலை என்பவற்றைக் கடப்பதற்கான நிலை - இல்லற நிலை ஆகும்.
- கல்விப் பருவத்தை அடைந்த ஒருவன் அறத்தை அடிப்படையாகக் கொண்ட இல்லற நிலையைப் பேணுதல்.
- ஏனைய மூன்று நிலையாளர்களையும் தனது உடலாலும் உள்ளத்தாலும் பொருளாலும் பேணுதல் வேண்டும். இதனை வள்ளுவர் கூறியுள்ளார்.
- இல்லறத்தில் உள்ளவன் அறத்தின் வழி பொருளீட்டி அதனால் பகிர்ந்துண்டு இன்பங்களை அனுபவிக்க வேண்டும். இவற்றின் வழி வீடு பேறு அடைதல்.
- தர்மசாத்திரங்கள் போன்ற இந்து அற நூல்கள் கிருஹஸ்தன் ஆற்ற வேண்டிய கடமைகள் பற்றிக் கூறியுள்ளன. அவை பஞ்ச யக்ஞங்கள் ஆகும்.

  **(1) பிரமயக்ஞம்**

  மேலான பரம்பொருளை தேவார, திருவாசகங்கள், திருமுறைகள் என்பவற்றால் போற்றிப்பாடி வழிபடுதல்.

  **(2) தேவயக்ஞம்**

  உருவ வடிவமான கடவுளுக்கு ஆற்றும் வழிபாடு. நன்றியுணர்வில் செய்யப்படுவதாகும்.

  **(3) பிதிர்யக்ஞம்**

  இறந்து போன மூதாதையர்களின் ஆன்ம சாந்தியின் பொருட்டு சிரார்த்தச் சடங்கினை நடாத்துதல், பிதிர்லோகத் தெய்வங்களுக்குச் செய்யும் வழிபாடு

**(4) பூதயக்ஞம்**

உயிரினங்களுக்குச் செய்யும் வழிபாடு (பட்டிப்பொங்கல்)

**(5) மானிடயக்ஞம்**

மானிடர் பொருட்டுச் செய்யும் வழிபாடு
(பிறப்பு, திருமணம், விருந்தினரை உபசரித்தல்)

- புதல்வரைப் பெறுதல். (தம் இல்லறக்கடமைகளை ஒப்படைத்தல்)
- சகல உயிரினங்களையும் மதிக்கும் பண்பு
(அன்பு, கருணை, இரக்கம், அஹிம்சை)

**3. வானப்ரஸ்த நிலை – துறவுக்கு ஆயத்தமாகும் நிலை**

- வாழ்க்கை நிலையின் மூன்றாவது படிநிலை – துறவுக்கு ஆயத்த நிலை
- சந்நியாச நிலையை அடைவதற்கான பயிற்சிகளைப் பெறும் நிலை
- மனைவியோடு இருந்தபோதும் இல்லறத்தைத் துறந்து துறவறத்துக்கு ஆயத்தமாகும் நிலை
- இல்லறத்தையும் துறவறத்தையும் இணைக்கும் பாலமாக காட்டில் வாழும் நிலை விளங்குகிறது.
- வானப்ரஸ்த நிலையை அடைவதற்கு ஏற்ற காலம் பற்றி மனுதர்ம சாஸ்திரம் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.
  - மகனுக்கு மகன் பிறந்த பின்னர்
  - நெற்றியில் கை, கால் சுருக்கங்கள் ஏற்பட்ட பின்னர்
  - தலையில் நரை விழுந்த பின்னர்
  - பொதுவாக முதுமைக் காலம்
- தனிமை, வறுமை, வெறுமை என்பவற்றோடு காலம் கழிப்பதால் உலகியல் வாழ்க்கை இன்பங்களை படிப்படியாக மறந்து உலகியல் பற்றை விடுவதற்கான முயற்சியில் இறங்குகின்றான். காட்டில் வாழுகின்ற நிலையே துறவுக்கு ஆயத்தமாகும் நிலை.
- தியானம், தவம், உலகப் பற்றுக்களிலிருந்து நீங்குதல் மூலம் துறவுக்கு ஆயத்தமாதல்.

**4. சந்நியாச நிலை**

- வாழ்க்கையின் இறுதிப்படிநிலை – முழுத்துறவுநிலை
- உலகப் பற்றுக்களைத் துறந்து யாசகம் பெற்று ஆன்மீக இலட்சியத்தை அடையும் வரை வாழ்தல்.
- சந்நியாசமே இந்து ஒருவனின் இறுதி இலக்கு, உன்னத இலட்சியத்தை நோக்கி வாழ்க்கையின் கடைசிப்பகுதிக்கு மனிதன் தனிமையாக நடந்து செல்லவேண்டும். என டாக்டர்.இராதாகிருஷ்ணன் கூறுகிறார்.
- சந்நியாச நிலையினர்
  - காலத்தை யோகத்திலும் தியானத்திலும் கழிப்பர்.
  - மனித இனத்தின் ஆன்மீகத்துக்கு காவலனாய் இருப்பர்.
  - வாழ்க்கையின் இரகசியங்களைச் சிந்திப்பர்.
  - விருப்பு வெறுப்பு அற்ற நிலை.
  - நாடு இனம் என்ற குறுகிய வட்டத்தைக் கடந்து விடுதலை பெற்ற மனிதனாகிறான்.
  - இறைவனுக்குத் தன்னை முழுமையாக அர்ப்பணிக்கும் நிலை.
  - இறை இன்பத்தில் திளைக்கும் நிலை.
  - நல்வினை, தீவினை இரண்டையும் சமமாக எண்ணும் நிலை.
- ஆச்சிரம தர்மங்கள் படிநிலை வளர்ச்சியில் பரம்பொருளை அடைவதைக் குறிக்கோளாகக் கொண்டவை.

- அவைதிக மதங்களின் துறவு ஒழுக்கங்களுக்கு உட்படாது இயல்பான வாழ்க்கையூடாக இறைவனை அடைவதற்கு நெறிப்படுத்துகின்றன.
- பிரம்மசர்ய நிலையிலிருந்து கொண்டே ஞானிகளாக வாழ்ந்தவர்களும் உள்ளனர். (சுவாமி விவேகானந்தர் சுவாமி, விபுலானந்தர்)
- இல்லறத்திலிருந்து கொண்டே ஞானிகளாக விளங்கியவர்களும் உள்ளனர். (ஸ்ரீ இராமகிருஷ்ணர், ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா, ஸ்ரீஇராமர்)
- உலக இன்பங்களை இறைவழி நின்று அனுபவித்துப் பிற்பகுதியில் பற்றினைத் துறந்து பரஞானம் பெற்று ஞானியாக வாழ வேண்டும் என்பதை ஆச்சிரம தர்மம் உணர்த்துகிறது.
- இயந்திரவியல் உலகில் இலத்தினவியல் பயன்பாடு விஞ்ஞானத்தின் விந்தை காரணமாக மனித வாழ்க்கை நடைமுறைகள் மாறுபட்ட வண்ணமுள்ளது.
- இன்றைய சமூகத்தில் பிரம்மசர்ய கிருஹஸ்த நடைமுறைகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.
- வானப்ரஸ்த நிலையும் சந்நியாச நிலையும் ஒரு சிலரால் பின்பற்றப்பட்டு வருகின்றன.

## 30
## தமிழ் நீதி நூல்கள்

- நூல்முறை தெரிந்து சீலத்து ஒழுகு – நீதி நூல்களில் கூறப்பட்டுள்ள நல்ல நீதி முறைகளை (கற்று) அறிந்து நல்ல ஒழுக்கத்துடன் நட.
- தமிழிலக்கியங்கள் அறத்தைப்பற்றியே அதிகமாகக் குறிப்பிடுகின்றன.

### 1. திருக்குறள்

- நீதிநூல்களில் முதன்மையானது.
- முதலடி நான்கு சீரும் இரண்டாம் அடி மூன்று சீரும் உடையதாய் வரும் இரண்டு அடி வெண்பா
- முப்பானூல், தமிழ்மறை, உலகப் பொதுமறை தெய்வ நூல் முப்பால், பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து எனப் பெயர் பெறும்.
- திருவள்ளுவரால் இயற்றப்பட்டது – பொய்யாமொழிப்புலவர் தெய்வப்புலவர், செந்நாப்போதர் முதலிய பெயர்களால் அழைக்கப்படுகிறார்.
- திருவள்ளுவர்.
    - நூல்களைக் கற்றவர்.
    - இல்வாழ்க்கையைச் செம்மையாக வாழ்ந்து காட்டியவர்.
    - பொதுமை நாட்டம் உடையவர்.
    - அறத்தில் அசையாத நாட்டம் உடையவர்.
    - மூட நம்பிக்கைகளைப் புறக்கணித்தவர்.
- இந்நூலில் காலம்பற்றிய கருத்து வேறுபாடுகளுக்கு அப்பால் சங்கமருவிய காலத்து நூல் எனக் கருதப்படுகிறது.
- திருக்குறள் -- தெய்வத்தன்மை பொருந்திய நூல் மேன்மைமிக்க குறட்பாக்களாலான நூல்.
- 133 அதிகாரங்களை உடையது. ஒவ்வொரு அதிகாரத்திலும் 10 பாடல்கள் உள்ளன. 1330 பாடல்கள் உள்ளன.
- அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்று பிரிவுகளை உடையது.
- அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கிலும் அறம் பொருள் இன்பம் பற்றி குறிப்பிடப்பட்டபோதும் வீடு பற்றிக் குறிப்பிடவில்லை.

சிந்தைக்கு எட்டாது. சொற்களால் விளக்குவது வீண் என்று வள்ளுவர் நினைத்திருக்கக் கூடும். ஆனால் மெய்யுணர்தல் என்னும் அதிகாரம் அதற்குரிய வழிகளைக் கூறுவதாகும்.

- நீதிநூல் என்ற வகையில் திருக்குறள் மனுதர்ம சாத்திரத்துடன் ஒப்பிடக்கூடியது.
- தருமர், மணக்குடவர், தாமத்தர், பரிமேலழகர், பரிதி, பரிப்பொருள் ஆகியோர் உரை எழுதியுள்ளனர்.
- நூலமைப்பும் பொருள் மரபும்
  - அறத்துப்பால் - 38 அதிகாரங்கள் 380 பாடல்கள்
  - பொருட்பால் - 70 அதிகாரங்கள் 700 பாடல்கள்
  - காமத்துப்பால் - 25 அதிகாரங்கள் 250 பாடல்கள்
- திருக்குறள் முதல் நான்கு அதிகாரவியலும் பாயிரவியல் எனப்படுகிறது.
- முதலாம் அதிகாரம் - கடவுள் வாழ்த்து.

- நான்காம் அதிகாரம் அறன் வலியுறுத்தல்.
  அறமானது இம்மை, மறுமை, வீடு பயத்தலால் ஏனைய பொருள் இன்பத்தை விட வலிமையானது என்று குறிப்பிடப்படுகிறது.
- அறத்துப்பால் இல்லறம், துறவறம் என பிரிக்கப்பட்டுள்ளது. துறவறம் இல்லறத்தைச் சார்ந்தே உள்ளது என்பதால் இல்லறமே ஏற்புடையது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.
- இல்லறவியலில் ஆணின் துணையாகப் பெண் பேசப்படுகிறார்கள், நன்மனையாளின் இயல்பு, பிள்ளைப்பேறு அன்பு, விருந்தோம்பல் முதலிய இல்லறத்தானுக்குரிய பண்புகள் தனிமனிதன் கடைப்பிடிக்க வேண்டிய இன்சொல் நன்றியறிதல், நடுவு நிலைமை, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை ஆகிய பண்புகள் கூறப்பட்டுள்ளன.
- துறவறவியலில் அருள் உடைமை, புலான் மறுத்தல், தவம் வாய்மை, வெகுளாமை முதலிய விடயங்கள் துறவின் பயனாகிய ஞானம் அதாவது வீடுபெறு பற்றியும் குறிப்பிடுகிறார்.
- இல்லறம், துறவறம் ஆகிய இருநெறியில் நின்றாலும் பயனை அனுபவிக்க வேண்டும் என்பதற்கிணங்க ‘‘ஊழி’’ என்னும் அதிகாரம் வைக்கப்பட்டுள்ளது.
- பொருட்பாலில் --- அரசியல், அங்கவியல், ஒழிபியல் என மூன்று பகுதிகளை உடையது.
  - பொருளின் அவசியம் குறிப்பிடப்பட்டுள்ளது.
  - பொருட்பாலில் பொருளை ஈட்டுவதற்கும் அனுபவிப்பதற்கும் துணைக்காரணமான அரச நீதிபற்றி விளக்கப்பட்டுள்ளது.
  - பொருட்பாலில் இறைமாட்சி என்னும் அதிகாரத்தில் உள்ள ‘‘இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
    வகுத்தலும் வல்லது அரசு’’ எனும்
    குறட்பாவினூடாக பொருள் ஈட்டுதலும், ஈட்டிய பொருளைப் பேணிப்பாதுகாத்தலும் காத்த பொருளை அறம், பொருள், இன்பங்களின் பொருட்டு செலவிடுதலும் உடையவனே அரசன். எனக்குறிப்பிடப்பட்டுள்ளது.
  - அரசனுக்கும் மக்களுக்கும் பொருளின் இன்றியாமை பற்றி விளக்கப்பட்டுள்ளது.
- பொருட்பாலில் உள்ள அரசியல், அங்கவியல் ஆகியவற்றில் பல முகாமைத்துவ நுட்பங்கள் விளக்கப்பட்டுள்ளன.
  - வளங்களைக் கொண்டு பணியொன்றை நிறைவேற்றுகையில் ஏற்படும் சிரமங்கள், நன்மைகள் போன்ற விடயங்கள்.
  - தொழிற்பிரிப்பு, சிறப்புத் தேர்ச்சி போன்ற அம்சங்கள்.
    (குறள் - 461, 462, 468, 472, 478, 489 போன்றன)
- காமத்துப்பாலில் உலகியல் இன்பத்தை அறத்தின் வழி அனுபவித்தல் பற்றிக் கூறப்படுகிறது.
- **காமம் என்பது**

- ➢ "காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்டதே இன்பம்" என்னும் ஔவை வாக்கினை வெளிப்படுத்துகிறது.
- ➢ அறத்தின் வழி நின்று பொருளைத்தேடி அதன் காரணமாக இம்மை பயப்பதாகிய உலகியல் இன்பம் விபரிக்கப்படுகிறது.
- ➢ சமூக மாற்றம் ஏற்படும், காலக்கட்டத்தில் மாறுகின்ற சமுதாயத்திற்கு வேண்டிய சமூக, அரசியல், பொருளாதார, பண்பாட்டு மாற்றங்களுக்கான மெய்யியற் கோட்பாட்டை விளக்குகிறது.

- தமிழர் வாழ்வில் சமூகச் சவால்களை ஏற்கும் கருவிநூல், திருமணச் சடங்கில் ஓதுவதும் இல்லற மாண்புகளைப் பின்பற்றுவதும் இன்று இடம்பெறுகிறது.

## 2. ஆத்திசூடி

- தமிழில் தோன்றிய நீதி நூல்களில் பாலர், பாமரர், பண்டிதர் என உள்ள யாவரும் படிப்பதற்கேற்ற நூல்களாக விளங்குபவை ஔவையார் இயற்றிய ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வாக்குண்டாம், மூதுரை, நல்வழி
- ஆத்திசூடி நூலாசிரியர் - ஔவையார்
- ஔவையார் பெண்பாற் புலவர்
- தமிழறிஞர் மு.அருணாசலர் அவர்கள் கருத்து
  - ➢ சங்ககால ஔவையார், இடைக்கால ஔவையார் சோழர் கால ஔவை, சமயப்புலவர் ஔவை பிற்கால ஔவை I, பிற்கால ஔவை II எனப்பல ஔவையார்கள் இருந்தனர்.
  - ➢ இலக்கிய வரலாற்று ஆசிரியர்கள் சங்ககால ஔவையார், சோழர் கால ஔவையார் ஆகிய இருவருமே ஏற்றுக் கொள்ளப்பட்ட ஔவையார் எனக் கூறுகின்றனர்.
- சோழர் கால ஔவையார் பாடிய நூல்கள் என அறியப்படுபவை.
  - ➢ அதிசயக்கோவை, பத்தனந்தாதிப் பெட்டகம், ஆத்திசூடி கொன்றை வேந்தன் வாக்குண்டாம், நல்வழி, கல்வியொழுக்கம், ஞானக்குறள், விநாயகர் அகவல், கணபதி ஆசிரிய விருத்தம், உயர் ஞானசார நூல் சாத்திரம், நவமணிமாலை, தரிசனப்பத்து, அருந்தமிழ்மாலை, நன்னூற் கோவை, நான்மணிக்கோவை
- ஔவையார் வரலாற்றை அறியக்கூடிய சில நூல்கள்
  - ➢ திருவள்ளுவர் கதை, கபிலரகவல், ஞானாமிர்தம், புலவர் புராணம், விநோதரச மஞ்சரி, பன்னிருபுலவர் சரித்திரம், தமிழ்நாவலர் சரிதை, பாவலர் சரித்திர தீபகம், தனிச் செய்யுட் சிந்தாமணி, தனிப்பாடல் திரட்டு
  - ➢ மு.அருணாசலம், ஔவை சு.துரைசாமிப்பிள்ளை, ந.சுப்ரமணியம், தமிழண்ணல் முதலானோர் ஔவையாரின் வரலாற்றை இலக்கிய ஆராய்வோடு எழுதியுள்ளனர்.
- கடவுள் வாழ்த்துப்பா "ஆத்திசூடி" என்று தொடங்குவதால் ஆத்திசூடி என்ற பெயர் நூலுக்கும் வந்ததது.
- நூல் அமைப்பு
  - ➢ மிகச்சிறிய நூல்
  - ➢ காப்புச் செய்யுளோடு 108 கூற்றுக்களைக் கொண்டது.
  - ➢ 108 அறங்களைக் கொண்டுள்ளது.
  - ➢ காப்புச் செய்யுள் சிவபெருமானைப் போற்றுகிறது.
  - ➢ தமிழ் நெடுங்கணக்கு முறையிலமைந்த நூலாகும்.
  - ➢ உயிரெழுத்து, மெய்யெழுத்து, உயிர்மெய்யெழுத்து மொழிக்கு முதலில் வரும் எழுத்து என்பன முதலாகவும் அவ்வாறு வராத எழுத்துக்களை இரண்டாம் எழுத்தாகவும் கொண்டு பாடப்பட்டுள்ளது.

  - அ – ஔ வரையும் / க – ன வரையும் / க, ச, த, ந, ப, ம, வ பதினொரு உயிர் மெய் எழுத்துக்கள் வழி வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

- 1848 இல் ஜே.சுதன் பாதிரியார் முதன் முதலில் பதிப்பித்து வெளியிட்டார்.
- 1851 இல் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஆத்திசூடியையும் கொன்றை வேந்தனையும் தமது பாலபாடம் முதலாம் தரப் புத்தகத்தில் பதிப்பித்து வெளியிட்டார்.
- 1852 இல் இவ்விரு நூல்களுக்கும் உரையெழுதி இரண்டாம் புத்தகத்தில் பதிப்பித்து வெளியிட்டார்.
- காலத்தால் முற்பட்டதாகக் கருதப்படும் உரை பரிமேழகர் உரை இதுபற்றிய கருத்து வேறுபாடுகள் உள.
- ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் எழுதிய உரையே காலத்தால் முற்பட்ட உரையாகக் கிடைக்கிறது.
- சார்புநூல்கள்
  புதிய ஆத்திசூடி, ஆத்திசூடி வெண்பா, ஆத்திசூடிப் புராணம், ஆத்திசூடிச் சிந்து, ஆத்திசூடி அகவல், ஆத்திசூடிக் கதைகள்

- **பொருள் மரபு**
  - வேத, உபநிடதக் கருத்துக்களின் சாரம்
  - மானிட வாழ்க்கைப் பயன்களாக அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நால்வகைப் புருடார்த்தங்களையும் எடுத்து விளக்குகிறது.
    - அறம், செயவிரும்பு, பொருள்தனைப் போற்றி வாழ்
      மெல்லிய நல்லாள் தோள் சேர்
    - வீடு பெறநில்
  - திருக்குறளில் கூறப்பட்டுள்ள பல விடயங்கள் கூறப்பட்டுள்ளன.
    நன்றிமறவேல், ஞயம்பட உரை
    ஊக்கமது கைவிடேல் போன்றன
  - அறத்தின் மேன்மை, ஈகையின் சிறப்பு, உழைப்பின் அவசியம், உலகத்தோடு ஒட்ட வாழ்ல், நட்பு, செய்ந்நன்றி மறவாமை, ஒழுக்கம், ஆன்மீக இலட்சியம்.
  - தத்துவ சிந்தனைகளை உள்ளடக்கியது.
    - ஓதுவது ஒழியேல்
    - பேதமை அகற்று
    - தூக்கி விளை செய்
    - வீடு பெற நில்

### 3. நல்வழி

- நல் + வழி --- நல்வாழ்வு வாழ வழிகாட்டும் நூல்
- சோழர் காலத்தில் வாழ்ந்த ஔவையாரால் இயற்றப்பட்டது.
- 40 வெண்பாக்களைக் கொண்டது.
- சமயக்கருத்துக்களை வாழ்வியலோடு தொடர்புபடுத்திக் கூறுகின்றது.
- காப்புச் செய்யுளில் முத்தமிழ் வேண்டப்படுகிறது.
- வினைப்பயன், நீதிவழுவாது புண்ணியம் செய்வோரே உயர் சாதியார், தருமம் செய்பவர்க்கே சற்குருவினது திருவருளும் ஞானமும் கிடைக்கும், புண்ணியம் செய்தால் எண்ணிய கருமம் கைகூடும், இருவினைப்பயன்களை அனுபவித்தேயாக வேண்டும். பெரு முயற்சி செய்து பெரும்பொருள் சம்பாதித்தாலும் ஊழின் அளவை அனுபவித்தல் வேண்டும்.

- நடுவுநிலைமை / நல்லொழுக்கம் பேணுதல் / யாக்கை நிலையாமை / வயிற்றுப்பசிக்கொடுமை / உழவுத்தொழிலின் சிறப்பு / ஊழ்வினையின் வலிமை / மானத்தின் பெருமை / சிவத்தியானத்தின் பயன் / பிறனில் விழையாமை / தருமத்தின் அவசியம் / திருவைந்தெழுத்தின் பெருமை / திருநீற்றின் பெருமை / வேத நூற் சிறப்பு போன்ற கருத்துக்களை உள்ளடக்கியது.
- வீடு சிறப்படைய - மனைவி
  நெற்றி சிறப்படைய - விபூதி
  போசனம் சிறப்படைய - போசனம்
  உடம்பு சிறப்புற - சகோதரர்
  ஊர் சிறப்பு - நதி
  என்பன அவசியம் எனக்குறிப்பிடப்பட்டுள்ளன.
- கொடிய நோய் பசி, திருப்தியடையாதவர்களுக்குத் துன்பம் நேரும், இன்சொல் பேசுவதன் அவசியம்.
- திருக்குறள், வேதங்கள், தேவார முதலிகளின் தேவாரங்கள் திருவாசகம், திருக்கோவையார், திருமந்திரம் அவையாவும் ஒரே கருத்தினையே உரைக்கின்றன என்று நாற்பதாவது பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 31
## மூவகை போகங்கள்

- இந்து மதத் தத்துவத்திற்கு அடிப்படையான பிரதான நூல்கள் மூன்று ஆகும். அவை பிரஸ்தான திரயம் எனப்படும்.
- பிரஸ்தான திரயம் ---- பிரதானமான மூன்று நூல்கள் (1) உபநிடதங்கள்
  (2) பகவத்கீதை
  (3) பிரம்மசூத்திரம்
- பகவத்கீதை
  - பகவத்கீதை என்ற சொல்லுக்குத் தெய்வப்பாஷை என்று பொருள்
  - பகவத்கீதை மகாபாரதத்தில் பீஸ்ம பர்வத்தில் 25 ஆம் அத்தியாயத்திலிருந்து 42ஆம் அத்தியாயம் வரையுள்ள 18 அத்தியாயங்களை உள்ளடக்கியது. 700 சுலோகங்களை உடையது.
  - போர்க்காலத்தில் அரிச்சுனன் உறவுசார் உணர்வுகளால் மனச் சோர்வடைந்த நிலையில் சாரதியான கண்ணன் அவனது மனச்சோர்வுக்கான அடிப்படைகளை அகற்றும் வகையில் உபதேசம் செய்கிறான். மகாபாரதக் கதையில் கீதை உபதேசிக்கப்பட்ட சந்தர்ப்பம் இதுதான்.
  - சமுதாய ரீதியின் சிறப்பைப் பெற்றுக் கொண்டது பகவத்கீதை ஆகும்.
  - பகவத்கீதை அவதார புருஷனின் ஆக்கம் ஆகும்.
  - அதர்மத்திடமிருந்து தர்மத்தை பாதுகாத்த பெருமை பகவத்கீதைக்கே உண்டு.

  - பகவத்கீதையின் உள்ளடக்கம்.
    - கடவுள் கொள்கை
    - கடவுள் - ஆன்மா தொடர்பு
    - ஆன்மா இயல்புகள்

- சட உலகின் இயல்பு
- ஆன்மீக விடுதலை, அதற்கான வழி

➢ 1 – 6 – அத்தியாயங்கள் - கர்மயோகம் (செயல்நிலை)
  7 – 12 – அத்தியாயங்கள் - பக்தியோகம் (அன்புவழி, உயர்வு நிலை)
  13 – 18 – அத்தியாயங்கள் - ஞானயோகம் (அறிவுநிலை)
➢ கர்மயோகம் - தன்னலம் கருதாத உழைப்பின் வழி
➢ பக்தியோகம் - தன்னலம் கருதாத அன்பு வழி
➢ ஞானயோகம் - அறிவு வழி
➢ இம்மூன்று வகை யோகங்களும் இறைவனை அடைவ்தற்கான சாதனம், உபகரணம், ஆன்மீக வழிகள் / முழுமையடைய வழி
➢ இம்மூன்று யோகங்களும் ஒன்றிலிருந்து ஒன்று பிரித்தெண்ணப் படக்கூடியதல்ல, ஆன்மீகப் பயணத்தில் தேவையான நிலைகளாகும்.

1. **யோகம் என்பதன் கருத்து யாது? பகவத்கீதை கூறும் மூவகை யோகங்களையும் விபரிக்குக.**
   யோகம் என்பது --- இறைவனோடு இணைதல் அதற்கான வழி என்று பொருள்படும். ''யோக்'' என்ற ஆங்கிலச் சொல்லின் பொருள் கொண்டது.

   **(1) கர்மயோகம் - செயல் மூலம் இறைவனுடன் இணைதல்.**
   - ஆறு அத்தியாயங்களைக் கொண்டது.
   - கர்மயோகம் --- தன்னலமற்ற சேவைமார்க்கம் (மக்கள் சேவை மகேசன் சேவை)
   - செயலில் துறவு --- செயலைச் செய்தபின் அதன் பயன்பற்றி எண்ணாதிருத்தல்
   - செயலிற் பலனைச் சிந்தித்தால் பிறவித்துன்பம் ஏற்படும்.
   - கடமையைக் கடமைக்காகவே செய், கடமையைச் செய்வதற்கு உரிமை உண்டு.
   - பயன் கருதாமல் வினைமுடிப்பவன் கர்மயோகி
   - உள்ளத்துச் சமநிலையோடு செயல்களைச் செய்தல்
   - கர்மயோகத்தைப் பின்பற்றுபவர்கள் பின்வரும் பண்புகளைக் கொண்டிருப்பர்.
     - சுயநலம் கருதாமை
     - ஐம்புல அடக்கம்
     - உள்ளத்துச் சமநிலை
     - யாவற்றிலும் சமநோக்கம் காணுதல்
   - பலனை எதிர்பாராது கடமை செய்யும் போது பின்வரும் இலட்சியம் நிறைவேறும்.
     - தன்னை வெல்லுதல்
     - நெஞ்சு அழுக்கை நீக்குதல்
     - இறை சக்தியை வளர்த்தல்
   - காமிய நிஷ்காமிய வினைகளில் நிஸ்காமியவினையே பிறவிப் பிணியை அறுக்கும். ஆன்மீக விடுதலைக்கு வழிகாட்டும்.
   - செயல்களை ஆற்றிக் கொண்டு அதன் இன்பங்களில் பற்றினை வளர்த்தல் - செயலில் துறவு
   - செயல்கள் யாவற்றையும் அர்ப்பணம் செய்தல்.
   - உலக வாழ்வைத் துறந்து செல்லாமல் உலக வாழ்வில் ஈடுபட்டுக் கொண்டே செயலில் பற்றற்ற மனப்பாங்கை வளர்த்தலாகிய செயலிற்துறவு – கர்மயோகம் ஆகும்.

- பழக்கத்தைக் காட்டிலும் ஞானமும் ஞானத்தைவிடத் தியானமும் தியானத்தைவிடச் செய்கையும் செய்கையைக் காட்டிலு் செயலில் உள்ள பற்றைத் துறத்தலும் மேலானது கர்மயோகத்தின் சிறப்பு கிருஷ்ண பரமாத்வால் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.
- ஐம்பொறிகளையும் அடக்கி மனதால் புலன் இன்பங்களை எண்ணிக் கொண்டிருப்பவன் பொய் ஒழுக்கத்தை உடையவன் ஆவான். எனவே பற்றற்ற நிஷ்காமிய வினைகளின் அவசியத்தைக் கீதை குறிப்பிடுகின்றது.
- செயல்களை ஆற்றிக்கொண்டு அதன் இன்பங்களில் பற்றற்ற தன்மையை வளர்ப்பதே உண்மைத்துறவு.
- கடமைக்காக கடமையைச் செய்தல் கருமத்தில் ஞானம் என்கிறது கீதை
- செயல்களையும் அதன் பயன்களையும் இறைவன் பொருட்டு ஆற்றும்போதே முத்தி கைகூடும்.
- நல்வினையாயினும் தீவினையாயினும் தன்முனைப்புடன் பலன் கருதிப் புரியப்படும் போது முறையே தங்க விலங்காகவும் இரும்பு விலங்காகவும் அவை தம்மை ஆற்றியவனைப் பிணிக்கின்றன.
- ‘‘பற்றின்றிப் பெருவினையாற்று அவ்வாறு செயல்புரிபவன் பெருநிலை அடைகிறான்’’ என்று கண்ணன் கூறுகின்றான்.
- கண்ணன், ஜனகர் அவ்வாறு வினைகளை ஆற்றி மத்தியின்பம் பெற்றனர்.
- ‘‘மூவுலகிலும் எனக்கென்று கடமைகளோ, அடைய வேண்டிய தேவைகளோ எதுவும் இல்லை எனினும் செயலாற்றிய வண்ணமே உள்ளேன்’’ எனத் தனது தன்னலமற்ற சேவையைக் கண்ணன் கீதையில் விளக்குகிறார்.
- இந்திரியங்களை மனதால் அடக்கி பற்றற்றுக் கர்மயோகம் செய்பவன் மேலானவன்.

**(2) பக்தியோகம்**

- பக்தி ---- அன்பு
- பக்தியோகம் ---- தன்னலமற்ற அன்பு நெறி
- ஆழ்ந்த இறைபற்றே பக்தி என நாரதர் தனது பக்தி சூத்திரங்களில் குறிப்பிடுகிறார்.
- 7 – 17 அத்தியாயங்கள் பகதியோகம் பற்றிக் குறிப்பிடுகின்றது.
- மணவான முனிவர் - ‘‘புலனறிவுக்குட்பட்ட பொருளிகளிலிருந்து பேதைகள் பெறும் இன்பம் இறைவனை நோக்கித் திருப்பப்பட்டால் அதுவே பக்தி’’ என்கிறார்.
- புலன் நுகர்ச்சி பொருட்கள் மீது வைக்கும் பக்தி இறைவன் மீது திருப்பப்பட்டால் அதுவே பக்தி ஆகும்.
- பிருகதாரணிய உபநிடதத்தில் யாக்ஞவல்லியர் தனது மனைவி மைத்ரேயிக்கு கூறும் உபதேசம்
    - இறைவனே உயர்ந்த அன்புக்கு உறைவிடம் பரமான்மாவே வேறு எப்பொருளையும் விட, ஒருவன் அதிக அன்பு செலுத்துவதற்குரிய பொருள். அதுவே உள்ளார்ந்தது. பரமாத்மா மேல் வைக்கும் அன்பே முதன்மையானது. இவ்வுலகிலுள்ள அனைத்தும் இறைவனால் படைக்கப்பட்டவை என்பதனாலேயே நம் அன்புக்குப் பாத்திரமாகின்றன.
- இறைவனின் பக்திவெள்ளத்தில் ஆழ்ந்தவர்கள் பக்தர்கள் எனப்படுவர்.
    - பிரஹலாதன், அனுமான், அரிச்சுனன், கண்ணப்பர், அப்பர் ஆகியோர் பக்தியோகத்திற்கு உதாரணமானவர்கள்
- பக்தி ஆசாரபக்தி, பிரபக்தி என இருவகைப்படும்.
    - **ஆசாரபக்தி**

- சடங்குகளோடு கூடிய வழிபாடு
- சாத்திர விதிப்படி பக்தி பண்ணுதல்
- இறைநாமத்தை உச்சரித்தல்
- உபவாசமிருத்தல்
- தீரத்த யாத்திரை
- பூசை வழிபாடுகள்

- **பிரபக்தி**
  - உண்மையான பக்தி எனப்படுகிறது ‘‘முக்யா’’ எனப்படுகிறது.
  - தூய்மையானது, தன்னலமற்றது, நுட்பமானது
  - இறைவனிடத்து முழுமையாக அர்ப்பணித்து விடும் நிலை
  - இறையன்பின் உயர்நிலை
  - இறைவனைச் சரணடைதல் (சரணாகதி தத்துவம்)
  - ஆன்ம நிவேதனம்
  - கடவுளைச் சரணடைந்த யாவரும் பிரபத்தி செய்ய தகுதியுடையவர்.
  - ஆன்மா இறைவனோடு நேரடித் தொடர்பு கொள்ளுதல்

- ஸ்ரீ இராமகிருஷ்ணர் --- பற்றற்ற மனமும் உண்மையான அன்பும் இறைவனை அடையும் வழி.
- ‘‘எல்லாக் கடமைகளையும் விட்டுவிட்டு நீ மட்டும் என்னிடம் வந்து தஞ்சம் புகு நீ வருத்தம் கொள்ளாதே நான் உன்னைப் பாவங்களிலிருந்து விடுவிப்பேன்’’ என்று பகவான் பகவத்கீதையில் அரிச்சுனனுக்குப் பிரபக்தியைப் போதிக்கிறார்.
- ராஜவித்யாயோகத்தில் பகவான் பக்தி யோகத்தின் சிறப்புப் பற்றிக் கூறுகிறார். ‘‘நான் எல்லா உயிர்களிடத்தும் சமமாயிருக்கின்றேன் எனக்குப் பகைவனுமில்லை நண்பனுமில்லை ஆனால் என்னைப் பக்தியோடு பூஜிக்கின்றவர்கள் என்பார் உளர். நானும் அவர்கள் பால் உள்ளேன்.
- மனித உறவுகள் ஒன்றின் அடிப்படையில் பக்தன் தன்னை இறைவனோடு இணைத்துக் கொள்கின்றான். இம்மனப்பாங்கு ‘‘பாவங்கள்’’ எனப்படுகின்றன. பக்தி சாத்திரங்கள் 19 வகையான பாவங்கள் பற்றிக் கூறுகின்றன.

1. **தாஸ்யம்**
   - எஜமானுக்கும் வேலைக்காரனுக்குமிடையிலுள்ள மனப்பாங்கு (தொண்டாடிப் பொடி யாழ்வார், அப்பர் சுவாமிகள்)

2. **சகியம்**
   - தோழமை உறவு (குசேலர், கிருஷ்ணர், சுந்தரர், அரிச்சுனன்)

3. **வாற்சல்யம்**
   - குழந்தை மேல் தாய்க்குள்ள பாசம் (கோசலை, யசோதை, பெரியாழ்வார்)

4. **சாந்தம்**
   - குழந்தைக்குத் தாய்மேல் உள்ள பாவம் (பிரகலாதன், துருவன்)

5. **காந்தம்**
   - மனைவி கணவன் மேல் வைக்கும் அன்பு (சீதைக்கும் இராமனுக்கும் உள்ள உறவு)

6. **மதுரம்**

- காதலனுக்கும் காதலிக்கும் இடையிலான உயர்ந்த காதல் உறவு (இராதை – கிருஷ்ணர் உறவு)
  பக்தன் தன்னைத் தலைவியாகவும் இறைவனைத் தலைவனாகவும் கருதி தன்னை முழுமையாக ஒப்புவிக்கும் நிலையாகும்.

- **உயர் நிலையினுடைய பக்தர்களின் பேரியல்பு பற்றி பகவத்கீதை கூறுவது.**
  - உயிர்களிடத்து வெறுப்பின்றி நட்பும் கருணையும் உடையவர்களாயிருத்தல்.
  - அகங்காரமும் மமகாரமுமற்றிருத்தல்
  - இன்பதுன்பங்களைச் சமமாய்க் கருதி பொறுமையுடன் எப்பொழுதும் சந்தோசமாய் இருத்தல்.
  - யோகியாய் இருத்தல
  - தன்னடக்கமுடையவனாய் இருத்தல்
  - ''என்னிடத்து மனம் புத்தியைச் சமர்ப்பித்தவராய் யார் என் பக்தனாகிறானோ அவன் எனக்குப் பிரியமானவனாவான்'' (பக்தியோகம் - கண்ணன்)
  - அன்பை உடையவர்.

- **பக்தியோகம் சுலோகம் - 9**
  - பக்தி அன்பைப் பெருக்குகிறது மனது உறுதியாக இறைவனால் நிலைத்து நின்று விடுமானால் அது முதரிந்த பக்தியாகிறது இல்லையேல் பயிற்சியினால் மனதை ஒழுங்குபடுத்த வேண்டும்.
    ''சித்தத்தை என்பால் உறுதியாக வைக்க இயலாவிடின்
    அப்பியாச யோகத்தால் என்னை அடையவிரும்பு''
    (பக்தியோகம் சுலோகம் - 9)
- பக்தியோகத்தின் வழிநிற்போர் துன்பப்படாத மனநிலை உடையவர்களாதலின் புற உலக துன்பங்கள் எந்த விதத்திலும் அவர்களைப் பாதிப்பதில்லை.
- பக்தியோகம் ஆன்மீக இலட்சியத்திற்கான வழியாகும்.
  - ''மனதை என்னிடத்து வைத்து என்பால் பக்திபண்ணி என்னையே வணங்கு என்னைக் குறியாகக் கொண்டு உள்ளத்தை உறுதிப்படுத்தி என்னையே அடைவாய்'' – கண்ணன்
    (ராஜசித்யோகம்)
  - ''என்னிடத்து மனதை வைத்து என்னிடத்துப் பக்தியைச் செலுத்துக பின்பு என்னிடத்தே வசிப்பாய் என்பதில் சந்தேகமில்லை.
    (பக்தியோகம் சுலோகம் - 08)

**(3) ஞானயோகம்**

- ஞானம், அறிவு, வேதனம், பிரக்ஞை என்பன ஒரு பொருட் சொற்கள் ஆகும்.
- ஞானயோகம் ---- அறிவு வழி
- பற்றற்ற நிலையில் வாழும் ஒரு ஞானியின் செயலைக்குறிக்கும்.
- இடைவிடாமல் ஈஸ்வரனைச் சிந்திப்பதே ஞானயோகத்தைப் பின்பற்றுபவனின் செயலாகும்.
- உயிருக்கும் உடலுக்கும் உள்ள தொடர்பு, முக்குண இயல்புகள், பிரபஞ்சம், மூலப்ரகிருதி, நல்லோரியல்பு, தீயோரியல்பு போன்ற விடயங்கள் கூறப்படுகின்றன.
- 13 – 18 வரையுள்ள அத்தியாயங்கள் ஞானயோகம்.
- பிரகிருதி, புருஷன் ஆகிய இரண்டு தத்துவங்களையும் அறிவதே ஞானம்

- துன்பங்களுக்கும் குறைபாடுகளுக்கும் மூலகாரணம் அறியாமை என்னும் அஞ்ஞானம் ஆகும். ஆன்மா அஞ்ஞானம் காரணமாகத் தன்னைப் பிரமத்தினின்றும் வேறுபட்டதாக நினைக்கிறது. அஞ்ஞானத்தை ஞானத்தால் தான் அகற்ற மடியும்.
- பிரம்மத்திலிருந்து ஆன்மா பேதமற்றது என்ற அறிவின் மூலமே முழுமை நிலை பெற முடியும்.
- முத்தி அல்லது மோட்சம் என்பது ஆன்மாவின் என்றுமுள்ள தன்மை ஆகும்.
- ''முத்தி அல்லது வீடுபேறு அடைவதற்கு முக்கியமான வழி ஞானமே'' என்று சங்கரரிக் அத்வைதம் கூறுகிறது.
- மனத்தால் பெறும் அறிவு ஞானமன்று அது ஆன்மீக உள்ளொளி பெறுவதாகும்.
- **ஞானம் இருவகைப்படும்**
  1. பரவித்தை – பிரமத்தை அறியும் அறிவு
  2. அபரவித்தை – உலகத்தைப் பற்றிய அறிவு

- நாரதர், சனற்குமாரிடம் ''நான் வேத இதிகாசங்களையும் புராணங்களையும் நுண்கலை முதலியவற்றையும் கற்றுள்ளேன். ஆனால் நான் ஆன்மாவைப்பற்றி அறியவில்லை. நான் துக்கப்படுகிறேன். எனக்கு ஞானத்தை அருளுங்கள்'' என மனந்திறந்து கூறுகிறார். அதன் பின் சனற்குமாரர் அவருக்கு ஆன்ம விடுதலைபெற ஒரே வழியான பரவித்தையைப் போதித்தார்.

- **பகவத்கீதையில் பகவான் கூறும் ஞானம்**
    - தற்பெருமையின்மை, தருக்கின்றமை
    - அஹிம்சை, பொறுமை, நேர்மை, குருசேவை, தூய்மை, விடாமுயற்சி
    - தன்னடக்கம், பற்றின்மை, மனைவி, மக்கள் என்று அபிமானியாதிருத்தல்.
    - வேண்டுவன வேண்டாதவைகளிடத்து மனம் நடுநிலையில் இருப்பது.
    - வேறு எதையும் எண்ணாத யோகத்தால் பகவானிடம் பிறழாத பக்தியைச் செலுத்துதல்.
    - தனிமை நாடுதல், ஜனக்கூட்டத்தில் விருப்பம் இன்மை.
    - ஆத்மஞானத்தில் நிலைபேறு, உண்மைப்பொருள் ஆராய்ச்சி

- மாறுபாடில்லா என்றும் நிலைத்திருக்கும் பரப்பிரம்மத்தை அறிவதே மோட்சம் ஆகும்.

- **பிரமத்தை அறியும் பரஞானத்தை அடைவதற்கான முயற்சிகள்**
  1. அறிவு நிலை, உணர்ச்சி நிலையில் ஆயத்தம் செய்தல்.
      - நிலையானவை, நிலையற்றவை என்பவற்றைப் பிரித்து எண்ணுதல்.
      - தன்னல காரியங்களின்றும் விடுபடுதல்
      - மனத்தை ஒருமுகப்படுத்தல்
      - விடுதலை பெறுவதற்கான விருப்பம்

  2. பிரமஞானத்தையடைந்த குருவிடம் ஞான நூல்களைக் கற்றல்

  3. சிரவணம் (வேதாந்த நூல்களைக் கற்றல்)
     மனனம் (கற்றவற்றைச் சிந்தித்துத் தியானம் செய்தல்
     நிதித்தியானம் (தெளிதல்)

- **பகவத்கீதையில் காணப்படும் ஞான யோகம் பற்றிய உயர்வான கருத்துக்கள்**
    - பொருளைக் கொண்டு செய்யப்படும் யக்ஞத்தைவிட
      ஞானயக்ஞம் மேலானது பார்த்தா
      கர்மம் முழுவதும் ஞானத்தில் முற்றுப்பெறுகிறது.

      (ஞானகர்ம சந்நியாச யோகம் 33)
    - பணிந்தும், கேட்டும், பணிவிடை செய்தும் நீ
      ஞானத்தை அறிந்து கொள் உண்மையை
      உணர்ந்த ஞானிகள் உனக்கு அந்த ஞானத்தை
      உபதேசிப்பார்கள்

      (ஞானகர்ம சந்நியாச யோகம் 34)
    - சிரத்தையுடையவன் பரத்தைச் சார்ந்திருப்பவன்
      புலன்களை வென்றவன் ஞானத்தைப் பெறுகிறான்
      ஞானத்தைப் பெற்று விரைவில் மேலாம் சாந்தி
      அடைகிறான்

      (ஞானகர்ம சந்நியாச யோகம் 39)
- ஆன்மா அஞ்ஞானம் காரணமாகப் பிரமத்திலிருந்து தன்னை வேறுபாடானதாக நினைக்கிறது. எனவே அஞ்ஞானத்தை ஞானத்தால் அகற்றுவதன் மூலமே ஆன்மீக விடுதலையைப் பெற முடியும் என்பது ஞானயோகம் வலியுறுத்தும் நெறிமுறை ஆகும்.
- கிருஷ்ணபகவான் "தாமும் ஞானியும் ஒன்று" என்கிறார்.
- எல்லா வினைகளை எரிக்கும் நெருப்பு ஞானமே ஞானமென்னும் தீயானது எல்லா வினைகளையும் எரித்துச் சாம்பராக்குகிறது. எல்லா வினைகளும் ஞானத்தில் ஒடுங்குகின்றன. ஞானம் வழியாக மோட்சம் கிட்டுகிறது.

# 32
# இந்து அறிவியல்

- அறிவு + இயல் எனும் இரு சொற்கள் இணைந்து அறிவியல் என்னும் கலைச்சொல் உருவானது.
- ஆக்கத்திற்கு அடிகோலுவது ஆய்வுச்சிந்தனை அதனை அடிப்படையாகக் கொண்டமைவது அறிவியல் துறை ஆகும்.
- ஆறிவைக் கொண்டு ஒன்றை ஆராய்ந்து அதன் உண்மைத் தன்மைகளைப் பகுப்பாய்வு செய்து பரிசோதனை மூலம் நிறுவுதலே அறிவியல் ஆகும்.
- முழுமையான ஒன்றைப் பற்றிப் பகுத்து ஆராய்வதும் முழுமையற்றுக் காணப்படும் ஒன்றின் படிமுறையான தொடர்பையும் ஒழுங்கையும் ஆராய்தலும் அறிவியலாகும்.
- அறிவியலை விஞ்ஞானம் என்றும் கூறுவர்.
- இந்து அறிவியல் துறைகள் இந்துக்களின் வாழ்வியலோடு தொடர்புடையதாக விளங்குகின்றன.
- இந்துப் பண்பாட்டில் அறிவியலும் ஆன்மீகமும் ஒன்றையொன்று சார்ந்து வளர்ச்சி பெற்று வந்துள்ளன.
- இந்து அறிவியலில், இந்து கணிதவியல், இந்து வானியலும், சோதிடவியலும், இந்துமருத்துவம், நாட்டார் அறிவியல் என்பன உள்ளடங்குகின்றன.

**இந்து மருத்துவம்**

- இந்துக்களின் மருத்துவம் காலம் காலமாக கட்டியெழுப்பப்பட்டு வளர்த்தெடுக்கப்பட்டு வரும் துறையாகும்.
- நோயை அறிதல், நோய் முதலை அறிதல், நோயைத் தணித்தல் நோயை நீக்குதல், நோயைத் தடுத்தல், இவ்விடயங்கள் பற்றி ஆய்வு செய்தல் மருத்துவத்தின் பாற்படும்.
- இந்து மருத்துவக்கலை அறிவு இருக்கு வேதத்திலிருந்து ஆரம்பமாகின்றது.

1. **வாதம், பித்தம., கபம் ஆகிய மூன்றையும் "திரிதாது" எனக் குறிப்பிடும் வேதம் எது?**
   இருக்கு வேதத்தில் உள்ள "ஒஷதி சூக்தம்" என்னும் பகுதியாகும்.

2. **இந்து மருத்துவ வரலாற்றில் அதர்வ வேதம் குறிப்பிடும் மருத்துவச் சிந்தனைகளைக் குறிப்பிடுக.**
   - அதர்வ வேதத்தில் வரும் பேஷஜானி சூக்தம், அவுஸ்யாணி சூக்தம் பகுதிகளில் மருத்துவச் சிந்தனைகள் அதிகமாக உள்ளன.
   - சூரியனின் அகஞ்சிவப்புக் கதிர்களுக்கு மஞ்சட்காமாலை நோயைக் குணப்படுத்தும் சக்தி உண்டென்பதை அதர்வ வேதம் குறிப்பிடுகின்றது.
   - ஆதர்வணவேதம் 2 ஆம் காண்டம் 66ஆம் 67ஆம் சூக்தங்களில் கிருமி நாசம் என்ற பகுதியில் நோய்க்கிருமிகள் பற்றிக் கூறப்பட்டுள்ளது.
   - மனித உடற்கூற்றியல், குருதிச் சுற்றோட்டம் தொடர்பான சிந்தனைகள் காணப்படுகின்றன.
     - நாடிகளில் பாய்கின்ற சிவப்பு நிறமான குருதி "அருணா" எனவும் நாளங்கள் தாங்கி வரும் கரும் சிவப்புக்குருதி "லோஹினி" எனவும் அழைத்தனர்.
   - பல்வகை ஔடதங்கள் பற்றிய கருத்துக்கள் உள்ளன.
     - குஷ்ட ரோகத்தை நிவர்த்தி செய்யும் "இரஜனீ" என்ற மருந்து
     - கபால வியாதிகளைச் சீர்செய்யவல்ல "கர்ண சூலம்" என்ற மருந்து
     - "விஷ முறிவை ஏற்படுத்தும் அபஸ் கம்பம்" என்னும் மூலிகையானது வெண்குஷ்டத்தைப் போக்கும் சக்தி வாய்ந்தது.
   - பிற்கால மருத்துவக்கலையின் வளர்ச்சிக்கு உதவியாக இருந்தமை.
     - புல், பூண்டுகள் தாவரங்களுக்கு உள்ள மருத்துவக் குணங்களைக் குறிப்பிடுகிறது.

3. **ஆயுர்வேதத்தை அஷ்டாங்கம் என வகுத்தவரும் இந்திய மருத்துவத்தின் தந்தை எனவும் போற்றப்படுபவரும் யார்?**
   - தன்வந்திரி

4. **"சரகசம்ஹிதை" என்னும் மருத்துவ நூல் பற்றிய தகவல்களைத் தொகுத்துக் கூறுக.**
   - சரகர் என்பவரால் எழுதப்பட்டது.
   - ஆத்திரேயரின் சீடர்களில் ஒருவரான அக்கினிவேசரின் நூலைத் தழுவி எழுதப்பட்டது.
   - 8 பிரிவுகளையும் 120 அத்தியாயங்களை உடையது.
   - 149 வகை நோய்கள், அவை வருவதற்கான காரணங்கள் அதன் அறிகுறிகள், சிகிச்சை முறைகள் என்பன கூறப்பட்டுள்ளன.
   - இரத்தோட்டம், அதன் செயற்பாடுகள் தொடர்பான கருத்துக்கள்,
     - இரத்தம் உடலில் சுற்றி வருதல், அது உடம்பின் ஒவ்வொரு உறுப்பிற்கும் ஊட்டச்சத்துக்களை எடுத்துச் செல்லல், கழிவுப் பொருட்களை எடுத்துச் செல்லல்,

இதனை முறையாகச் செயற்படுத்துவதில் இதயத்தின் பங்களிப்பு ஆகிய விடயங்கள் கூறப்பட்டுள்ளன.

- முக்கியமான 13 இரத்தக் குழாய்கள், அதனைக் கட்டுப்படுத்தும் மையங்கள், இரத்த ஓட்டத்தில் தடை ஏற்பட்டால் உருவாகும் நோய்கள் என்பன விளக்கப்பட்டுள்ளன.
- இவை பற்றிய ஆய்வுகள் மேல்நாட்டில் 1628 இன் பின்னர் தான் ஆரம்பமானது. ஆனால் சரகர் முன்கூட்டியே கூறியுள்ளார்.
- வைத்தியத்தொழில் மாணவர்களுக்கு வேண்டிய புலனடக்கம், உளவியல் நோக்கு, என்பனவற்றை வலியுறுத்தியுள்ளார்.
  - நோயாளியின் வீட்டுக்குச் செல்லும் போது உன் பேச்சும் உள்ளமும் அறிவும் புலன்களும் வேறு எங்கும் செல்லாது நோயாளியையும் அவருக்கு வேண்டிய வைத்திய முறையையும் நோக்கி நிற்றல் வேண்டும் என்கிறார்.

**5. "சுஸ்ருத சம்ஹிதை" பற்றிய தகவல்களைத் தொகுத்துக் கூறுக.**

- இந்திய அறுவைச் சிகிச்சையின் தந்தை எனப்போற்றப்படும் சுஸ்ருதர் அவர்களால் இயற்றப்பட்டது.
- அறுவை மருத்துவம், மருந்துகள், காது, மூக்கு, தொண்டை, கண்ணோய், விசமுறிவு, மனநலம் என்பன பற்றி விளக்கப்பட்டுள்ளன.
- இந்நூல் பூர்வதந்திரம், உத்தர தந்திரம் என இருவகைப்படும்
  1. பூர்வ தந்திரம்
     அறுவைமருத்துவம், நோய்க்காரணம், அறிகுறி, கருவளர்ச்சி, உடற்கூறு, நாடிநரம்பு, மருத்துவம், விசம் முறிக்கும் முறைகள் பற்றிக் கூறுகின்றன
  2. உத்தரதந்திரம்
     அறுவையின் போது உருவாகும் ஜூரம், பேதி, இருமல், விக்கல், கிருமிகளின் பாதிப்பு என்பவற்றை ஆராய்ந்து கூறுகிறது.
- அறுவைச் சிகிச்சைக்கு உடற்கூறுபற்றிய அறிவு தேவை இறந்தவரின் உடலை அறுத்து ஒவ்வொரு உறுப்புக்கள் பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டும் என்று சுஸ்ருதர் கூறியுள்ளார்.
- அறுவைச் சிகிச்சைக்கு உட்படுபவரின் உணர்வினை மறுக்கச் செய்ய மதுவைப் பயன்படுத்தும்படி அறிவுறுத்தப்பட்டிருந்தது.
- போரில் இழந்த அல்லது காயப்பட்ட அல்லது சட்டமுறையால் வெட்டப்பட்ட மூக்கு, காது, உதடு என்பவற்றை மீண்டும் அமைத்துத் திருத்துவதில் பண்டைய இந்திய சத்திர சிகிச்சை வைத்தியர்கள் வல்லுநராக இருந்தனர்.

**6. வான்மீகி இராமாயணத்தில் சஞ்சீவி மலையில் இருந்த மூலிகை வகைகளையும் அவை குணப்படுத்தும் நோய்களையும் குறிப்பிடுக.**

- இராமாயணத்தில் இராம இலட்சுமணர்கள் இந்திரஜித்தின் பிரம்மாஸ்திரத்தால் மயங்கி இருந்தபோது அவர்களைக் காக்க ஆஞ்சிநேயர் சஞ்சீவி மலையை எடுத்து வந்தனர்.

(1) ம்ருத் சஞ்சீவினி - இறந்தவரைப் பிழைக்க வைக்கும் சக்தி கொண்டது

(2) விசல்யகராணி - உடலில் தைத்த அம்புகளை பிடுங்கி விட்டு இந்த மூலிகையைப் பயன்படுத்தினால் காயத்தின் வடுகூடத் தெரியாமல் குணப்படுத்தும் தன்மை கொண்டது.

(3) சந்தான கரணி - எலும்பு முறிவு, கிழிந்து போன சதை என்பவற்றைக் குணப்படுத்தும்

(4) ஸாவர்ணயகரணி - தீக்காயத்தினால் எரிந்து போன தோலைக் குணப்படுத்தி முன்பு இருந்தது போலச் செய்யும்

**7. தமிழக வரலாற்றில் இந்து மருத்துவம் பற்றிக் கூறப்படும் கருத்துக்களைக் குறிப்பிடுக.**

- பதிற்றுப்பத்து, பாலைக்கலி, நற்றங் கொற்றனார் பாடிய அகப்பாடலிலும் மருத்துவனின் இயல்பு, அறுவைச் சிகிச்சை முறை என்பன குறிப்பிடப்பட்டுள்ளன.

  உதாரணம் - "மீன்றோர் கொட்பி பனிக்கய மூழ்கிச் சிரல் பெயர்
  தன்ன……" (பதிற்றுப்பத்து)
- சங்கமருவிய கால நூல்களான திரிகடுகம் ஏலாதி, சிறுபஞ்சமூலம் ஆகியவை மருத்துவ சிந்தனைகளை வெளிப்படுத்துகின்றன.
- திருக்குறள் - பொருட்பால் 95ஆம் மருந்து அதிகாரம் - மருத்துவ விளக்கம்.

  "நோய் நாடி நோய் முதல் நாடி அது தளரிக்கும்
  வாய்நாடி வாய்ப்பச் செயல் - என்னும் குறளை உதாரணமாக குறிப்பிடலாம்.
- கடவுள் பற்றுடைய மக்கள் வழங்கிய நன்கொடையால் பேணப்பட்டு வந்த மருத்துவ நிலையங்கள் பற்றி இந்தியா வந்த பாகியன் குறிப்பிடுகிறான்.
- பல்லவர் கால அரசர்கள் மருத்துவர்களுக்கு வழங்கிய நிலம் "மருத்துவப்பேறு" என கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. மரத்துவ மூலிகை பயிரிடுவோர் அரசவரி செலுத்தினர் என கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- பல்லவர் காலத்தில் வெப்பு நோய் தீர்த்தமை, விசமுறிவு செய்தமை அற்புதங்கள், இறையருள் என்பவற்றுடன் இந்திய மருத்துவ முறைகளையும்
- சோழர்காலத்தில் மன்னர்கள் மருத்துவர்களைப் பேணியதுடன் மருத்துவமனைகளை அமைத்தமை மானியங்கள் வழங்கி நிர்வகித்தமை – செங்கல்பட்டு முக்கூடலில் உள்ள விஸ்ணு கோயில் கல்வெட்டு குறிப்பிடுகிறது.
- குந்தவைப் பிராட்டியார் தந்தை சுந்தரசோழன் நினைவாக தஞ்சையில் ஒரு மருந்தகத்தை நிறுவினார்.
- திருவரங்கத்தில் இரந்த மருத்துவ மனை பற்றி அங்குள்ள கல்வெட்டுக் குறிக்கப்படுகிறது.
- கோயில்களை அடுத்து மருத்துவமனைகள் காணப்பட்டன இருவகை மருத்துவர் காணப்பட்டனர்.

  (1) ஒருவர் கைநாடி பார்த்து மருந்து கொடுப்பர். (Physision)

  (2) மற்றொருவர் கட்டி முதலியவற்றை அறுத்துப் புண்களை ஆறவைப்பர். சல்லியக்கிரியை பண்ணுபவன். (Surgeon)

  மரத்துவமனையில் வேர்களையும் பச்சிலைகளையும் கொண்டு வருவோர், அவற்றை மருந்தாக்குவோர் நோயாளிகளைக் கவனிக்கும் தாதிமார் என்போர் இருந்தனர். என்று கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன
- வேர்களையும் பச்சிலைகளையும் பயன்படுத்தும் முறை தமிழர்களுக்கே உரியதாகும்.
- நாடி பிடித்து இதயத்துடிப்பை அறிந்தனர் என்பதற்கு "நாடிக்கவி" யின் முதற்செய்யுள் ஆதாரமாக உள்ளது.
- சித்த மரத்துவத்துறை நோய்களைத் தீர்த்தல், நோய் வராது தடுக்கும் முறைகள், நரை, திரை, மூப்பு, பிணி, பயம், சாக்காடு என்பவற்றை வென்று உடலையும் உயிரையும் அழியாது நிலை நிறுத்தி அட்ட சித்திகளையும் பெறும் வழிமுறைகளும் கூறப்பட்டுள்ளன.
- இந்திய மருத்துவத்தில் நாள், கோள் பார்த்து வைத்தியம் செய்வது முக்கியமானதாகும்.
- நாவிதர் அறுவை வேலையில் ஈடுபட்டிருந்ததால் மருத்துவம் எனப்பட்டனர். பிள்ளைப் பேற்றுத்துறையில் நாவிதர் மனைவிமார் ஈடுபட்டதால் மருத்துவிச்சி எனப்பட்டனர்.
- விஜய நகர நாயக்கர் காலத்தில் இந்து மருத்துவப் பாரம்பரியம் தனித்துவமானதானக் காணப்பட்டது.

  - ஸ்ரீரங்கம் கோயிலில் புகழ்பெற்ற மருத்துவமனை நிறுவப்பட்டிருந்தது.
  - ஆதீனங்கள் ஊடாகவும் மருத்துவ சேவைகள் பரப்பப்பட்டன.

- 18ம் நூற்றாண்டில் கிழக்கிந்தியக் கம்பனிகள் சத்திர வைத்தியர் இந்தியாவிடம் இருந்தது. (இந்திய சத்திர வைத்தியம்)

**8. இந்து வழிபாட்டு முறைகளில் காணப்படும் மருத்துவச் சிந்தனைகளைக் குறிப்பிடுக.**

- விநாயகர் வழிபாடு - தோப்புக்கரணம் போடுதல், நெற்றியில் குட்டிக் கும்பிடுதல்
- யோகாசன மருத்துவம், நரம்புமையங்கள் தூண்டப்பட்டு நினைவாற்றல் அதிகரிக்கும்.
- தோப்புக்கரணம் போடுதல், அட்டாங்க, பஞ்சாங்க வழிபாடுகள், தலயாத்திரை செய்தல், கிரிவலம் செல்லுதல், மலைகளில் ஏறுதல்.
  - ஊடலில் உள்ள நாரி இடுப்பு, முழங்கால் தசைகள் பலமடைகின்றன. இரத்தச் சுரப்பிகளில் உள்ள அடைப்புகள் நீக்கப்படுகின்றன. குருதிச் சுற்றோட்டம் சீராகின்றன. நீரிழிவு நோய், வாத நோய் குணமடைகின்றன.
- அறுகு, துளசி பத்திரங்கள், வில்வம் போன்றன மருத்துவக் குணங்கள் உடையன.
- ஆங்கில மருத்துவமுறையால் தீர்க்க முடியாத பல நோய்களை இந்து சமயம் கண்ட யோகாசன முறைகள் பிராணயாமம், சூரிய நமஸ்காரம் முதலியன தீர்த்து வைக்கின்றனர்.
- இந்துசமய விரத நியமங்கள் ஆன்மீக நோக்குடையவை மட்டுமன்றி உடல், உளநலம் காக்கும் செயற்பாடுகளுமாகும். இதனை விஞ்ஞானிகளும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.
- இந்து சமயச் சின்னங்கள் அணிவதன் மூலம் உடல், உள வியாதிகளை அகற்ற முடியும்.
  - திருநீறு, உருத்திராக்கம்
  - நெற்றிப்பொட்டில் குங்குமம் அணிவதால் அதில் உள்ள மஞ்சளின் சக்தி உடம்பில் ஊடுருவி விச பாதிப்புக்களை நீக்கி விடுகிறது.
- இந்து உணவு வகைகள் ---- நல்லுணர்வு / உடற்தூய்மை / மருத்துவகுணங்கள்

**9. இந்து மருத்துவத்தின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுக.**

- எந்நாட்டவர்க்கும் ஏற்புடையது.
- இந்திய நாட்டு தட்ப, வெப்ப நிலை, உணவு வகை, தொழில் நிலை, உடல்வாகு என்பவற்றுக்கேற்பக் காணப்படுகிறது.
- இந்து மருத்துவத்தில் உள்ள மூலப்பொருள்கள் யாவும் தாவரங்கள், உப்புகள் முதலானவற்றில் இருந்து உள்நாட்டிலே கிடைப்பதால் நம்பிக்கையுடன் பயன்படுத்த முடிகிறது – பக்கவிளைவுகள் அற்றது.
- மேல்நாட்டு மருத்துவ முறைகளுக்கு இந்து மருத்துவமுறைகள் அடிப்படையானதாகும்.
- தியானம் விரதமுறைகள், யோக வழிபாடுகள் அறிவியல் சார்ந்ததாகும்.
- விபூதி அணிதல் ---- சளித்தொல்லை நீங்குதல், உள்ளம், உடல் தூய்மை அடைதல்.
- விபூதி உடலில் 16 இடங்களில் தரிக்க வேண்டும் என்று சைவம் வலியுறுத்துகின்றது. அக்கியூ பஞ்சர் முறையில் இனம் காணப்பட்ட இடங்கள் இந்து மருத்துவத்தில் கூறப்பட்ட இடங்களாகும்.

# 32
# சோதிடவியல்

- இந்து சமய வரலாற்றில் இந்து அறிவியல் சிந்தனைகள் முக்கியம் பெறுகின்றன.
- வானியல், சோதிடம், மிகவும் முக்கியத்துவம் உடையன.
- வானியலை அடிப்படையாகக் கொண்டே சோதிடம் தோற்றம் பெற்றதனால் இவை இரண்டும் ஒன்றையொன்று தொடர்புடையதாகும்.
- சமய வாழ்வுக்கும் சமய இலட்சியங்களை அடைவதற்கும் உரிய வழிமுறைகளைக் காட்டுகின்றது.
- வேதங்களில் கூறப்படும் ''ரிதம்'' கோட்பாடு சோதிடக்கலைக்கு அடிப்படையானதாகும். இயற்கை ஒழுங்கின் அடிப்படையிலேயே சோதிடம் அமைகிறது.
- வேதாங்கங்களில் சோதிடமும் ஒன்றாகும்.
  சோதிடம் ⟶ வேள்வி நிகழ்த்துவதற்கேற்ற திகதியையும் நேரத்தையும் குறிப்பிடுவதை நோக்காகக் கொண்ட பண்டைய வானியலை அடிப்படையாகக் கொண்டது.
- இந்திய சோதிடவியல், வானியல் தொடர்பான அறிவியல் சிந்தனைகளை எவ்வாறான தலைப்புகளில் ஆராயலாமென S.B.தீட்சித் குறிப்பிடுகிறார்.
  1. வேதகாலம்
  2. வேதாங்கங்கள்
  3. பண்டைய வானியல் கோட்பாடுகள்
  4. வராகமிரர் முதல் கணேஸ்தைவஞ்ஞன் வரை

**வேதகாலதத்தில்**

- மண், விண், இடைவெளி பற்றி ஆராயப்பட்டுள்ளன.
- சூரியர் சந்திரர் பற்றி அறியப்பட்டுள்ளன
- நாள், சந்திரமாதம், சூரிய வருடம் பற்றிய குறிப்புகளும் உள்ளன.
- பிராமணங்களில் சூரியனது போக்குப்பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.
- ஐந்து முதல் ஆறு காலங்கள் பற்றியும் 12 மாதங்கள் பற்றியும் 27 நட்சத்திரங்கள் பற்றியும் சில கிரகங்கள் பற்றிய குறிப்புகளும் உள்ளன.

**வேதாங்கங்களில்**

- சந்திர மாதம் பற்றிக் கூறப்படுகின்றது.
- சூரிய வருடம் பற்றிய விபரம் காணப்படுகிறது. அதர்வ வேதத்தில் சோதிடத்தின் தொடக்கம் உள்ளது.

**இந்து வானியல் சம்பந்தமான தகவல்கள்**

- இருக்கு வேத காலத்திலிருந்து வானத்தில் 27 நட்சத்திரங்கள் உள்ளன எனக் கூறப்பட்டிருந்தன.
- சந்திர மாதங்கள் நட்சத்திரங்களைக் கொண்டு அளவிடப்பட்டது.
- இந்து வானியல் கணித அறிவோடு விருத்தி செய்யப்பட்டது அராபியரூடாக ஐரோப்பியருக்கு நல்கினர்.
- நவக்கிரகங்கள் பற்றிய அறிவு காணப்பட்டது

- கோள்களுக்குச் சமமான உண்மையான இயக்கமுண்டு என்றும் அவை புவியினின்றும் வெவ்வேறு தொலைவில் இருப்பதனாலேயே வெவ்வேறான கோணவியக்கத்தை உடையன எனவும் கூறினர்.
- ஓராண்டின் காலவளவு, சந்திர மாதம் என்பவை கிரேக்க, உரோம கணிப்பு முறைகளில் செம்மையாகக் காணப்பட்டது.
- இந்து வானியலாளர் கிரகணங்களைத் திருத்தமாக எதிர்வு கூற அறிந்திருந்தனர். அதற்கான காரணத்தையும் கண்டறிந்திருந்தனர்.
- கி.பி 5-7 ஆம் நூற்றாண்டளவில் உச்சயினியில் வானியல் ஆராய்ச்சி மையம் இருந்ததாக நம்பப்படுகிறது. 17ஆம் 18ஆம் நூற்றாண்டுகளில் ஜெய்ப்பூரிலும் வானாராய்ச்சி மையங்கள் அமைக்கப்பட்டன.
- இந்திய வானியலாளர்களில் வராகமிகிரர், புளிஷர், ஆரியப்பட்டர், பிரம்மகுப்தர், லாடதேவர் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்
- ஆரியப்பட்டரது சித்தாந்தம்
  1. கீதிகா – வானியல் அட்டவனை
  2. கணிதம்
  3. காலசியாகால அளவு
  4. கோளம் என வகைப்படுத்தப்பட்டுள்ளது.
- கி.பி 6 ஆம் நூற்றாண்டு வானவியல் வரலாற்றுக்கு பயன்படும். ''பஞ்ச சித்தாந்திகை'' எனும் தொகுப்பு நூலை வெளியிட்டுள்ளார்.
  உலகம், திக்குகள், இடங்கள், காலங்கள், கிரகங்களின் போக்குகள் பற்றிக் கூறுகின்றன.
- லடா சாரியார் யவனபுரத்தில் சூரியாஸ்தமனத்தை அடிப்படையாகக் கொண்டு நேரத்தைக் கணித்தனர்.
- சிம்வராசாரியார் இலங்கையின் சூரிய உதயத்தைக் கொண்டும் நேரத்தைக் கணித்தார்.
- சோதிட சிந்தனை வளர்ச்சிக்கு இந்து வானியலே அடிப்படையாகும்.

**1. சோதிடம் என்பதன் பொருளைத் தெளிவுபடுத்துக.**

- வடமொழியில் ''ஜயோதிசம்'' எனப்படுகிறது.
- ஜ்யோதிசம் என்பதன் பொருள் ⟶ ஒளியுடைய சாத்திரம்
- ஜ்யோதிகம் ⟶ ஞானத்தை அல்லது அறிவைத் தரும் நூல்
  நட்சத்திரங்களின் தூதுச் செய்தி

**2. சோதிடக் கலைக்கு அடிப்படையாக அமைந்தவை எவை எனக் கூறுக.**

- சோதிடத்தின் அடிப்படையாக அமைந்தது வானியல் அறிவியற் சிந்தனை ஆகும். சோதிடமும் வானியலும் ஒன்றையொன்று முரண்படாத தன்மையைக் கொண்டதாகும்.
- அறிவியலும் நம்பிக்கையும் வானியல் நிகழும் நிகழ்வுகள், பூமியில் நிகழும் கால மாற்றங்கள் என்பவற்றில் மக்கள் கொண்ட நம்பிக்கைகள்
- வானியல்படி அமைகின்ற கோள்களின் நிலையைச் சார்ந்துள்ளது.
- சூரியன், சந்திரன், நாள், சந்திரமாதம், சூரிய வருடம், ஆறு காலங்கள், 12 மாதங்கள், 27 நட்சத்திரங்கள், யுகங்கள், சதுர்யுகங்கள் பற்றிய குறிப்புக்கள் சோதிடக்கலைக்கு அடிப்படையாக அமைந்துள்ளன.
- பண்டைய வானியல் கோட்பாடுகளான பிதாஹ கோட்பாடு, புளிஷ கோட்பாடு, சூரியக்கோட்பாடு
- இயற்கை இயக்கங்கள், நட்சத்திரங்களின் இருப்புக்கள் என்பவற்றின் தொடர்புகள் மானிட வாழ்வில் ஏற்படும் தீமைகளிலிருந்து தப்பி நன்மையடைய எடுத்த முயற்சியின் விளைவாகத் தோற்றம் பெற்றது சோதிடவியல் ஆகும்.

- வானியலாளர் பெற்றிருந்த வானசாத்திர அறிவும் கணிதப் புலமையும் பஞ்சாங்கங்களைக் கணித்து சோதிடத்தை விருத்தி செய்ய உதவின.

**3. இதிகாச புராணங்களில் சோதிடத்தின் செல்வாக்குக் காணப்படுகிறது என்பதற்கான உதாரணங்களைக் கூறுக.**

- நகுல, சகாதேவர் சோதிட வல்லுநராக இருந்தமை
- இராமனது பட்டாபிசேகத்திற்கு நாள் குறித்தமை
- கிருஷ்ணபரமாத்மா சோதிடத்தில் கவனம் செலுத்தியமை
- தேவர்கள், அசுரர்கள் சோதிட சிந்தனைகளை முன்னிறுத்திச் செயற்பட்ட சம்பவங்கள்
- அரண்மனைகளில் சோதிடர் செல்வாக்கு இருந்தமை
- பிருது மன்னரின் சோதிடரான கார்க என்பவர் பற்றிய செய்திகள் காணப்படுகின்றமை

**4. பிருது மன்னரின் சோதிடரான "கார்க" பற்றிய தகவல்களைத் தருக.**

- காலம் பற்றிய சிறந்த அறிவைப் பெற்றிருந்தார் என்று அறியப்படுகிறது.
- நட்சத்திரங்கள் பற்றிய சாஸ்திரத்தில் சிறந்த புலமை பெற்றிருந்தார்.
- கால ஞானம், காலம் பற்றிய அறிவியல் நூல் இவருடையது என அறியப்படுகிறது.
- விஸ்ணுபுராணத்தின்படி மாமுனிவராகிய கார்கசேஷ என்பவரிடமிருந்து வானியல் பற்றிய அறிவையும் கிரகங்கள் பற்றிய விடயங்களையும் அறிந்து கொண்டனர் என்றும் குறிப்பிடப்படுகிறது.

**5. சோதிட நூல்களைக் குறிப்பிடுக.**

- பதினெண்பத்ததிகள்
  (சூரியன், பிரமன், வியாசகர், நாரதர் பராசரர், அத்திரி உரோமர், பிருகு, சனகர், யவனர், காசிபர், கார்சியர், மனு, ளைனகர், வசிட்டர், ஆங்கீரசர், அகஸ்தியர், கௌசிகர் ஆகியோரால் இயற்றப்பட்டது)
- பிருகத்ஜாதகம், பிருகத் யாத்திரை, பிருகத் விளக்கம், பிருகத் சம்ஹிதை, பஞ்ச சித்தாந்திகா, லகுஜாதகம்)
  (வராஹமிகிரர் என்பவரால் இயற்றப்பட்டது)
- சாத காலங்காரம், சாதக சிந்தாமணி, குமார சுவாமியம், நாரதர் ஜோதிடம், கார்கியர் சோதிடம், மாணிக்கக் கணித சோதிட முருக கேசரம், நந்தி வாக்கியம், வராஹர் ஹோரா சாஸ்திரம், அகத்தியர் காண்டம், கௌசிக நாடி, கௌமார நாடி, சுக்கிநாடி, காகபுகண்டர்நாடி, துருவநாடி, சப்தரிஷிநாடி, நந்தி நாடி, மார்க்கண்டநாடி
- ஈழத்தில் சரசோதிமாலை, செகராஜசேகர மாலை, அல்மெனெக், வாக்கிய பஞ்சாங்கம், திருக்கணித பஞ்சாகம், சந்தான தீபிகை, சந்தான தீபிகை, வான சேகர சோடச பாவனா சோதிடம் என்னும் இலகு சாதகம், சந்தானமணி பரகிதம் விதானமாலை, சாதக பாஸ்கரன்

**6. தமிழ் நாட்டில் வானியலும் சோதிடமும் பெற்ற முக்கியத்துவத்தை விளக்குக.**

- சங்க இலக்கியங்களில் வானியல், சோதிடம் பற்றிப் புலவர்கள் பாடியுள்ளனர்.
- வானியல், சோதிடம் கூறும் காலக்கூறுகள் பற்றி
- ஞாயிறானது மேடராசி தொடங்க இராசி தோறும் பெயர்ந்து செல்வதை நக்கீரர் நெடுநல்வாடை நூலில் குறிப்பிட்டுள்ளார்.

- இராசியின் பெயர், அதில் ஞாயிறு நின்ற நிலை, வெள்ளிக் கோள் நிலை, நாண்மீன்கள் எழுதுவதும், அமர்வதும் ஏரிமீன் விழுதல் - புறநானூறு 229 – கடலூர் கிழார்.
- உறையூர் முதுகண்ணன் சாத்தர்னாரின் புறநானூற்றுச் செய்யுளில் காணப்படும் செய்திகள்
- முல்லைப்பாட்டில் காலத்தை அளவிடும் கருவியான "கன்னல்" என்னும் நாளிகை வீட்டில் பற்றிய அறிந்திருந்தனர்.
- சங்க காலத் தமிழர்கள் கி.பி 3ம் நூற்றாண்டுகளுக்கு முன்னரே
  - பன்னிரண்டு இராசிகள்
  - கோள்கள், நாண்மீன்கள்
  - கோள்கள் திரிதல், புகைமீன் வீழ்தல், நாண்மீன் ஒவ்வொன்றுடனும் நிலாக்கூடி வருவதால் ஏற்படும் விளைவுகள்

  என்பவற்றின் செயற்பாடுகள் பற்றி அறிந்திருந்தனர்.
- வானத்தில் இராசி தோறும் ஞாயிறு பெயர்ந்து செல்லுதல், அங்கு ஒரு குறிப்பிட்ட வட்டமான வழியில் சுற்றி வருதல், காற்று இயங்குதல், ஆகாயம் நிலைத்து நிற்றல், சில கணிகள் இருக்கும் இடத்திலிருந்து கோள்களைத் துல்லியமாகக் கணிக்கும் ஆற்றல், என்பவற்றை அறியும் ஆற்றல் உடையவர்களாகக் காணப்பட்டனர்.
- கோள்களின் இயக்கங்களைக் கணித்து எதிர்காலத்தில் நடக்கப் போவது பற்றி முன்னரே கூறும் ஆற்றல் வாய்ந்தவன் கணி அல்லது கணியன் எனப்பட்டனர்.
- கணிகளின் தலைவன் பெருங்கணியன் எனப்பட்டான்.
- கணியன் பூங்குன்றனார் சோதிடக் கலையில் வல்லுனராக விளக்கினார்.
- பண்டைத் தமிழர் பின்வருமாறு வழங்கினர்.
  - செவ்வண்ணக்கோள் - செவ்வாய்
  - பொன்வண்ணக்கோள் - வியாழன்
  - வெண்ணிறக் கோள் - வெள்ளி
  - நீல வண்ணக்கோள் - நீலன்காரி
- பபிலோனியா, சுமேரியா, எகிப்து ஆகிய நாடுகளுக்கிடையே கடல் வணிகத்தில் ஈடுபட்ட பண்டைத் தமிழர் வடமீன் வெள்ளி, வியாழன், செவ்வாய் ஆகியவற்றின் வான நிலையைக் கண்டே காலத்தையும் திசையையும் கணித்து மரக்கலம் ஓட்டினர்.
- திருக்குறள் (சங்கமருவியகாலம்) – ஏழநாள் கால அளவாகிய வாரத்தைப் பற்றிய குறிப்பு உண்டு.
- பல்லவர் காலம் - கி.பி 7ம் நூற்றாண்டு – ஏழு கிழமைகளின் பெயர்களையும் வைத்துப் பதிகம் பாடியுள்ளார்.
- தமிழரின் ஆண்டானது கதிரவனின் செலவைக் கணிப்பிட்டு ஓராண்டில் 12 திங்கள் கணிப்பிடப்பட்டது.
  - விசாகத்தில் சந்திரன் முழுமதியாகும் மாதத்துக்கு வைகாசி என்று பெயர்
- சோழர் காலத்தில் சோதிட விற்பன்னர்கள் அரச சபையை அலங்கரித்திருந்தனர்.
  - இராஜராஜ சோழன் பிறந்த நாளை சோதிடர் கணிப்பீட்டின் அடிப்படையில் கொண்டாடினார்.
  - குழந்தைகளின் சாதகம் கணிப்பிடப்பட்டது.
- கி.பி 17ஆம் நூற்றாண்டு – சித்தர்களின் பெயரால் பல்வேறு சோதிட நூல்கள் இயற்றப்பட்டன.
  - கௌஷீக நாடி, கௌமாரநாடி, சுக்கிரநாடி, காகபுகண்பா நாடி, துருவநாடி, சப்தரிஷிநாடி, நந்திநாடி, மார்க்கண்ட நாடி
- கைரேகைகள் சாதகக் குறிப்பைக் கொண்டு ஒருவருடைய வாழ்க்கையின் முக்கால நிகழ்ச்சிகளையும் நாடிகள் எடுத்துக் கூறுகின்றன. (சாதகளின் பெயர், பெற்றோர் பெயர்,

பிறந்த ஊர், பெற்ற கல்வி, தொழில் அகிய விடயங்களை நாடி சோதிடம் எடுத்துக் கூறுகின்றது)

7. **ஈழத்தின் சோதிடக்கலை பற்றிய தகவல்களை விளக்குக.**
   - **ஈழத்தில் ஆரியச் சக்கரவர்த்திகளின் காலத்தில் சோதிட நூல்கள் பல எழுந்தன.**
     சரசோதிமாலை / செகராசசேகரமாலை / சந்தான தீபிகை / வானசேகர சோடசபாவனா சோதிடம் / சந்தானமணி / பரகிதம் / விதானமாலை / சாதக பாஸ்கரன்

   - **மர சோதிமாலை**
     - இலங்கையில் தோன்றிய முதலாவது தமிழ் இலக்கியம்
     - தம்பதெனியாவை இராசதானியாக் கொண்டு அரசு செலுத்திய பராக்கிரமபாகு மன்னரின் அவைக்களப்புலவராகிய போசராச பாண்டிதர் (தேனுமரப்பொருள்) என்பவரால் இயற்றப்பட்டது (கி.பி – 1310)
     - சோடக கருமப்படலம் தொடக்கம் நட்சத்திர தெகைப்படலம் வரை 12 படலங்களையும் 934 செய்யுள்களையும் கொண்டது.
     - போசராச பண்டிதர் ஓர் அந்தணர் இவரது தந்தை சரசோதி, தந்தையின் பெயரை ஓட்டியே இப்பெயர் இடப்பட்டது.
     - கால நியதி, அக்கினி, ஆதனம், நெல்விதைத்தல், ஆயுர்வேதம், குணாதீதம், கருமம் செய்தல், தொழில் தொடங்குதல், யாத்திரை செய்தல், வீடு, குடும்பம் முதலிய அம்சங்கள், பலன்கள் என்பவற்றை ஆராய்ந்து சொல்கின்றது.
     - மனை செய்யுள் படலம் வீடமைக்கும் முறை பற்றி விபரிக்கிறது.

   - **செகராஜசேகர மாலை**
     - 1380 நல்லூர் செகராசசேகர மன்னன் ஆதரவுடன் சோமசன்மா என்பவரால் எழுதப்பட்டது.
     - 9 படலங்கள் - 290 விருத்தங்கள்
     - காசிபர், வசிட்டர், அத்திரிபைலர், கௌதமர், சிறுசீகர் முதலிய முனிவர்களால் சொல்லப்பட்ட வடமொழிச் சோதிட நூல்களின் பொருளை உடையதென இதன் பாயிரவியல் கூறுகின்றது.
     - வியாதி ஏற்படும் வகை, உடல்நிலை வேறுபாடுகள், சலம், மலம் பற்றிய பகுப்பு, உணவு வகை, நாடி விதி, சுரவிதி, சன்னிவிதி, மூல வியாதி, விக்கல், வாதம், கசரோகம், குட்ட ரோகம், கரப்பன், வலி, வயிற்று நோய்கள், நீரிழிவு, முதுகுப்பிளவை, பித்தம் போன்றவற்றின் தன்மைகள் கூறப்பட்டுள்ளன.

   - **சந்தான தீபிகை**
     - கி.பி 1713 ஒல்லாந்தர் ஆட்சிக்காலம் - அராலி இராமலிங்க முனிவரால் இயற்றப்பட்டது.
     - சந்தான விருத்திக்கான சோதிட விடயங்கள்
     - பஞ்சாயுதம் தரித்தல், கர்ண வேதனம், அரைஞான் தயாரித்தல், சௌச கருமம், வித்தியாரம்பம் போன்ற விடயங்கள் கூறப்பட்டுள்ளன.
   - 1816 – அமெரிக்க மிஷனரி – அல்மனெக்
   - கி.பி – 1929 – வான சேகர சோடச பாவனா சோதிடம் (இலகு சாதகம்)
     - அம்பலவாணபிள்ளை இடைக்காடர் என்பவரால் இயற்றப்பட்டது.
     - கிரகசாந்திக் கருமங்கள், திசைகளின் கால அளவை, திரிகோணம் / கேந்திரம், விக்கரகம், சட்டவர்க்கம், அம்டவர்க்கம் விந்துபாவம் போன்ற விடயங்கள்.
   - இருபதாம் நூற்றாண்டு – சபாபதி சோதிடரால் இயற்றப்பட்ட ‘‘சந்தானமணி’’
   - சந்தான விருத்திக்கான நல்வழிமுறைகள் கூறப்பட்டுள்ளன.

- பரகிதம், விதானமாலை சாதக பாஸ்கரன் ஆகிய சோதிட நூல்களும் எழுந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.
- வாக்கிய பஞ்சாங்கம், திருக்கணித பஞ்சாகம்